33°/29°

# உதயன்

வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

பக்கம் 24 | சுடர் 28 | கதிர் 148 | வள்ளுவர் ஆண்டு 2044 | சித்திரை 10, செவ்வாய் 23.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# நாட்டை முன்னேற்றுவதற்கு அனைவரும் இணைவோம்

## யாழ்ப்பாணத்தில் கோத்தபாய நேற்று விடுத்தார் அறை கூவல்



யாழ்ப்பாணம்,ஏப் 23

பல தரப்பட்ட மொழிகளைப் பேசுவோரும், பல்வேறு மதங்களைப் பின்பற்றுவோரும் நாட்டின் முன்னேற்றத்துக்காக ஒன்றிணைய வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து அறை கூவல் விடுத்தார்.

வரணியில் 522 ஆவது பிரிகேட் படைமுகாமில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு தனி நபரது உழைப்பின் மூலம் இந்த மாணவர்களுக்கு இன்று உதவிகள் வழங்கப்படுகின்றன. தென் பகுதியில் பிறந்து கனடாவில் வசிக்கும் ஒருவர் வடபகுதி பிள்ளைகளுக்கு உதவியுள்ளார்.


**படையினர் கோரிக்கை**

படையினரின் கோரிக்கைக்குச் செவிசாய்த்து அவர் உதவி செய்தமையையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இங்குள்ள சிறுமிகளின் நடனம் உண்மையில் மிக அழகாக இருந்தது. தெற்கிலும் நான் இவ்வாறான நடனங்களை கண்டுகளித்திருக்கிறேன். எமது கலாசாரம் மேலும் வளர்ச்சியடைய வேண்டுமாயின் பல தரப்பட்ட கலாசாரங்களும் நாட்டின் கலாசாரத்துடன் ஒன்றிணைய வேண்டும். அப்போது தான் சிறந்த கலாசாரம் உருவாக முடியும்.

**ஒன்றிணையுங்கள்**

ஒரே நாட்டில் வாழும் நாம் பலதரப்பட்ட மொழிகளைப் பேசினாலும், பலதரப்பட்ட மதங்களை பின்பற்றினாலும் எங்களுக்கென பலதரப்பட்ட கலாசார நடைமுறைகள் இருப்பினும் இவை யாவும் ஒன்றிணைந்தால் தான் எமது நாட்டை நாம் முன்னேற்றகரமாக மாற்ற முடியும்- என்றார். (த-5)

## இந்தியாவுடன் முறுகல் நிலை கிடையாது



கொழும்பு,ஏப்.23

இலங்கை அரசுக்கு எதிராக தமிழ்நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்று வந்தாலும் இந்திய அரசுடன் இலங்கைக்கு எதுவித முறுகல் நிலையும் கிடையாது என்று இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அரசியல்வாதிகளை இலங்கைக்கு வந்து நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு இலங்கை அரசு எப்போதுமே அழைப்பு விடுத்துள்ளது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

சில அரசியல்வாதிகள் ஏற்கனவே இங்கு வந்து நிலைமைகளைப் பார்த்திருக்கிறார்கள். இருந்தாலும் தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன என்றார் ஜனாதிபதி.

ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் தொடர்ந்தாலும் இந்தியாவுடன் எமது உறவுகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்று அவர் கூறினார். (த-ப)

## மின் கட்டண உயர்வு தற்காலிகமானது



கொழும்பு,ஏப்.23

மின்சாரக் கட்டண உயர்வு ஒரு தற்காலிக செயற்பாடு தான். இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை சமாளிப்பதற்காகவே இந்த ஏற்பாடு என்று தெரிவித்துள்ளார் மின் சக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசிய அமைச்சர் பின்னர் ஊடகவியலாளர்களிடம் இதைத் தெரிவித்தார். சம்பூர் அனல் மின் ஆலையும் நுரைச்சோலை மின்சார ஆலையும் தேசிய மின் வழங்கும் சேவைக்கு மின்சாரத்தை வழங்கும் நிலை ஏற்பட்டதன் பின்னர் ஜனவரியிலிருந்து பொது மக்களுக்கு சலுகைகள் வழங்கப்படும் என்றார் அமைச்சர்.

அரசு நிலக்கரி மின் ஆலைத் திட்டங்களில் இறங்குவதில்லை எனவும் அதற்கும் பதிலாகத் தனியாரிடமிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்குவது என்றும் 1993 ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டது. அதுதான் இன்றைய மின்சார சிக்கலுக்குக் காரணமாகவுள்ளது என்றும் அமைச்சர் கூறினார். (த-ப)



நைஜீரியத் தாக்குதலில் 185 பொதுமக்கள் சாவு



மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு ஆதரவளிக்கிறது இந்திய அரசு



வெற்றிக்குக் காரணம் ரிச்சர்ட்ஸ்

# 6, 381 ஏக்கர் நிலம் படைகளால் பறிப்பு

## உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் நேற்று ஒட்டப்பட்டன



யாழ்ப்பாணம், ஏப்.23

வலி. வடக்கு, வலி.கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தமிழ் மக்களின் 6 ஆயிரத்து 381 ஏக்கர் உறுதிக் காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்படவுள்ளன. இதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் நேற்று ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தினால், காணி சுவீகரிப்பு அதிகாரி ஆ.சிவசுவாமியின் கையொப்பத்துடன், காணி எடுத்தல் சட்டத்தின் (அத் 460) 2 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோலை 8.30 மணியளவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலிருந்து புறப்பட்ட கிராம சேவையாளர்கள் மற்றும் பட்டதாரி பயிலுநர்கள், மாவிட்டபுரம் சந்திக்கு அண்மையிலுள்ள உயர் பாதுகாப்பு வலய எல்லையில் வைத்து இராணுவ வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

இவர்கள் காணிகள் சுவீகரிக்கப்படுவது தொடர்பான அறிவித்தல்களை அந்தந்த இடங்களில் ஒட்டினார்கள்.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் தலைமையகத்துக்கு பலாலி, காங்கேசன்துறை ஆகிய உயர் பாதுகாப்பு வலயப் பகுதியை முறைப்படி கையளிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## ‘உதயன்’ தாக்குதல்; விசாரணை தீவிரம்

### அறிக்கை கிடைத்ததும் வெளியிடுவேன் என்கிறார் ஜனாதிபதி



கொழும்பு,ஏப்.23

‘உதயன்’ தாக்குதல் குறித்து விசாரணைகள் நடக்கின்றன. விசாரணை அறிக்கை கிடைத்ததும் நான் அதனை தெரியப்படுத்துவேன். சாட்சிகள் இருந்தால் பொலிஸாருக்கு அறிவிக்கலாம். சம்பந்தப்பட்டவர்கள் நிரூபணமானால் கைதுசெய்வோம் என்று ஜனாதிபதி மஹிந்த நேற்றுக் கூறினார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நேற்றுக்காலை பத்திரிகை ஆசிரியர்மாரைச் சந்தித்தபோது ‘உதயன்’ தாக்குதல் குறித்து கேள்வியெழுப்பப்பட்டது. இந்தத் தாக்குதல் உள்வீட்டு வேலையென தேசிய பாதுகாப்பு மத்திய நிலையத்தின் பேச்சாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்திருக்கிறாரே என்று கேட்கப்பட்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, ஹுலுகல்ல அரசின் பேச்சாளர் அல்லர். யாராவது ஒருவர் கூறியதை வைத்துக் கொண்டு அவர் அப்படி கூறியிருக்கலாம். அது அரசின் கருத்தல்ல. எவ்வாறாயினும், ‘உதயன்’ தாக்குதல் குறித்து விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றார். (த-சி)

## இந்திய மீனவர்களிடம் மனிதாபிமானம் காட்டுக

### இலங்கையிடம் அவசர கோரிக்கை



புதுடில்லி, ஏப்.23

இந்திய மீனவர்களிடம் இலங்கைக் கடற்படை மனிதாபிமானத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்று இந்தியபாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்மீது இலங்கைக் கடற்படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்வதுடன் அவர்களைக் கைது செய்து மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவது தொடர்பாக நேற்று மக்கள் அவையில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி: பக்.02

## காணி சுவீகரிப்பை நிறுத்தி மக்களைக் குடியமர்த்துக

### காணி அமைச்சரிடம் மாவை கோரிக்கை



யாழ்ப்பாணம்,ஏப்.23

வலி. வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் காணிகள் சுவீகரிக்கப்படுவதை உடனடியாக நிறுத்தி அந்தப் பகுதி மக்களை அவர்களின் சொந்த நிலங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர். மாவை சேனாதிராசா கோரியுள்ளார்.

வலி.வடக்கில் நேற்று ஒட்டப்பட்ட காணி சுவீகரிப்பு அறிவித்தல் தங்களின் பணிப்புரைக்கு அமையவே ஒட்டப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

எனவே இந்த விடயத்தில் தாங்கள் உடினடியாக கவனம்செலுத்தி மேற்படி அறிவித்தலை ரத்துச் செய்து மக்களை அங்கு குடியமர்த்துமாறு காணி அமைச்சரிடம் மாவை கடிதம் மூலம் கோரியுள்ளார். (த-16)

# ஆட்பதிவு திணைக்களத்தின் அலுவலகம் வவுனியாவில்

## வடக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தியாக்க

வவுனியா,ஏப்.23



ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐ.நா அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் நீதி நியாயத்தைச் சமமாக அணுகும் கருத்திட்டத்தின் கீழ் இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் அலுவலகங்களை நிறுவுவதன் மூலம் கஷ்டப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இலகுவாகச் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் அடையாள அட்டைகளை விரைவாக பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திறப்பு விழாவில் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஆர். எம்.எஸ். சரத்குமார, தேசிய மொழிகள் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் திருமதி மல்காந்தி விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ். ஹெட்டியா ராச்சி, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், வடமாகாண ஆளுநரின் பிராந்திய இணைப்பாளர் எம்.முகைதீன், வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் இணைப்பாளர் முத்து. முகமது ஆகியோர் கலந்து கொண்டனர்.

42 வருடங்களின் பின்னர் முதன்முதலாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் மாகாணக் காரியாலயம் வடக்கில் திறந்து வைக்கப்பட் டுள்ளது.

வவுனியா,யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் இந்த அலுவலகத்தின் ஊடாக உடனடியாக கொழும்புக்கு அனுப்பப்பட்டு விரைவாக அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த 402)

## வலி.வடக்கு மக்களை இன்று கூடுமாறு அழைப்பு

வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகளும் சுவீகரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் நேற்று ஒட்டப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதி மக்களை, மல்லாகத்தில் உள்ள வலி. வடக்கு பிரதேச சபையில் ஒன்று கூடுமாறு தவிசாளர் சோ.சுகிர்தன் அறிவித்துள்ளார்.

வலி.வடக்கில் விடுவிக்கப்படாத 24 கிராம சேவகர் பிரிவுகளையும் முற்று முழுதாகப் படைத்தரப்பு சுவீகரிப்பதற்கான அறிவித்தல்கள் உயர்பாதுகாப்புப் பகுதியினுள் ஒட்டப்பட்டுள்ளன. இதனால் விடுவிக்கப்படாத 24 கிராமசேவகர் பிரிவுகளையும் சேர்ந்த மக்களை உடனடியாக இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு மல்லாகத்தில் அமைந்துள்ள வலி.வடக்கு பிரதேச சபையில் ஒன்று கூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட் டுள் ளது.

காணி சுவீகரிப்புக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இந்த கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதால் சகல மக்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-5)

## விபத்துகளில் காயமுற்றோர் சிகிச்சை பயனின்றிச் சாவு

யாழ்ப்பாணம்,ஏப்.23

வாகன விபத்துக்களில் சிக்கி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு குடும்பஸ்தர்கள் உயிரிழந்துள்ளனர். விபத்தினால் ஒருவருக்கு தலை வெடித்ததோடு மற்றையவர் உடலின் இடதுபாகமும் இடுப்புக்கு கீழும் உணர்வற்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ். மடத்தடியில் பயணிகள் பஸ் சைக்கிளில் சென்றவரை மோதியதில் படுகாயமடைந்த அவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார். குருநகர் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த ரட்ணவேல் துரைறோ (வயது-32) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே விபத்தினால் தலை வெடித்து இரத்தக்கசிவினால் உயிரிழந்தார்.

யாழ்.கச்சேரி பயணிகள் போக்குவரத்து பஸ்ஸே விபத்துக்குக் காரணம் என்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

விபத்தையடுத்து பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் பஸ்ஸை விட்டுத் தப்பியோடிவிட்டனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

மற்றைய விபத்தில் உசன் மிருசுவிலைச் சேர்ந்த விக்ரர் ஜெயக்குமார் (வயது-36) என்பவர் காயமடைந்து வைத்தியசாலையில் இருந்த வேளை நேற்றுமுன்தினம் உயிரிழந்தார் . இவரே உடல் உறுப்புக்கள் இயங்காத நிலையிலிருந்தார். இந்த விபத்து மீசாலையில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது. கூலர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதியதினால் இந்த விபத்து ஏற்பட்டது. விசாரணையின் பின்னர் இரண்டு சடலங்களும் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

(த-4)

## கோத்தாவுக்காக 3 மணிநேரம் காத்திருந்தனர் மாணவர்கள்



யாழ்ப்பாணம்,ஏப்.23

பாதுகாப்புச் செயலர் பங்கு பற்றிய இரு மணி நேர நிகழ்வுக்காகப் பாடசாலை மாணவர்கள் மூன்று மணிநேரம் காத்திருக்க வைக்கப்பட்டனர்.

522 பிரிகேட்டுக்குட்பட்ட 24 பாடசாலைகளைச் சேர்ந்த ஆயிரத்து 500 மாணவர்களுக்குச் சீருடைகளும் நூறு ஆசிரியர்களுக்கும் , 24 அதிபர்களுக்கு சேர்ட், சாறி என்பனவும் வழங்கும் நிகழ்வு 522 பிரிக்கேட் தலைமையகமான வரணியில் நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது.

கனடாவைச் சேர்ந்த தொழிலதிபரான மொரிஸ் மற்றும் தென்னிலங்கை வர்த்தகர்களான அஜித்குமார, றொபேட் உபுல், அநுர தர்மரட்ன பத்திரன ஆகிய நான்கு பேரின் உதவியுடன் மேற்படி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகிய இந்த நிகழ்வுக்கு உதவிப் பொருள்களைப் பெறும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் மதியம் 12 மணிக்கே அழைத்து வரப்பட்டனர்.

இரண்டாம் தவணை ஆரம்ப நாளான மாணவர்களை இராணுவத்தினர் அழைத்து வந்திருந்தனர். 12 மணிக்கு அவர்கள் அழைத்து வரப்பட்ட போதும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் பிற்பகல் 3 மணிக்கே நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்.

மாணவர்கள் உதவிப் பொருள்கள் பெற மேடைக்குச் செல்லும் போது வாசலில் வைத்து சிங்களம் கற்பிக்கும் சிங்கள ஆசிர்யர் ஒருவர் கோத்தபாயவின் காலில் விழுந்து வணங்கி உதவிப் பொருள்களைப் பெறுமாறு கூறியனுப்பினார். இருப்பினும் ஓரிரு மாணவர்கள் தவிர ஏனையோர் காலில் விழுந்து வணங்கவில்லை.

இறுதியில் நாவற்குழி மகா வித்தியாலயத் தமிழ் மாணவர்கள் சிங்களத்தில் தேசிய கீதம் பாடினர். (த-5)

## காணி சுவீகரிப்பு அறிவிப்பை மக்கள் பார்வையிட வசதி

யாழ்ப்பாணம், ஏப். 23

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் ஒட்டப்பட்டுள்ள காணி சுவீகரிப்பு அறிவித்தல்களை மக்கள் பார்வையிடுவதற்குரிய ஒழுங்குகளை படையினர் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுவீகரிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களை இனங்காண்பதற்காக மக்களை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் அழைத்துச் செல்ல படையினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வலி. வடக்கின் விடுவிக்கப்படாத 24 கிராம சேவையாளர் பிரிவுகள் மற்றும் வலி. கிழக்கின் விடுவிக்கப்படாத 2 கிராம சேவையாளர் பிரிவுகள் என்பன படையினரால் முழுமையாகச் சுவீகரிக்கப்படவுள்ளன.

இதற்கான அறிவித்தல்கள் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் நேற்று திங்கட் கிழமை ஒட்டப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயத்தின் பல பிரதேசங்களிலும் இந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே ஒரு சில இடங்களிலும் இந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

**உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே ஒரு சில இடங்களிலும் இந்த அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.**

உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் ஒட்டப்பட்ட அறிவித்தல்களை மக்கள் பார்வையிட முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் மக்களை செல்ல அனுமதித்து, அதனூடாக காணி உரிமையாளர்களை இனங் கண்டு காணிகள் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக மக்களை உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அனுமதிப்பது தொடர்பில் விரைவில் படையினர் உத்தியோகபூர்வ அறிவிப்புக்களை வெளியிடவுள்ளதாக நம்பனரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

## பாதுகாப்பு வலயம் உள்ளமை காணி சுவீகரிப்பில் நிரூபணம்

யாழ்ப்பாணம்,ஏப்.23

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லையென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திரும்பத் திரும்ப கூறிவரும் நிலையில், வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் இருப்பதாக யாழ். மாவட்ட காணி மற்றும் கா அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள காணி சுவீகரிப்பு அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு மற்றும் வலி கிழக்குப் பிரதேசத்தில் இராணுவத்தினர் தற்போது கையகப்படுத்தி வைத்துள்ள முழுப்பிரதேசத்தையும் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

காங்கேசன்துறை மேற்கு (ஜே/233), காங்கேசன் துறை மத்தி (ஜே/234), வீமன், காமம் தெற்கு (ஜே/237), தையிட்டி தெற்கு ( ஜே/250), பலாலி தெற்கு (ஜே/256), ஒட்டகப்புலம் (ஜே/252), வளலாய் (ஜே/284) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை எல்லையாகக் கொண்டு 6 ஆயிரத்து 38 ஏக்கர் 38.97 ரூபா அளவு கொண்ட முழு நிலப்பரப்பும் சுவீகரிக்கப்படவுள்ளது.

1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி சுவீகரிப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் முதலாம் உப பிரிவுக்கு அமைவாகவே காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ்.பாதுகாப்பு படைகளின் தலைமையகம், பலாலி- காங்கேசன்துறை பகுதிகளில் உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகியவற்றை முறைப்படி கையளிப்பதற்காகவே இந்த இடம் சுவீகரிக்கப்படுகின்றது.

சுவீகரிக்கப்படும் காணிகளுக்குரிய உரிமையாளர்களை இனங்காண முடியவில்லை என்று அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டக் காணி மற்றும் யாணி அபிவிருத்தி அமைச்சின் காணி சுவீகரிப்பு அதிகாரி ஆ.சிவசுவாமியின் கையொப்பத்துடன் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தல்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் சுவீகரிக்கப்படவுள்ளதாகக் தெரிவிக்கப்பட்ட போதும் நேற்று முதல் குறித்த சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டுள்ளன.

(த-5)

## காணி சுவீகரிப்பு அறிவித்தலை ஒட்ட முடியாது திணறிய அலுவலர்

யாழ்ப்பாணம்,ஏப் 23

உயர் பதுகாப்பு வலயத்தினுள் சென்று கிராம சேவையாளர்களும் பட்டதாரி பயிலுநர்களும் காணி சுவீகரிப்பு அறிவித்தல்களை எங்கே ஒட்டுவது என்று தெரியாமல் திணரினர் என்று தெரியவருகிறது.

வலி. வடக்கின் 24 கிராம சேவையாளர் பிரிவுகளையும் சுவீகரிக்கும் பொருட்டு காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டும்பணி நேற்றுக் காலை அங்கு ஆரம்பமானது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வைத்து, விடுவிக்கப்பட்டாத 24 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குரிய கிராம சேவகர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுநர்களிடம் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டன.

அதன் பின்னர் கிராம சேவையாளர்களும், பட்டதாரி பயிலுனர்களும் தமது வாகனங்களில் உயர் பாதுகாப்பு வலய எல்லை வரை சென்றனர். மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் உயர் பாதுகாப்பு வலய எல்லை ஆரம்பமாகின்றது.

அங்கு சென்ற அரச ஊழியர்கள் சோதனையிடப் பட்ட பின்னர் அவர்களின் கைத்தொலைபேசிகள் படையினரால் பெறப்பட்டன. தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைப் பதிவு செய்த பின்னரே அவர்களைத் தமது வாகனத்தில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியினுள் ஏற்றிச்சென்றனர் படையினர்.

காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் அண்ணளவாக 3 ஆயிரம் வரையில் அச்சிடப்பட்டு கிராம சேவையாளர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தன. உயர்பாதுகாப்பு வலயத்தினுள் சென்ற கிராம அலுவலர்கள் அவற்றை எங்கு ஒட்டுவதெனத் தெரியாமல் தடுமாறினர்.

பின்னர் இராணுவத்தினரின் அறிவுறுத்தலுடன் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன. பலாலி விமான நிலையம், படைத்தலைமையகம், மயிலிட்டி துறைமுகப் பகுதி என்பவற்றிலும் காணி சுவீகரிப்பு அறிவுறுத்தல்கள் ஒட்டப்பட்டன. (த-5)

## இந்திய மீனவர்களிடம்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

மீனவர்கள் பாதிக்கப்படுவது தொடர்பாக மத்திய அமைச்சு அவ்வப்போது இலங்கை அரசின் கவனத்துக்கு கொண்டு வருகிறது. ஆனால் மீனவர்கள் குறிப்பிட்ட கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும் போது இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். இது தொடர்பாகவும் இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட உடன்படிக்கைகளின் படி மீனவர்கள் மீதோ அவர்களின் படகுகள் மீதோ தாக்குதல் நடத்தக் கூடாது என்பது கண்டிப்புடன் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அனால் இந்த உடன்படிக்கையையும் மீறி இலங்கைக் கடற்படையினர் மனிதாபிமானமற்ற முறையில் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். இது தொடர்பாக இலங்கை அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (த-14)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அதிகாரப் பரவலை எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாக மாறும் நிலை....

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதில், ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போல்– இல்லை, இல்லை உத்தேசிக்கப்பட்டுள்ளது போன்று– எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்த அரசு உள்ளார்ந்த ரீதியாக செயற்படுகிறதா என்பது என்னவோ சந்தேகமான ஒன்றாகவே நோக்கப்படுகிறது.

தான் வகுத்துள்ள தமிழ் மக்கள் விரோதச் செயற்பாடுகளை முற்றுமுழுதாகச் செயற்படுத்தவே அரச ஆதரவான தரப்புகள் விரும்புவதாகவே அதன் நடவடிக்கைகள், செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்றன. வடபகுதி மக்களுக்கு இன்னும் ஜனநாயக உரிமைகள் வழங்கப்படவில்லை. அரசின் அடக்குமுறைக்குள்ளேயே அவர்கள் வாழ்கின்றனர். இங்கு சுயாதீனமான சிவில் நிர்வாகம் இல்லை. அனைத்தும் இராணுவமயமாகவே உள்ளன.

இனப்பிரச்சினைக்குத் தற்போதைய மாகாணசபை முறைமை தமிழ் மக்களால் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதே உண்மை. ஆயினும் வடபகுதி மக்களின் உடனடிப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், படைத்தரப்பினரதும் ஆளுநரினதும் எதேச்சாதிகார நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்கவும் மாகாணசபை இயங்க வேண்டியது அவசியம் என்று மக்கள் உணர்கின்றனர்.

காணி சுவீகரிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்ற தனது நிகழ்ச்சிநிரல் பூர்த்தியாகும்வரை, தேர்தலை நடத்தாது இழுத்தடிக்கவே அரசினால் திட்டமிடப்பட்டது. அனைத்துலக அழுத்தம் மற்றும் ஜெனிவாத் தீர்மானம் காரணமாக எதிர்வரும் செப்ரெம்பரில் தேர்தலை நடத்தப்போவதாக அரசு அறிவித்துள்ள போதிலும் தேர்தலுக்கான திகதி இன்னும் வெளியிடப்படவில்லை.

ஆனால் போரின் பின்னரான அரசின் நிகழ்ச்சி நிரலை முடுக்கிவிடுவதற்கான அறிகுறிகள் மிக வெளிச்சமாகத் தெரிகின்றன. வலி வடக்கில் படைகளுக்குக் காணி சுவீகரிக்கும் நடவடிக்கையும் அவற்றில் ஒன்று. வடமாகாணசபை இயங்க முன்னர் அங்குள்ள 24 கிராமசேவையாளர் பிரிவுகளும் முழுமையாகப் பறிபோகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது குறித்து ஏற்கனவே இப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

வடமாகாணசபைத் தேர்தல் என்பது உண்மையில் அரசுக்கு கசப்பானதாகவே இன்னும் இருந்து வருகின்றது. தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றால் தனது திட்டம் பிசுபிசுத்துவிடும் என்று அரசு கருதுகிறது.

ஆகவே, வடமாகாணத் தேர்தலுக்கு முன் மாகாணசபை முறைமைக்கு வித்திட்ட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு ஆப்பு வைக்கும் முயற்சியில் சிங்களத் தீவிரவாத அமைப்புகள், முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. அரசின் பங்காளிகளான ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி மற்றும் கடும்போக்கு சிங்கள அமைப்புகள், சிங்களப் பேராசிரியர்கள், புத்திஜீவிகளின் உதவியுடன் அரசிடம் மகஜர் கையளிக்கவும் வடமாகாணசபைத் தேர்தல் தொடர்பாக மேதினக் கூட்டத்தில் விசேட அறிவிப்பு ஒன்றை விடுக்கவும் தீவிரம் காட்டப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்துக்கு எதிரான, மாகாணசபைகள் முறைமைக்கு எதிரான, சக்திகள் இப்போது அதிதீவிரம் காட்ட ஆரம்பித்துவிட்டன. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் ஒழிக்கப்படவேண்டும் என்று முதலில் குரல் கொடுத்து, 13 குறித்த சர்ச்சையை மிகப் பகிரங்கமாக ஆரம்பித்து வைத்தவர் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகவே சிங்களப் பேரினவாத அமைப்புகளின் இது தொடர்பான கோரிக்கை குறித்து தாமதம் காட்ட முடியாத அளவுக்கு அவற்றின் பின்னால் பலம்வாய்ந்த சக்தி ஒன்று இயங்குகிறது என்பதனை மனதில் கொள்ளாது இருக்க இயலாது.

எவ்வாறாயினும் அலரிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில், செப்ரெம்பரில் வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்று மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கூட்டிக் கழித்து, பிரித்துப் பெருக்கிப் பார்த்தால் அடுத்து வரும் ஐந்து மாதங்களும் மிகவும் முக்கிய காலப்பகுதியாக இருக்கும் என்று கொள்ளலாம். அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ஒழித்து மாகாணசபை முறைமையை முடிவுக்கு கொண்டுவர சிங்கள தேசியவாத அமைப்புகள் பெரும் போராட்டங்களை முன்னெடுக்கும் என்று நிச்சயம் நம்பலாம்.

அதேவேளை போருக்குப் பின்னரான தனது நிகழ்ச்சிநிரலை அரசு முடக்கிவிடும். வாழ்வெழுச்சி [திவிநெகும] சட்டம் ஊடாக பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டு அதிகாரமில்லாத ஒரு மாகாண சபையைக் கூட தமிழர் தரப்பிடம் வழங்கத் தயாரில்லை என்பது மேலோங்கி வளர்கிறது.

தமிழர்கள் அதிகாரப் பகிர்வை எதிர்பார்ப்பது அர்த்தமற்றது. என்பது யதார்த்தத்தை நோக்கி விரைந்து வேகவேகமாகத் தடம் பதிக்கிறது.



# வடமாகாணம் அனைத்துத் துறைகளிலும் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையில்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

முன்னொரு காலத்தில் வடமாகாணம் அனைத்துத் துறைகளிலும் முன்னிலை வகித்ததுடன் முன்மாதிரியாகவும் விளங்கியது. இன்று அனைத்துத் துறைகளிலும் பின்தங்கியே உள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2011ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சையில் வடமாகாணம் கடைசி இடத்தைப் பிடித்தது. 2012ஆம் ஆண்டு கடைசிக்கு முதலிடத்துக்கு முன்னேறியது. அதுவும் சப்பரகமுவ மாகாணத்தைவிட தசப் புள்ளிக் கணக்கில் தப்பியது. கடந்த வருடம் வடமாகாணத்தில் மன்னார் கல்வி வலயம் முதலிடம் பெற்றது. இந்த முறை யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

தரம் 5 வெட்டுப் புள்ளியை ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது வடக்கின் நிலை தெரியும்.

உயர்தரப் பரீட்சையிலும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தொகையையும் வைத்தே எத்தனையாவது இடம் என்பதைத் தீர்மானிக்க முடியும்.

இந்த வீழ்ச்சிக்கு பெற்றோர்களையும், மாணவர்களையும், அதிபர், ஆசிரியர்களையும் அதிகாரிகள் குறைசொல்கிறார்கள். முக்கிய காரணம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் திட்மிடப்படாத, கணிக்கப்படாத இடமாற்றக்கொள்கையே.

ஒரு ஆசிரியரின் பெயரை ஐந்து தடவைகள் இடமாற்றப்பட்டியலில் இட்டு அந்த ஆசிரியரின் மனதில் சலனத்தை ஏற்படுத்தினால் அவரால் எவ்வாறு கற்பிக்க முடியும்.

முறையாகத் திட்டமிடப்படாத ஆசிரிய பரவலாக்கத்தாலும் திட்டமிட்டுச் செய்யப்படுகின்ற ஆசிரிய வெளியேற்றத்தாலுமே இவ்வாறான பெறுபேற்று வீழ்ச்சி ஏற்படுகின்றது.

இதற்கு யார் பொறுப்பு? வடமாகாணக் கல்வி அபிவிருத்தி அமைச்சு மட்டத்தில் வெறும் கூட்டங்களோடு முடிவடைகின்றதே தவிர முடிவெடுக்கப்பட்ட விடயங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

கல்வி அமைச்சு ஒவ்வொரு வருடத்துக்குமான நாள் காட்டியை வருடத் தொடக்கத்திலேயே வெளியிட்டுவிடுகின்றது. அதனை வைத்துக் கொண்டே மாகாண, மாவட்ட, வலய, கோட்டமட்ட நிகழ்வுகள் நடைபெறுவது வழமை. வடமாகாணத்தில் அதுவும் யாழ். மாவட்டத்தில் மட்டும் நாள் காட்டிகளுக்கு அப்பால் முறையான திட்டமில்லாமல் பாடசாலைத் தவணை விடுமுறை, பொது விடுமுறை நாள்களில் விளையாட்டுப் போட்டிகளையும், தமிழ்தினப் போட்டிகளையும் நடத்துகின்றனர்.

பாடசாலைத் தவணை விடுமுறை என்றால் என்ன என்பதை முறையாக அறிந்திராத இவர்களுக்கு அதுதொடர்பாக செயலமர்வுகளை முதலில் நடத்தவேண்டும்.

> "கடந்த வருடம் வடமாகாணத்தில் மன்னார் கல்வி வலயம் முதலிடம் பெற்றது. இந்த முறை யாழ்ப்பாணக் கல்வி வலயம் முதலிடத்தைப் பெற்றுள்ளது"

அரச பொது விடுமுறை நாள்களில் இவற்றை நடத்துதல், தவணை விடுமுறை நாள்களில் நடத்துதல் என்பதெல்லாம் பிள்ளைகளின் மனநிலைகளைப் பாதிப்படையச் செய்யும் நடைமுறைகளாகும்.

புதுவருடப் பிறப்பு வருகின்ற சித்திரை விடுமுறைக் காலத்தில் இப்படிப் போட்டிகளை நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளதா? இதனை போட்டிக்கு முன்னர் நடைபெற்ற ஆசிரியர்களுடனான ஒன்றுகூடலில் அத்தனை ஆசிரியர்களும் எடுத்துச் சொல்லியும் அதனை ஏற்றுக் கொள்ளாமல் போட்டிகளை நடத்தி முடித்துள்ளனர்.

இவ்வாறான கலந்துரையாடலில் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் பலரும் வாய் மூடி மௌனமாக இருந்துள்ள னர் என்பதுதான் வேதனை.- என்றுள்ளது. (ம)

# சாவல்கட்டு கிராம 2 கி.மீ.வீதிக்கு ரூ.240 மில்லியன் செலவில் 'காப்பெற்'

## வடமாகாண சபை தேர்தலுக்கு முன்னர்



வலி,தென்மேற்கு, ஏப்.23

ஆனைக்கோட்டை, சாவல்கட்டு கிராமத்தில் நூறு வீட்டுத் திட்டத்தைச் சுற்றியுள்ள 2கி.மீ.நீளமான வீதி 240 மில்லியன் ரூபா செலவில் 'காப்பெற்' வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இது சம்பந்தமான மதிப்பீடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கடல் தொழில் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வரும் சாவல்கட்டு மீனவ கிராமத்தில் பல வருடங்களுக்கு முன் நூறு வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாததனால் மழை காலங்களில் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு வசிக்கும் மக்களின் நலன்கருதி வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு வலி.தென் மேற்கு பிரதேச சபையிடம் கோரியிருந்தபோதும் நிதியின்மை காரணமாக அபிவிருத்தி செய்யப்படவில்லை.

யாழ்.மாவட்ட கிராமிய கடல் தொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் என்.பொன்னம்பலத்தின் அழைப்பின் பேரில் சாவல்கட்டு மீனவ கிராமத்துக்கு வருகை தந்த கடல்தொழில் அமைச்சரும் அதிகாரிகளும் மேற்படி கிராமத்தைச் சுற்றிப் பார்த்ததுடன் அங்கு வசிக்கும் மக்களின் குறைபாடுகளையும் தேவைகளையும் கேட்டு அறிந்து கொண்டனர்.

இதன்போது நூறு வீட்டுத் திட்டத்தைச் சுற்றியுள்ள வீதிகளை அபிவிருத்தி செய்து தருமாறு சம்மேளனத் தலைவர் அமைச்சரிடம் கோரியதை அடுத்து வீதிகளை அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள அமைச்சர் இது சம்பந்தமான மதிப்பீடுகளை அனுப்பி வைக்குமாறு அங்கு சமுகமளித்திருந்த யாழ். மாவட்ட கடல்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளைப் பணித்திருந்தார். இதையடுத்து வீதியை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான மதிப்பீடு சம்பந்தப் பட்ட அதிகாரிகளினால் கடல் தொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பு மேற்படி வீதிகள் 'காப்பெற்' வீதிகளாக மாற்றியமைக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-115)

## உலக புத்தக தின நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.23

வலிதெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தின் உலக புத்தக தின நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலக மண்டபத்தில் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஷ் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகரும் சிறப்பு விருந்தினர்களாக வலி. தெற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி சு.முருகநேசன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவயோகம் செல்வவிநாயகர், வலி. மேற்கு பிரதேச சபை சுழிபுரம் பொது நூலகர் பா.விஜயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலக புத்தக தின சிறப்பு நிகழ்வுகளாக சுவடிகள் நூல்கள் கொண்ட அலங்காரப் பேழை ஊர்வலம் இலக்கிய கர்த்தாக்கள், வாசகர்கள், விருந்தினர்கள் சூழ நூலக வாசலை நோக்கி இடம் பெறவுள்ளது.

இதேவேளை, நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் உலக புத்தக தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப. வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறைப் பேராசிரியர் மா. சின்னத்தம்பி கலந்துகொள்வார்.

(ம-14-86)

# சீனாவில் தொடர் அதிர்வுகள் 1,300



சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சுமார் 1,300 தொடர் அதிர்வுகள் பதிவாகியுள்ளன. கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இதுவரை 188 பேர் உயிரிழந்துள்ளனர். 11,500 பேர் காயமடைந்தனர். ரிச்டர் அளவு கோலில் 7 புள்ளிகளாக பதிவான இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து நில அதிர்வுகள் நீடித்துக் கொண்டே இருந்தன. பல நில அதிவுகள் 5.4 என்ற ரிச்டர் அளவாக பதிவாகின. பல பகுதிகள் பயங்கரமாக ஆடிக் கொண்டே இருந்தன என்று கூறப்படுகிறது. மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து கொண்டே வரும் நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. (ற)

## விசாரணைக்காக காத்திருக்கிறது அமெ. பொலிஸ்

நியூயோர்க், ஏப்.23

பொஸ்டன் குண்டுவெடிப்புச் சம்பவ சந்தேக நபரிடம் விசாரணை நடத்துவதற்காகக் காத்திருக்கின்றோம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பொஸ்டன் மரதன் ஓட்டப் போட்டியின் போது குண்டுத் தாக்குதல் நடத்தியதாக சந்தேகிக்கப்படும் 19 வயதான டாசாகோர் டஸ்னாரேவ் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவருகிறார். சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர்,

''மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இரண்டாவது சந்தேகநபர் ஆபத்தான நிலையைக் கடந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவர் விசாரணைகளை எதிர்கொள்ளும் அளவு குணமடைந்ததன் பின்னர் விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்'' - என்று தெரிவித்தனர். (ற)

## இரு அறைகளில் மட்டும் நடமாடும் முஷாரப்

இஸ்லாமாபாத், ஏப்.23

நீதிபதிகளைப் பதவி நீக்கியமை தொடர்பான வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தற்போது இருவார கால நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.



எனினும் முஷாரப் அவருடைய பண்ணை வீட்டிலேயேயே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் வீட்டில் அவர் இரண்டு அறைகளில் மட்டுமே நடமாட முடியும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் குடும்ப உறுப்பினர்கள் வழக்கறிஞர்களைச் சந்திப்ப தற்கும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து முஷாரப் மீது பல்வேறு தொடரப்பட்ட வழக்குகள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் குறித்து சட்டத்தரணிகளுடன் ஆலோசிக்க முடியவில்லை என்று முஷாரப் தரப்பில் குற்றஞ் சாட்டப்படுகிறது. (ற)

# நைஜீரியத் தாக்குதலில் 185 பொதுமக்கள் சாவு

அபுஜா, ஏப்.23

நைஜீரிய இராணுவத்தினர் பிரிவினைவாதிகள் மீது நடத்திய திடீர் இராணுவ நடவடிக்கையின் போது 185 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 200க்கும் மேற்பட்ட வீடுகள் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.



ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போக்கோ ஹராம் என்ற பிரிவினைவாத அமைப்பு அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றது. நைஜீரியாவின் வடக்கே, போர்னோ பகுதியில் பிரிவினைவாதிகள் பதுங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியில் நைஜீரிய இராணுவம் திடீர்த் தாக்குல் நடவடிக்கையை மேற்கொண்டது.

இருதரப்பினருக்கும் இடையே மூண்ட கடும் துப்பாக்கிச் சண்டையில் போக்கோ அமைப்பைச் சேர்ந்த சிலர் உட்பட 185 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நைஜீரிய இராணுவச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பிரிவினைவாத அமைப்பினர் பொதுமக்களைக் கேடயங்களாக வைத்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியமையாலேயே இந்த அளவு உயிரிழப்புகள் ஏற்பட்டன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

## எமக்கு தொடர்பில்லை

பியாங்யாங், ஏப்.23

அமெரிக்காவில் இடம் பெற்ற பொஸ்டன் குண்டு வெடிப்புக்கும் தமக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்று வட கொரியா மறுத்துள்ளது.

அமெரிக்கா மீது தாக்குதல் நடத்த முடிவு செய்தால், அதனை மறைமுகமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் வடகொரியா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் வலதுசாரிகளுக்கு ஆதரவான இணைய தளம் பொஸ்டன் குண்டுவெடிப்பின் பின்னணியில் வட கொரியாவுக்குத் தொடர்பிருப்பதாக குறிப்பிட்டிருந்ததை அடுத்தே வட கொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது. (ற)

# தீவுகளை விற்பதற்கு கிறீஸ் தீர்மானம்


## கடும் பொருளாதார நெருக்கடியால்

ஏதென்ஸ், ஏப்.23

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான கிரீஸ் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.


அதன் ஒரு பகுதியாக அரசின் சொத்துக்கள் விற்கப்பட்டு வருகின்றன. அரசுக்கு சொந்தமான அழகிய கடற்கரைகள், தீவுகள் மற்றும் அரண்மனைகள் போன்றவை தனியாருக்கு விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றில் முக்கியமானது ரோதெஸ் தீவு ஆகும். அது 50 மைல் நீளமானது. 1850 ஹெக்ரேயர் பரப்பளவு கொண்ட சுற்றுலாத்தளமாகும். அங்கு அழகிய அபாண்டோ கடற்கரை உள்ளது. கிரேக்கர்களின் சூரிய கடவுளான அப்போலோவின் கோவிலும் உள்ளது. பழங்காலத்தில் உலக அதிசயங்களில் ஒன்றான 100 அடி உயர கொலோங்கல் சிலையும் உள்ளது.

இவை தவிர இங்கிலாந்து இளவரசர் பிலிப் பிறந்து



வளர்ந்த அரண்மனையும் விற்பனைக்கு தயாராக உள்ளது. இதற்கு முன்பு மார்ச் மாதம் கட்டார் அரசர் இங்குள்ள 6 இடங்களை சுமார் ரூ.10 ஆயிரம் கோடிக்கு வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஒன்பது பயணிகளை சிறைப்பிடித்த தலிபான்கள்



காபூல், ஏப்.23

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறங்கிய ஹெலியில் இருந்த 9 பயணிகளை தலிபான்கள் சிறைப்பிடித்துள்ளனர்.

துருக்கியைச் சேர்ந்த ஒரு நிறுவனம் ஆப்கானிஸ்தானில் கோஸ்ட் நகரில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்தப் பணிகளை மேற்பார்வையிட அதன் அதிகாரிகள் குழு கோஸ்ட் நகருக்குச் சென்றுவிட்டு காபூலுக்கு ஹெலிகாப்டரில் திரும்பிக் கொண்டிருந்தது. அப்போது ஹெலிகாப்டரில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதையடுத்து அஸ்ர் நகரில் ஹெலி அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. தரையிறக்கப்பட்ட அந்தக் ஹெலிகாப்டரைச் சூழ்ந்த தலிபான்கள் அதில் இருந்த 9 பேரையும் சிறைபிடித்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

சிறைப்பிடிக்கப்பட்டவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளைப் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் அவர்களை விடுவிப்பதற்கு தலிபான்கள் பெருந்தொகைப் பணத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிய வருகின்றது. (ற)

# லண்டன் மரதனில் 30,000 பேர் பங்கேற்பு

நியூயோர்க், ஏப்.23

சர்வதேச மட்டத்தில் நடக்கும் முதலாவது நிகழ்வான லண்டன் மரதன் போட்டியில் நேற்றுமுன்தினம் 30 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கலந்துகொண்டனர். பொஸ்டன் நகரில் 6 நாள்களுக்கு முன்னதாக நடந்த மரதன் போட்டியில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற நிலையில் மீண்டும் பெருமளவானோர் கலந்து கொண்டுள்ளனர். பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த பிறிஸ்கா ஜெப்டூவும், ஆண்கள் பிரிவில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த செகாயா கெபெதேவும் முதலாவதாக வந்தனர்.

இந்தப் போட்டியை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டிருந்தது.



போட்டியின் முக்கிய நிகழ்வு நேற்று ஆரம்பமாவதற்கு முன்னதாக பொஸ்டன் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரை நிமிடநேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட ஓட்ட வீரர்கள் கறுப்புப் பட்டிகளை அணியுமாறு கேட்கப்பட்டனர்.

இதேவேளை, பொஸ்டன் குண்டுவெடிப்பு சம்பவத்தின் எதிரொலியாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தேசிய பாதுகாப்புக் குழுவினருடன் கடந்த சனிக்கிழமை ஆலோசனை மேற்கொண்டார். எதிர்காலத்தில் அமெரிக்காவின் பாதுகாப்புக் குறித்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்று கூறப்படுகிறது. (ற)

# சிரிய அரசுக்கான ஆதரவு தொடரும்

டமஸ்கஸ், ஏப். 23

மேற்கத்தய நாடுகளின் மூர்க்கத்தனமான வெளியுறவுக் கொள்கையால் நெருக்கடியைச் சந்தித்து வரும் சிரிய அரசுக்கு ஈரான் பக்கபலமாக இருக்கும் என்று ஈரான் உறுதியளித்துள்ளது.



சிரியாவில் கடந்த மூன்று ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகின்றது. அங்கு நடைபெறும் மோதல்களால் இதுவரை சுமார் 75 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். 10 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் அயல்நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்தநிலையில் சிரிய அரசுக்கு எதிராகப் போராடும் குழுக்களுக்கு அமெரிக்க உட்பட பல்வேறு மேற்கத்தய நாடுகள் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இந்தநிலையிலேயே ஈரான் சிரிய அரசுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. மேற்கத்தய நாடுகள் தமது இலாபத்துக்கான சிரியாவைப் பலிகொடுக்கின்றன. அவற்றின் மூர்க்கத்தனமான வெளியுறவுக் கொள்கைகளால் நெருக்கடிகளைச் சந்தித்துவரும் சிரியாவுக்கு ஈரான் தொடர்ந்து சகல வழிகளிலும் உதவிகளை வழங்கும் என்று அந்த நாடு தெரிவித்துள்ளது. (ற)

# பெண்களை பாதுகாக்க நடவடிக்கை தேவை

## யுனிசெப் வலியுறுத்து

லண்டன், ஏப்.23
இந்தியாவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்து வரும் நிலையில் அது குறித்துக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெப்) தெரிவித்துள்ளது.
இதுகுறித்து அந்த அமைப்பு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


### அதிகரிக்கும் குற்றம்

''கடந்த சில நாள்களாக இந்தியத் தலைநகர் புதுடில்லியில் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்து வரும் பாலியல் தொடர்பான குற்றங்களைப் பார்க்கையில் பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பாக இருப்பதற்காக துரித நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட வேண்டும் என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. தற்போது டில்லி மருத்துவமனையில் உயிருக்குப் போராடி வரும் 5 வயது சிறுமி பூரண நலமடைய வேண்டும் என்ற அவரது பெற்றோரின் பிரார்த்தனையில் யுனிசெப்பும் பங்கேற்கிறது.

### கடும் சட்டம் தேவை

சமீபத்திய புள்ளி விவரங்களின்படி, ஆண்டுதோறும் இந்தியாவில் சுமார் 30 ஆயிரம் பெண்கள் பாலியல் வன்முறைக்கு இலக்காகின்றனர். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் சிறுமிகள் என்பது கவலைதரும் விடயமாகும். 5 வயதுச் சிறுமிக்கு நேர்ந்துள்ள கொடுமை, சட்டங்களை சரியான முறையில் அதிகாரிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாய நிலையை தற்போது ஏற்படுத்தியுள்ளது,'' என்றுள்ளது.(ற)

**இந்தியத் தலைநகரான டெல்லி தற்போது பாலியல் குற்றச் சம்பவங்களின் தலைநகராவும் உரு வெடுத்திருக்கிறது. கடந்த 3 மாதங்களில் மட்டும் 393 பாலியல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.**



டெல்லியில் 5 வயதுச் சிறுமி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங் இல்லத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்தினர்.

# நாம் தமிழர், காங்கிரஸ் கைகலப்பு

சென்னை, ஏப்.23
மதுரையில் நாம் தமிழர் கட்சி ஏற்பாடு செய்திருந்த பொதுக் கூட்டத்தில் வைக்கப்பட்டிருந்த பதாகைகள் தொடர்பில் நாம் தமிழர் கட்சி ஆதரவாளர்களுக்கும் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.
குறிப்பிட்ட பொதுக்கூட் டம் தொடர்பாக நாம் தமிழர் கட்சியினரால் அமைக்கப்பட்டிருந்த விளம்பரப் பதாகைகளில் காங்கிரஸ் தலைவர்களை இழிவுபடுத்தியிருந்ததாகத் தெரிவித்தே காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.
பின்னர் இருதரப்பினரும் பொலிஸாரால் சமாதானப்படுத்தப்பட்டு பதாதைகளும் மீண்டும் வழங்கப்பட்டன.
(ற)

# மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு ஆதரவளிக்கிறது இந்திய அரசு

## திருமாவளவன் காட்டம்

சென்னை, ஏப்.23
''தமிழக மக்களின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் இலங்கைக் கடற்படையினருக்கு இந்தியா தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்கி வருவது, தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதல்கள் இந்திய அரசின் ஆதரவோடு தான் நடத்தப்படுகிறதா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கிறது'' - இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்.
இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
''நாள்தோறும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுகின்றனர். இதுகுறித்து தமிழக மக்களும், அரசும் எந்தனையோ போராட்டங்களை நடத்தியபோதும் இந்திய மத்திய அரசு அதனைப் பொருட்படுத்துவதாக இல்லை''

### கடற்படைக்கு பயிற்சி

''இந்தநிலையில் தற்போது இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த 250 பேருக்கு இந்திய கடற்படைக் கலங்களில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இது தமிழக மக்களைப் புண்படுத்துவதாக இருக்கிறது. இந்திய மத்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் இந்திய மத்திய அரசின் ஆதரவோடு தான் நடத்தப்படுகிறதோ என்ற ஐயத்தை நமக்கு ஏற்படுத்துகிறது.



ஏனெனில் தனது நாட்டு குடிமக்களைக் கொல்பவர்களுக்குத் தாங்களே பயிற்சி அளிக்கும் இத்தகைய கேவலம் உலகில் வேறு எந்த நாட்டிலும் நடந்ததில்லை.
இந்திய அரசு இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம். இலங்கைக்கான இந்தியத் தூதராக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் மத்திய அரசைக் கோருகின்றோம்.
மத்திய அரசு தொடர்ந்து தமிழக மக்களின் உணர்வுகளுக்கு எதிராக செயல்படுவது இந்தியாவின் சிறந்த எதிர்காலத்துக்கு பாதிப்பாகவே அமையும் என்பதை நாம் சுட்டிக்காட்டுகிறோம்,'' என்றுள்ளது. (ற)

**"இலங்கைக்கான இந்தியத் தூதராக தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை நியமிக்கவேண்டும் என்றும் மத்திய அரசைக் கோருகின்றோம்.**


# மீண்டும் பழுது பார்க்கப்பட்டது கூடங்குளம் அணு உலை

சென்னை, ஏப்.23
கூடங்குளம் அணு உலையில் பழுதடைந்திருந்த நான்கு வால்வுகள் மாற்றப்பட்டு தற்போது சிறப்பாகத் தொழிற்படுகின்றன என்று அணு உலை கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக அந்தக் குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
''கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உள்ள அணு உலைகளில் சோதனை ஓட்டம் நடைபெற்றபோது அதில் சில வால்வுகள் பழுதடைந்திருந்தமை கண்டறியப்பட்டது. அவற்றை நீக்கிவிட்டு தற்போது புதிதாக வால்வுகள் பொருத்தப்பட்டு விட்டன. தற்போது அணு உலையின் செயற்பாடு திருப்தி அளிப்பதாகக் காணப்படுகிறது,'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை கூடங்குளம் அணு உலையில் அடிக்கடி இவ்வாறான பழுதுகள் ஏற்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
இதேவேளை, கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் சார்பில் தரைவழி முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு தரமற்ற உபகரணங்களும், உதிரிப் பாகங்களும் ரஷ்ய நிறுவனங்களிடம் இருந்து வாங்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டியதுடன் அது குறித்து விசாரணை தேவை என்றும் வலியுறுத்தினர். (ற)

# பிரதமராகும் தகுதி மோடிக்கே உண்டு

## ராம்ஜெத்மலானி கருத்து

புதுடெல்லி, ஏப்.23
''மோடி மதச்சார் பற்றவர், நேர்மையானவர் அவரே பிரதமர் பதவிக்குத் தகுதியானவர். பா.ஜ.கட்சி அவரையே பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும்,'' இவ்வாறு தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான ராம்ஜெத்மலானி.
இதுகுறித்துக் கருத்து வெளியிட்ட ராம்ஜெத்மலானி,
''பிரதமர் வேட்பாளரை பா.ஜ.க. முன்னதாகவே அறிவிக்க வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் வேட்பாளர் யார் என்று அறிவிப்பது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். ஊழல் நிறைந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பதவியில் நீடிக்க வேண்டும் என்று நினைப்பவர்களே மோடியை விமர்சிக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டத்தைக் கவனமாகப் படிக்க வேண்டும். அதில் மதச் சார்பின்மைக்கு விளக்கம் தரப்பட்டுள்ளது. அதைப் புரிந்து கொள்ளாதவர்களே மதச் சார்பின்மை என்ற பிரச்சினையை எழுப்புகின்றனர். மதவாதம் மற்றும் மதச் சார்பின்மை என்ற வார்த்தைகள் இன்றைய நாளில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. தவறான புரிதல்அதன் அர்த்தம் மற்றும் முக்கியத்துவம் தெரியாமலேயே, பலர் தவறாகப் பயன்படுத்துகின்றனர்.



மோடி நம்நாட்டின் ஈடு இணையற்ற மதச் சார்பற்ற தலைவர். அவர் 100 சதவீதம் மதச் சார்பற்றவர். மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்தால் பா.ஜ.க.வும் தேசிய ஜனநாயக கூட்டணியும் எதிர்வரும் தேர்தலில் நிச்சயம் பயன் அடையும்'' என்றார். (ற)

# தே.மு.தி.க. தலைவர் நலம் விசாரித்தாராம் முகநூலில் புகைப்படம் வெளியிட்டார் கருணாநிதி

சென்னை, ஏப்.23
''தினத்தந்தி அதிபர் சிவந்தி ஆதித்தனார் உடலுக்கு அஞ்சலி செலுத்தி விட்டுத் திரும்பும்போது தே.மு. தி.க தலைவர் விஜயகாந்த் என்னை நலம் விசாரித்த போது... '' என்ற பதிவோடு இருவரும் வணக்கம் செலுத்திக் கொண்ட புகைப்படத்தை முகநூலில் வெளியிட்டுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.



தேர்தல்கள் தொடர்பாக தி.மு.க.- தே.மு.தி.க. இடையே பேச்சுக்கள் நடைபெற்றுவருவதாக கூறப்படும் நிலையில் இரு கட்சித் தலைவர்களும் மிக நீண்ட காலத்துக்குப் பின்னர் நேருக்கு நேர் சந்தித்துள்ளனர். அத்துடன் இந்தப் புகைப்படத்தை தி.மு.க. தலைவர் கருணாநிதியே தமது முகநூலில் வெளியிட்டுள்ளமை அரசியல் வட்டாரங்களில் பல்வேறு ஊகங்களைக் கிளப்பியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# மனித உரிமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை அரசு

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு



கொழும்பு,ஏப்.23

மனித உரிமைகளை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசின் அரசியல் கொள்கைகளுக்கு முரண்பட்ட மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவது ஆபத்தான நிலைமை ஏற்படுத்தியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஆளும் கட்சியின் கொள்கைகள் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் தரப்பினருக்கு கிடைக்கப்பெறும் அடைக்கலம், மாற்று கருத்துக்களை வெளியிடுவோருக்கு இல்லை என்று அவர் கூறினார்.

அரசின்ஆட்சியின் கீழ் நீதி, நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களில் தங்கி வாழாது, மக்களை ஏமாற்றாத ஆட்சியாளர்களின் தேவை வெகுவாக எழுந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## இளைஞர் நாடாளுமன்ற தேர்தல்; வேட்புமனுத் தாக்கல் ஆரம்பம்

### மே 5 இல் வாக்கெடுப்பு

மட்டக்களப்பு,ஏப்.23

இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் 30 ஆம் திகதி வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் சேவை அதிகாரி என்.குகேந்திரா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் தேர்தலில், இளைஞர் கழக பிரதேச சம்மேளனங்களின் தலைவர், உப தலைவர், பொருளாளர், உதவி அமைப்பாளர் போன்ற பதவிகளில் உள்ளவர்கள் அல்லது இலங்கை இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவுசெய்யப்பட்ட இளைஞர்கழகங்களின் தலைவர்கள் போட்டியிடலாம்.

இளைஞர் நாடாளுமன்றத்துக்கான தேர்தல்கள் எதிர்வரும் மே மாதம் 5ஆம் திகதி நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் நடைபெறும்.

தேர்தலுக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்த நாளிலிருந்து மே 2 ஆம்திகதி நள்ளிரவு 12 மணிவரையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.-என்றார். (ச)

## காணாமற் போனோர் குறித்து ஆராய சட்டத்தரணிகள் குழு

### ஜே.வி.பி. நடவடிக்கை

கொழும்பு,ஏப்.23


கடந்த 1987 - 1989 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் காணாமற்போன உறுப்பினர்கள் குறித்து ஜே.வி.பி உள்ளக ஆய்வை மேற்கொண்டு வருகிறது. அதற்காக விசேட சட்டத்தரணிகள் குழு ஒன்றையும் ஜே.வி.பி நியமித்துள்ளது.

இந்தக் குழு காணாமற்போனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து, சாட்சியங்களைத் திரட்டி வருகின்றனர் என்று அதன் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மாத்தளை வைத்தியசாலைக்கு அருகில் அண்மையில் 150 இற்கும் மேற்பட்ட மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. இவையாவும் 1980 ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டவை என்று இரசாயன பகுப்பாய்வுகளில் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், அவை ஜே.வி.பியின் முன்னாள் உறுப்பினர்களுடையதாக இருக்கலாம் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த விடயத்துக்கு சாட்சியமாக காணாமற்போன தங்கள் உறுப்பினர்களின் உறவினர்களை முன்னிறுத்த ஜே.வி.பி நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

**“விசேட சட்டத்தரணிகள் குழு காணாமல் போனவர்களின் குடும்பத்தினரை சந்தித்து, சாட்சியங்களை திரட்டி வருகின்றனர்.**



கல்முனை மாநகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிபின் சாய்ந்தமருது இல்லத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீட் உடன் நடைபெற்றது. அதன்போது முதல்வர் மாநகரின் குறை நிறைகள் தொடர்பாக முதலமைச்சருடன் உரையாடுகிறார்.

## கடலில் தவறி வீழ்ந்து மீனவர் சாவு

திருகோணமலை,ஏப்.23

திருகோணமலை பட்டினமும் சூழலும் எல்லைக்கு உட்பட்ட கரையோர கிராமமான விஜிதபுர பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் கடலில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கியதால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் விஜிதபுர கிராமத்திலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற கே.பி.உபநந்த (வயது-50) என்பவராவார்.

நேற்றுமுன்தினம் ஞாயிறு காலை வழமை போல மீன்பிடி தொழிலுக்காகச் சென்ற வேளையே படகிலிருந்து தவறி வீழ்ந்துள்ளார்.நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என்று திருகோணமலை தலைமை பொலிஸ் நிலையம் தெரிவித்துள்ளது.(ச-40)

## இரத்தம் குடிக்கும் ஈக்களால் மட்டக்களப்பில் மாடுகள் சாவு

### கவலையுடன் பண்ணையாளர்கள்



மட்டக்களப்பு,ஏப்.2

மட்டக்களப்பு, வேப்ப வெட்டுவான், மாவடியோடைப் பகுதிகளில் இரத்தம் குடிக்கும் ஒருவகைச் சிறிய ஈக்களால் நூற்றுக்கணக்கான மாடுகள் தினமும் உயிரிழக்கின்றன என்று பண்ணையாளர்கள் துயரம் வெளியிடுகின் றனர்.

ஆயிரக்கணக்கில் மாடுகளில் மொய்க்கும் ஒரு வகைச் சிறிய ஈக்களே இரத்தத்தை உறுஞ்சி மாடுகளைச் சாகடிக்கின்றன என்று பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முப்பது, நாற்பது மாடுகளைக் கொண்டிருக்கும் மாட்டுப் பண்ணையாளர்கள் கடந்த ஓரிரு மாதங்களில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட மாடுகளை இழந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

கறுப்பு நிறமுள்ள ஒரு வகைச் சிறிய ஈக்கள் மாடுகளின் உடம்பில் மொய்த்துக் கொண்டு இரத்தத்தை வேண்டிய அளவு உறிஞ்சிக் குடிக்கின்றன.

அதனால் பலவீனப்பட்டுப் போகும் மாடுகள் ஒரு சில நாள்களில் எலும்பும் தோலுமாகி காடுகளுக்குள் புகுந்து உயிரிழக்கின்றன.

ஈக்கடியால் இரத்தம் உறிஞ்சப்பட்ட மாடுகளின் தந்தங்களும், தாடைகளும், கண்களும் வீக்கமடைகின்றன என்று மாட்டுப் பண்ணையாளர்கள் குறிப்பிடுகின்றனர். (ச)

## வர்த்தக நிலையத்தில் திடீர் வெடிப்பு

கொழும்பு,ஏப்.24

அக்குரஸ்ஸ நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம் பெற்றுள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் கூறினர். (ச)

## கந்தளாய் குளத்துக்கு எதிரே இரு மாடி வரவேற்பு மண்டபம்



திருகோணமலை,ஏப்.23

திருகோணமலை, கந்தளாய் குளத்துக்கு நேர் எதிராக இரண்டு மாடிகளைக் கொண்ட ‘லேக் ப்ரொன்ட் ரெஸ்ட்’ வரவேற்பு மண்டபத்தை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி செயலர் கோத்தபாயராஜபக்ஷ திறந்து வைத்துள்ளார்.

திருமண மண்டபம்,மணப்பெண்ணுக்குரிய அலங்கார அறை, குளியலறைகள் மற்றும் சமையலறை போன்ற வசதிகளுடன் ஒரே தடவையில் சுமார் 250 விருந்தினர்கள் கலந்து கொள்ளக் கூடிய வரவேற்பு மண்டபமும் அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு- திருகோணமலை பாதையில் பயணிக்கும் பிரயாணிகள் அங்குள்ள உணவகத்தில் சிறந்த சேவையைப் பெறக்கூடிய ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நாய்களுக்கு ‘சத்திரசிகிச்சை’ இனப்பெருக்கத்தை தடுக்க

மட்டக்களப்பு,ஏப்.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகள் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் நாவற்குடா, கல்லடி, காத்தான்குடி நகர சபைப் பிரிவில் ஏத்துக்கால், பர்தௌஸ்நகர், அன்வர் கிராமம் உட்பட பல கரையோரப் பிரதேசங்களில் நேற்று நாய்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள் ளப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணியகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள் ளப்பட்டன. இச்சத்திர சிகிச்சைகள் விலங்கியல் வைத்திய நிபுணர்களான நளின் ராஜபக்ஷ மற்றும் டாக்டர் மலிந்த பண்டார தலைமையிலான மருத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டன. (ச)



## மின்சார கட்டண உயர்வு தொடர்பில் சாட்சிகளுடன் தகவல்கள் வேண்டும்

### டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.2
மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பில் சாட்சியங்களுடன் தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என்று டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வாறான சாட்சியங்களின் அடிப்படையில் பொதுப் பயன் பாட்டு ஆணைக்குழு மின்சாரக் கட்டண உயர்வுக்கு அனுமதி அளித்தது என்பது பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு வெளிப்படைத்தன்மையு டன் செயற் படவில்லை. மக்கள் வழங்கிய சாட்சியங்களுக்கு புறம்பான வகையிலேயே விலை அதிகரிப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அனைத்து நுகர்வோரின் உரிமைகளையும் உறுதிப்படுத் துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெசன்ல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச)

## மேற்கத்தேய செல்வந்த நாடுகள் சமாதானத்தைக் குழப்ப முயற்சி

### மஹிந்த சமரசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு,ஏப்.23
மேற்கத்தேய செல்வந்த நாடுகள் ஆசிய நாடுகளின் சமாதானத்தை குழப்பும் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது என்று பெருந்தோட்டத்துறை அமைச்சரும், மனித உரிமைகள் பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

ஆசிய நாடுகள் சமாதானத் துடன் அமைதியாக இருந்து வந்தன. எனினும் மேற்கத் தேய நாடுகள் இலங்கை போன்ற அமைதியான நாடுகளில் அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்று அவர் கூறினார்.

அதன் மூலம் அந்த நாடுகள் சுயலாபம் அனுபவித்து வருகின்றன. அதன் அடிப் படையிலேயே இலங்கை மீது அமெரிக்கா போன்ற பல் வேறு நாடுகள் அழுத் தங்களை பிரயோகிக்க முற் படுகின்றன என்று அவர் தெரிவித்தார். (ச)

## இனம் தெரியாத சடலம் அம்பாறையில் மீட்பு

அம்பாறை,ஏப்.24
அம்பாறை,பாலமுனை கடற்கரையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இனம் தெரியாத பெண் ஒருவரின்



சடலம் மீட்கப்பட்டுள்ளது. அது தமிழ்ப் பெண்ணின் சடலமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இறந்தவர் சுமார் 70 வயது உடையவராக இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்க்ள் சடலம் கரை யொதுங்குவதைக் கண்டு அக்கரைப்பற்றுப் பொலிஸா ருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு வந்த அக்கரைப்பற்று பொலிஸார் சடலத்தைப் பார்வையிட்ட தோடு,மேலதிக விசார ணைகளையும் மேற் கொண்டு வருகின்றனர். (ச)

## ஆசிரியர் சேவை பதவியுயர்வு: 2010/38 இலக்க சுற்றறிக்கையை இரத்துச் செய்தது கல்வி அமைச்சு

கொழும்பு,ஏப்.22
இலங்கை ஆசிரியர் சேவை பதவி உயர்வுகள் தொடர்பான 2010/38 ஆம் இலக்கமிடப் பட்ட சுற்றறிக்கையை கல்வி அமைச்சு இரத்துச் செய் துள்ளது என்று அமைச் சின் செயலர் எஸ். எம். கோத்த பாய ஜயரட்ன அறிவித்துள் ளார்.

இது தொடர்பாக சகல மாகாண, வலயக் கல்வி அலுவலகங்க ளுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:-

2010/38 ஆம் இலக்க ஆசிரியர் சேவை பதவி உயர்வு தொடர் பாக முன்னாள் கல்விச் செயல ரால் சுற்றறிக்கை தயாரிக் கப்பட்ட போதும் அதில் சில குறைபாடுகள் காணப்பட்ட மையால் அந்தச் சுற்றறிக்கை உத்தியோகபூர்வமாக அலுவல கங்களுக்கு அனுப்பி வைக் கப்படவில்லை. ஆனால், அந்தச் சுற்றறிக்கை அமைச் சுக்குள் இருந்த சிலரால் மோசடியான முறையில் பிரதியாக்கம் செய்யப்பட்டு கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள் ளது.

எனவே, 2010 / 38 ஆம் இலக்க சுற்றறிக்கை இரத்துச்-செய்யப்படுவதுடன் 2005/04 ஆம் இலக்க சுற்றறிக் கையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஆலோசனைக் கடிதமும் இரத்துச் செய்யப்பட்டுள் ளது.- என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச)

## தப்பிச் சென்ற ஊடகவியலாளரை கறுப்புப் பட்டியலில் சேர்க்கவில்லை

### ஊடக அமைச்சு தகவல்

கொழும்பு,ஏப்.23
இலங்கையில் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற எந்த ஊடகவியலாள ரையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்கவில்லை என்று ஊடகத் துறை அமைச்சின் செயலர் சரித ஹேரத் தெரிவித்தார்.


இலங்கையில் தங்களுக்கு அச் சுறுத்தல் இருப்பதாக தெரி வித்து கடந்த இரண்டு மாதங்க ளில் இரண்டு ஊடகவி யலாளர்கள் இலங்கையில் இருந்து தப்பிச் சென்றுள்ள னர். எனினும் இலங்கையில் அவ்வாறு எந்த அச்சுறுத் தலும் இல்லை என்று அவர் கூறினார். இந்தநிலையில் வெளிநாடுக ளுக்குத் தப்பிச் சென்ற ஊடக வியலாளர்கள், மீண்டும் நாடு திரும்பலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் ஊடகவியலாளர் களின் பாதுகாப்பை உறுதி செய்யும் நிலையில், இலங்கை யின் ஊடகத்துறை அமைச்சு இல்லை என்று சுதந்திர ஊடக வியலாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)


# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் ஆறுமுகம்பிள்ளை சுப்பிரமணியம்

(குகன் ஸ்ரோர்ஸ், விநாயகர் ஸ்ரோர்ஸ், குகன் எரிபொருள் நிலையம், மீனாட்சி அரிசி ஆலை)



**நிஜமாகி 29.09.1941**

**நிழலாகி 15.03.2008**

நினைவில் நீங்காமல் வாழும்
எங்கள் இதயத்தில் வாழும் இதய தெய்வமே !
வாழும் வாழ்வும் நீங்களே
வாழும் வளமும் நீங்களே
வாழ்வின் அர்த்தமும் நீங்களே!
வாழ வையுங்கள் வானமே எல்லை
என உணர வைத்தீர்கள் நொடி நொடியாய்
எங்கள் சுவாசமாய் !
உங்கள் புகழ் போற்றுவோம்

144/3 பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

(36311)

என்றும் உங்கள் நினைவோடு வாழும்:-
குடும்பத்தினர்.

## உடையார்கட்டுக்குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு, ஏப்.23
முல்லைத்தீவு உடையார்கட்டுக்குளம், சுமார் 195 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
முல்லைத்தீவு உடையார்கட்டுக்குளம் நீண்டகாலமாகப் புனரமைப்பின்றிக் காணப்பட்டமையால் இந்தக் குளத்தின் கீழான விவசாயிகள் பயிர்ச் செய்கைகளில் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.
கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பிரதான நீர்ப்பாசன வாய்க்கால்கள் ஏனைய கிளை வாய்க்கால்கள், நீர்ப்பாசன விடுதி என்பவற்றின் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.
குளத்தின் புனரமைப்புப் பணிகள் காரணமாக இந்த முறைக்கான சிறுபோக பயிர்ச் செய்கை நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

# எரிபொருள் மானிய முத்திரையில் பாரபட்சம் – மீனவர்கள்

# தகுதியானவர்களுக்கு வழங்கிவிட்டோம்– அதிகாரிகள்

## விநியோகத்தின் போது இராணுவத்தினர் தாக்கி ஒருவர் காயம்

மன்னார்,ஏப். 23
மன்னார் பேசாலையில் மீனவர்களுக்கான எரிபொருள் மானிய முத்திரையை பொலிஸ் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் வழங்கியதால் தாம் பாதிக்கப்பட்டதாக பேசாலை மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக அவர்கள் உதயனிடம் தெரிவித்ததாவது:-
''கடந்த 20 ஆம் திகதி மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பேசாலையில் எரிபொருள் மானிய முத்திரை வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இதன்போது அதிகாரிகள் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் தம்முடன் அழைத்து வந்திருந்தனர். கடந்த மாதத்துக்கான முத்திரையே வழங்கப்பட்டது. இதன்போது பேசாலை சிறுத்தோப்பு நடுக்குடா உள்ளிட்ட பகுதிகளில் தொழில் செய்யும் 250 வரையான மீனவர்களுக்கு முத்திரை விநியோகிக்கத் தெரிவாகியுள்ள நிலையில் பாரபட்சமான முறையிலேயே அவை வழங்கப்பட்டன. இதனால் ஆத்திரம் அடைந்த நாம் அதிகாரிகளுடன் முரன் பட்டோம் இதன்போது எம்மில் ஒருவரை இராணுவத்தினர் தாக்கினர். இந்த நிலையில் அவர்கள் முத்திரை விநியோகத்தை நிறுத்திவிட்டு, கிடைக்கப் பெறாதவர்களை மன்னாரில் உள்ள அலுவலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறிவிட்டு சென்று விட்டனர். இதனால் தாம் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம்'' என்றனர்.

> “
> முத்திரை பெறத் தகுதி அற்ற நான்கு பேர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது- திணைக்கள அதிகாரி.

இந்தச் சம்பவம் தொடர்பில் மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது ;
எமது பாதுகாப்புக் கருதி பொலிஸாரின் உதவியுடனேயே இந்தப் பணிகளை முன்னெடுப்பது வழக்கம், கடந்த 20 ஆம் திகதி அவ்வாறே பேசாலைக்குச் சென்றோம்.
இதன் போது முத்திரை பெறத் தகுதி அற்ற நான்கு பேர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். அதனால் அங்கு குழப்பம் ஏற்பட்டது. எனினும் பொலிஸார் கட்டுப்படுத்தி விட்டனர். தகுதியானவர்களில் 95 வீதமானவர்களுக்கு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுவிட்டன. ஏனையோருக்கும் உரிய ஒழுங்கில் வழங்கப்படும்- என்றார். (ஐ)

## 3500 ஏக்கரில் சிறுபோக செய்கை

முல்லைத்தீவு, ஏப்.23
முத்துஜயன்கட்டுக் குளத்தின் கீழான பரவல் நீர்ப்பாசனத் திட்டத்தின் 3 ஆயிரத்து 500 ஏக்கரில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகக் காணப்படும் முத்துஜயன்கட்டுக் குளத்தின் கீழ் ஏற்றுநீர்ப்பாசனம் பரவல் நீர்ப்பாசனம் ஆகிய இரு திட்டங்களின் கீழ் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
இந்த ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கை குளத்தின் நீர்க் கொள்ளளவுக்கு ஏற்ப, ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 375 ஏக்கரில் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் கடந்த ஜனவரி முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பரவல் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் என்பன இவ்வாண்டு சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கரில் பயிரிடப்படவுள்ளன. (க-6)

## பணம் கிடைத்த மறுநாளே சமுர்த்திக் கொடுப்பனவு

### தாமதிக்கவில்லை என்கிறார் பிரதேச செயலர்

கிளிநொச்சி,ஏப்.23
முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேசத்தில் 1,571 பயனாளிகளுக்கு நான்கு மாதத்துக்குரிய சமுர்த்திக் கொடுப்பனவுகள் புதுவருடத்துக்கு முன்னதாகவே வழங்கப்பட்டுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்றும், இதனால் சமுர்த்திப் பயனாளிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்த விடயம் தொடர்பாகக் கருத்து தெரிவித்த துணுக்காய்ப் பிரதேச செயலர் ; டிசெம்பர், ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய நான்கு மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் புதுவருடத்துக்கு முன்னதாக வழங்கப்பட்டுவிட்டன என்றும், ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமையே சமுர்த்தி கொடுப்பனவு நிதி கிடைக்கப் பெற்றதாகவும் மறுநாள் 13 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்குள் சகல பயனாளிகளுக்கும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (ஐ-6)

## வெள்ளத்தில் மிஞ்சியவை



துணுக்காய் கோட்டைகட்டியகுளத்தில் வெள்ளத்தினால் பாதிப்படைந்த விதை நெல் வயல்கள் சேதமடைந்தது போக, எஞ்சியவற்றை சேகரித்து கையினால் சூடடிக்கும் விவசாயி. (ஐ-18)

## வவுனியா கலைஞர்களின் பங்களிப்பில் வடமாகாண ஆடற்கலை நிகழ்வு

வவுனியா, ஏப்.23
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவர்கள் திணைக்களத்தால் வடமாகாணத்தில் வருடாந்தம் மேடையேற்றப்படும் 'ஆடற்கலை - நடன நாடகம்' இந்த முறை வவுனியா மாவட்ட கலைஞர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்படவுள்ளது.
கலைஞர் கலாபூஷணம் வேலானந்தனின் நெறியாள்கையில் வவுனியா மாவட்டத்தின் சகல கலைஞர்களும் பங்குபற்றக் கூடிய வகையில் இந்த ஆடற்கலை நடன நாடகம் தயாரிக்கப்படவுள்ளது.
இதற்கான தொடக்க நிகழ்வும் அதன் பிரதியைக் கையளிக்கும் நிகழ்வும் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் வவுனியா ஸ்ரீ கந்த சுவாமி ஆலயத்தில் இடம் பெற்றன.
வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி என்.ஸ்ரீதேவி, வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர உட்பட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கல்விப் பணிப்பாளர்கள், கலை மன்றங்களின் பொறுப்பாளர்கள் மற்றும் கலைஞர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-400)

## உணவு, சுகாதாரப் பரிசோதனை

பூநகரி,ஏப்.23
உணவு நிலை உரிமையாளர்களுக்கும், பணியாளர்களுக்குமான மருத்துவப் பரிசோதனையும், பயிற்சிப் பட்டறையும் பூநகரிப் பிரதேச சபை மற்றும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் ஏற்பாட்டில் நடைபெற்றன.
இதில் பூநகரிப் பிரதேசத்தில் உணவு நிலையங்களை வைத்திருப்பவர்களும் அதில் பணியாற்றுபவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இங்கு உணவு கையாளுதல், பொதுச் சுகாதாரம் மற்றும் உணவக அமைப்புக்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டதுடன். மருத்துவப் பரிசோதனையும் இடம்பெற்றது. (ஐ)

### மாகாண மட்ட தமிழ் தினப் போட்டி

## கிளிநொச்சி வலயத்துக்கு 9 இடங்கள்

கிளிநொச்சி, ஏப்.23
வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாகாண மட்ட அகில இலங்கைத் தமிழ்மொழித் தின எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதன்படி கிளிநொச்சி வலயப் பாடசாலை மாணவர்கள் ஒன்பது இடங்களைப் பெற்றுள்ளனர். அவற்றின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பிரிவு -1 ஆக்கம் - எழுத்து**
3 ஆம் இடம் - க.தாருகானன் (முருகானந்தாக் கல்லூரி)

**பிரிவு - 2 கட்டுரை வரைதல்**
2 ஆம் இடம் - பா.சிவேகா (முருகானந்தாக் கல்லூரி)

**பிரிவு -3 கட்டுரை வரைதல்**
2 ஆம் இடம் - சி.பவித்திரன் (கிளிநொச்சி ம.வி)

**பிரிவு -4 கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**
2 ஆம் இடம் - தி.சண்கவி (கிளிநொச்சி ம.வி)

**பிரிவு -5 தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**
2 ஆம் இடம் - மு.டிலோசன் (கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**பிரிவு -5 திறனாய்வுப் போட்டி**
3 ஆம் இடம் - ச.சர்வன் (பரந்தன் இந்து ம.வி)

**பிரிவு -5 குறுநாடக ஆக்கம்**
2 ஆம் இடம் - சா.சகுந்தலா (கிளிநொச்சி ம.வி.)

**பிரிவு- 5 கவிதை ஆக்கம்**
1 ஆம் இடம் - மோ.பிரியதர்சினி (பாரதி வித்தி.)

**பிரிவு -4 சிறுகதை ஆக்கம்**
3 ஆம் இடம்- ச.கிருசாந்தி (முக்கொம்பன் அ.த.க.பா.)
(ஐ-405)

## வவு. தெற்கு வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர்கள் நெருக்கடியில்


வவுனியா, ஏப்.23
வவுனியா தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், காவலாளிகளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக வவுனியா தெற்கு கல்வி வலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் உள்ள 108 பாடசாலைகளில் 33,005 மாணவர்கள் கல்வி கற்று வருகிறனர். இந்த நிலையில் சில பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதாகவும் சில பாடசாலைகளில் பற்றாக்குறை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை-பாடசாலைகளில் காவல் கடமையில் ஈடுபடுபவர்களும் பணிக்கு அமர்த்தப்படாததால் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகப் பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.
இந்த வெற்றிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமையால் பாடசாலைகளில் மாணவர்கள் பாதிக்கப்படுவதுடன், பாடசாலை வளர்ச்சியும் குன்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-402)

## வவுனியா தமிழ் பிரதேச சபையால் உள்ளக வீதிகள் புனரமைப்பு

வவுனியா,ஏப்.23
வவுனியா தமிழ் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட வீதிகளைப் புனரமைக்கும் பணிகளை வவுனியா தமிழ் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.
சபைக்குட்பட்ட பல வீதிகள் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக மோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதையடுத்து குறித்த வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்த நிலையில், இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
அதனடிப்படையில் பாலாமைக்கல், தெற்கிலுப்பைக்குளம் பகுதிகளில் காணப்படும் ஐந்து உள்ளக வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.
சபை நிதியிலிருந்து இந்த வீதிகளைப் புனரமைக்குமாறு பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் விடுத்த வேண்டுகோளை அடுத்து இவற்றைப் புனரமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருவதாக வவுனியா தமிழ் பிரதேச சபையின் வீதி அபிவிருத்திக்குப் பொறுப்பான உறுப்பினர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

> “
> அதனடிப்படையில் பாலாமைக்கல் தெற்கிலுப்பைக்குளம் பகுதிகளில் காணப்படும் உள்ளக வீதிகள் 5 தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

(ஐ-400)



இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலைகளில் உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கு இந்துசமய மேம்பாட்டுத் தலைமைத்துவப் பயிற்சி நெறி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.யோகேஸ்வரன் கலந்து கொண்டு இந்து மன்றக் கொடியை ஏற்றி வைக்கிறார். (ச-ரி)

# தாய்மார் வெளிநாடு செல்வதால் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

திருகோணமலை,ஏப்.23

போருக்குப் பிற்பட்ட சமாதான சூழ்நிலையில் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பதற்குத் தாய்மார் வெளிநாடு செல்வதே பிரதான காரணம் என்று நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு குச்சவெளி பிரதேச அதிகாரி டி.உதயராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

24 கிராமசேவகர் பிரிவில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

கும்புறுப்பிட்டி, நாவற்சோலை, இரணைக்கேணி, சலப்பையாறு, கள்ளராவ போன்ற கிராமங்களில் வறுமைநிலை காரணமாக தாய்மார் வெளிநாடு செல்வதால் பிள்ளைகள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

சில நிதி நிறுவனங்கள் கணவனுக்குத் தெரியாமல் பெண்களுக்கு கடன்களை வழங்கி வருகின்றன. அதனால் குடும்பச் சச்சரவு, கடன்தொல்லை, இயற்கை அழிவுகளினால் ஏற்பட்ட விவசாய அழிவ காரணமாகத் தாய்மார் வெளிநாடு செல்லவேண்டியுள்ளது.

"குடும்பப் பின்னணியைச் சுற்றியே பல சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இவ்வாறான குடும்பப் பின்னணியைச் சுற்றியே பல சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

கிராமசேவை அதிகாரி, சமுர்த்தி உத்தியோகத்தர், பொலிஸ், பாடசாலை அதிபர் இணைந்த சமூகத் தொண்டர்களின் உதவியோடு சிறுவர் நன்நடத்தையில் கூடிய கவனம் எடுக்கப்பட்டு வருகிறது.-என்றார். (ச-40)

# 3 புதிய நெல்லினங்கள் இலங்கையில் அறிமுகம்



கொழும்பு,ஏப்.22

விவசாயத் திணைக்களத்தின் அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிறுவகத்தால் மூன்று புதிய நெல் வகைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

Vt 306, Vt 405 பாஸ்மதி வகை இரண்டும் மற்றும் Vt 05 - 1382 நாடு என்பனவே இதன் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவை பிஸ்கட் உற்பத்திக்கும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளமை முக்கிய அம்சமாகும்.

அவற்றிலே Vt 306 நெல் வகையானது 3 மாத வயதுக்கு உட்பட்டதாக விளங்கு வதுடன் வெள்ளை நிறம் கொண்ட நறுமணம் வீசக் கூடிய ஒரு வகையாகவும் விளங்குகின்றது.


Vt 405 வகையானது லங்கா சமுர்தி என்றழைக்கப்படுகின்றது. இவை நெல் மீது ஏற்படக்கூடிய பல்வேறு நோய் எதிப்புச் சக்தியை கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

உயர் அறுவடையைப் பெற்றுக்கெள்வதற்கும், பிஸ்கட் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கும் புதிய நெல் வகை பயன்படுகின்றது. புதிய நெல் வகை பற்றிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு சிறந்த பெறுபேறினை பெற்றுக்கொள்வதே விவசாய அமைச்சின் நோக்கமாகும்.

அதற்காக நெல் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புல்மோட்டையிலும் தம்பதியர் கொலை

## உறவுமுறையான பெண் கைது



திருகோணமலை,ஏப்.23

திருகோணமலை,புல்மோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மகசென்புர என்ற கிராமத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பெண்ணொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜா-எல பகுதியில் வைத்தே குறித்த பெண்ணைப் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

மகசென்புர என்ற கிராமத்தைச் சேர்ந்த எச்.எம். சூரியபண்டார (வயது- 38), ஜீவனி அனுரதிக்கா (வயது -36) என்ற தம்பதியினர் கடந்த சனிக்கிழமை இரவு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் கோடரியால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் வீட்டில் தங்கியிருந்த உறவுக்காரப் பெண்ணே இருவரையும் கொலை செய்துள்ளதாக பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர். சம்பவம் இடம்பெற்ற வீட்டின் வெளியே கொல்லப்பட்ட சூரியபண்டாரவின் சடலத்தை கண்ட அயலவர்கள் புல்மோட்டை பொலிஸ் நிலயத்துக்குக் கொடுத்த தகவலை அடுத்தே கொலை நடைபெற்ற சம்பவங்கள் வெளியாகியது.

பொலிஸாரின் தீவிர விசாரணையை அடுத்து கொலைச் சந்தேகநபர் ஜா-எல பிரதேசத்தில் வைத்துப் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு, செங்கலடிப் பிரதேசத்தில் சிவகுரு ரகு, ரகு விப்ரா என்ற தம்பதியர் வெட்டிக்கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மக்கள் மீது வரிச்சுமை

## அரசு வெளிநாட்டுக் கடனை அடைக்க மற்றொரு அடாவடித்தனம் என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

மட்டக்களப்பு,ஏப்.23

போரின் வடுக்களைச் சுமந்து வாழும் வடக்கு,கிழக்கு மக்கள் மீது அரசு வரிகளைச் சுமத்தியுள்ளது. அதன் எதிரொலியாக மின்சாரப் பாவனைக்கும் கட்டணத்தை உயர்த்தியுள்ளமை மக்களுக்கு பெரும் சுமையாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

களுவாஞ்சிக்குடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



அரசு வெளிநாடுகளில் கடன் பட வேண்டும்; அதனை அடைப்பதற்கு எமது மக்கள் வரிசெலுத்த வேண்டும் என்றால் அது எந்த விதத்தில் நியாயமாகும். அது அரசு மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் மற்றுமொரு அடாவடித்தனமாகும்.

இதேவேளை, தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒழுக்கம் சீர்கெட்டுக் கொண்டு வருகின்றது. அவற்றுக்கு அண்மையில் செங்கலடியில் நடந்த இரட்டைக் கொலைச் சம்பவம் சான்றாகும்.

16 வயதுடைய பாடசாலை மாணவர்கள் கொலை செய்யும் அளவுக்குத் துணிந்துள்ளனர் என்றால் மாணவர்களின் ஒழுக்கம் எந்தளவுக்குச் சென்றுள்ளது, என்பதனை நினைத்துப் பார்க்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டம் பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் புரிந்த மாவட்டம்.

"மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒழுக்கம் சீர்கெட்டுக் கொண்டு வருகின்றது. அவற்றுக்கு அண்மையில் செங்கலடியில் நடந்த இரட்டைக் கொலைச் சம்பவம் சான்றாகும்.

எனவே எமது உறவுகள் தங்களுடைய பிள்ளைகளை ஒழுக்கமிக்கவர்களாக வளர்தெடுக்க வேண்டும். -என்றார். (ச)

# சொரூபம் மீதான தாக்குதல் பொருளாதார நெருக்கடியை திசைமாற்றவா?

## பாஸ்கரா கேள்வி

கொழும்பு,ஏப்.23

மன்னார் சொரூபம் மீதான தாக்குதல் நாட்டின் மின்சாரக் கட்டண உயர்வுக்குப் பின்னரான பொருளாதார நெருக்கடியை திசைமாற்றுவதற்கான தந்திரோபாயமா என்று கேட்க முடிகின்றது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலர் சி. பாஸ்கரா கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-



பொருள்கள் விலையேற்றத்தின் பின்னர் மக்கள் சுமையை திசைமாற்ற இப்போது ஓர் புதாரமாக உருவாகியுள்ள மதப்போர், அரசுக்கு வரப்பிரசாதமாக உள்ளது.

அதனை அரசு அடக்காமல் இருப்பதற்கு காரணம் மதவாதத்தை காரணம் காட்டி விலையேற்றத்தை மூடி மறைக்கவா என்று கேட்க முடிகின்றது?

சொரூபம், பள்ளிவாசல், கோயில்கள் மீதான தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை கொடுக்கப்பட வேண்டும். இல்லையேல் மக்களின் சந்தேகம் வலுப்பெறும்.

உலக நாடுகளுக்கு இலங்கை உத்தரவாதமளித்த தீர்வை தமிழ் பேசும் மக்களுக்கு கொடுக்க வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் சமாதானமாக வாழும் சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் மேலும் வெளிநாட்டு முதலீடுகள் கூடி பொருளாதார சுமை குறைவடையும்.-என்றார்.(ச)

# மின்கம்பியில் சிக்கி எருமைகள் உயிரிழப்பு

கட்டுகஸ்தோட்டை,ஏப்.23

காட்டுப் பன்றிகளைப் பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத மின் கம்பியில் சிக்கி 3 எருமைகள் இறந்துள்ளன.

கட்டுகஸ்தோட்டை, ஹலோழுவ பிரசேத்திலுள்ள வயல் வெளியில் ஒருவர் பாதுகாப்பற்ற முறையில் மின்கம்பியை இணைத்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மின் கம்பியில் சிக்கி இறந்துள்ள 3 எருமைகளும் சுமார் 200,000 ரூபாவுக்கு மேல் பெறுமதியானவை என்று பொலிஸார் கூறினர்.

தலைமறைவாகியுள்ள சந்தேகநபரை கைதுசெய்வதற்கான விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச)

# அரியாலை கிழக்கு பிரதேசத்தில் தொடர்கின்றன குற்றச்செயல்கள்

## கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தவறிவிட்டனர் அந்தப் பிரதேச பொதுமக்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.23

அரியாலை கிழக்கு பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தவறிவிட்டனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

நல்லூர் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேசத்தின் பொது அமைப்பினர் இவ்வாறு குற்றம் சுமத்தினர்.

இந்தப் பிரதேசத்தில் சட்டவிரோதமாகத் தொடர்ந்து மணல் அகழப்பட்டு வருகின்றது. அதனைவிட கால்நடைகளும் இரவு வேளையில் கடந்தப்பட்ட இறைச்சிக்காக வெட்டப்படுகின்றன.

அத்துடன் சட்டவிரோத மது விற்பனையும் அதிகரித்துள்ளது. ஏற்கனவே இந்தப் பிரதேசத்தில் சட்ட விரோத மணல் கடந்தப்படும் சம்பவத்தை தட்டிக் கேட்ட கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்டார். கிராம உத்தியோகத்தரைத் தாக்கியவர்களைக் கூட இதுவரைக்கும் பொலிஸார் கைது செய்யவில்லை.

கிராம அலுவரைத் தாக்கிய நபர்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

இந்தக் குற்றவாளிகள் கைது செய்யப்படாத நிலையில் தாக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர் தொடர்ந்தும் கடமையாற்ற பின்னடிந்து வேறு பிரதேசத்துக்கு இடமாற்றம் கோரி சென்றுள்ளார்.

இவ்வாறு பிரதேசத்தில் தொடர்ந்து இடம்பெறும் குற்றச்செயல்களை இனியாவது விரைந்து கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் முன்வரவேண்டும் என்றும் பிரதேச பொது அமைப்புகள் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

## உழைக்கும் கைகளே...!



யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கின் அருகில் மூதாட்டி ஒருவர் விற்பனைக்காகக் கச்சான் வறுக்கும் காட்சி:

நாட்டில் எத்தனை ஆயிரம் பேர் மற்றவர்களை ஏமாற்றிப் பிழைக்கும் இந்தக் காலத்தில், இப்படியும் சிலர்-நேர்மையாக - கஷ்டத்தின் மத்தியிலும் உழைத்து வாழ்பவர்களாக இருக்கத் தானே செய்கிறார்கள். களவு, சுத்துமாத்து, தட்டிப் பறித்தல் போன்றவற்றுக்கு இன்று யாழ்.குடா நாட்டில் பஞ்சம் இல்லை. அவ்வாறான நிலைமையில் இப்படியும் ஒரு மூதாட்டி. இவர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்குக்கு அருகில் - உச்சி வெய்யிலையும் பொருட்படுத்தாமல் கச்சான் வறுத்து விற்பனை செய்வதன் மூலம் தன்னந்தனியே தமது வாழ்க்கையை கழித்து வருகிறார். உழைக்கும் கைகளே, உலகை புதுவகையில் உருவாக்கும் கைகளே...! (பி)

## கடலுணவு ஏற்றுமதியில் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ். குடாநாட்டில் இருந்து தென் பகுதிக்கான கடலுணவு ஏற்றுமதி திடீரென பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய காலநிலை மாற்றத்தாலும் மற்றும் கடல் வற்றியதாலும் கடலுணவுகள் மீனவர்களின் வலையில் பிடிபடுவது திடீரென குறைந்துள்ளது.

இதன் காரணத்தால் கடலுணவுகள் பிடிபடுவது மிக மிகக் குறைந்துள்ளது என்று வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

ஆகையால் தெற்கே கடலுணவுகளை கூடுதலாக கொண்டு செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களில் ஏற்றுமதி பாதிப்பால் அனேகமான கூலர் வாகனங்கள் கடலுணவுகளை கொண்டு செல்ல முடியாது தவம் கிடக்கின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## பாம்பு தீண்டியவர் வைத்தியசாலையில்

வடமராட்சி,ஏப்.23

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தரொருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி இராஜ கிராமம் பகுதியைச் சேர்நத எஸ்.மனோகரன் (வயது-40) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

கடந்த சனிக்கிழமை இரவு வீட்டில் இவர் உறங்கிக் கொண்டிருந்த போது இவரைப் பாம்பு தீண்டியுள்ளது.

குடாநாட்டில் கடும் வெப்பம் காரணமாக பாம்புகள் குடிமனைகளை நோக்கிப் படையெடுப்பதாக மக்கள் அச்சம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-16-8)

## உற்பத்தியாளர்கள், நுகர்வோருக்கு களம் அமைத்த புத்தாண்டுச் சந்தை

### வலி.கிழக்குப் பிரதேச செயலர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஏப்.23

நுகர்சியாளர்கள் தரமான பொருள்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும், தயாரிப்பாளர்கள் தமது உற்பத்திகளை உரிய முறையில் சந்தைப்படுத்தவதற்கும் வாழ்வாதார மேம்பாட்டு புத்தாண்டுச் சந்தை களமாக அமைந்துள்ளது.

இந்த வசதி வாய்ப்புகளை உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வலி. கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தெரிவித்தார்.

வலி. கிழக்கு சமுர்த்தி மகா சங்கம் ஏற்பாடு செய்திருந்த வாழ்வாதார மேம்பாட்டு புத்தாண்டுச் சந்தை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெற்றது.

புத்தாண்டுச் சந்தை நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்து பிரதேச செயலர் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வாழ்வாதார மேம்பாட்டு புத்தாண்டுச் சந்தை நிகழ்ச்சித் திட்டம் பொது மக்களுக்கு மேலதிகமான வசதிகளை அவர்களது வாழ்விடங்களுக்கு அருகில் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

வலி. கிழக்குப் பிரதேசம் யாழ். மாவட்டத்தில் ஆகக் கூடுதலான குடும்பங்களை கொண்டுள்ளது. அதேநேரத்தில் பெரும்பாலான குடும்பங்கள்வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களாகவும் உள்ளன.

வாழ்வாதார மேம்பாட்டு புத்தாண்டுச் சந்தை ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட நோக்கங்களை நிறைவு செய்வதாக அமைந்துள்ளது. உற்பத்தியாளர் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கும் பாவனையாளர்கள் தமக்குத் தேவையான பாவனைப் பொருள்களை வாழ்விடங்களுக்கு அண்மையில் நியாய விலையில் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்துகிறது.

புத்தாண்டுச் சந்தையை ஏற்பாடு செய்த சமுர்த்தி மகா சங்கத்தினர் அதனைத் திட்டமிட்ட முறையில் ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரிய விடயம்.

வாழ்வாதார மேபாட்டுக்கான குடிசைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் தயாரிப்புகள் உள்ளூர் உற்பத்திகள் உரிய முறையில் சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புகள் வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. மக்கள் இதனை உரிய முறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-11)

## தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் தரிசு நிலங்களாகக் காணப்பட்ட இடங்களில் விவசாயச் செய்கையை மேற்கொள்வதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கோப்பாய் இராச வீதி மற்றும் நீர்வேலிப் பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களில் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

குறித்த பிரதேசங்களில் தரிசு நிலங்களாகக் காணப்பட்ட பற்றைகள் அடர்ந்து வளர்ந்திருந்த நிலங்களை விவசாயிகள் பற்றைகளை அகற்றி பயிர்ச் செய்கையில் ஈடுபடவும் தயாராகி வருகின்றனர்.

இதற்கென விவசாய நிலங்களை உழுது பசளையிட்டு அவற்றைச் சீர்செய்யும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. (வ-17)


## அறிவித்தல்

22.03.2013 திகதிய பணிப்பாளர் சபை கூட்ட 10ஆம் இலக்க தீர்மானத்திற்கமைய இதுவரையில் பாரவூர்திச் சங்கத்தின் 42 உரிமையாளர்கள் மட்டும் அங்கத்தவர்களாகத் தம்மை பதிவு செய்துள்ளனர். பழைய அங்கத்தவர்கள் மீண்டும் தம்மை சங்கத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டுமாயின் தங்களிடம் பழைய அங்கத்துவ பற்றுச் சீட்டிருப்பின் அதை தலைமைச் செயலகத்தில் ஒப்படைத்து அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாம். இல்லையெனில் சமாதான நீதிவான் அவர்களின் மூலம் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பிக்கும் வகையில் சத்தியக் கடிதாசியை முடித்து சங்கத்தில் ஒப்படைக்கலாம். இதுவரை சேர்ந்துள்ள அங்கத்தவர்களின் பட்டியல் வவுனியா லொறிச் சேவைகள் சங்கத்திலும் பாரவூர்திச் சங்கத்தின் தலைமைச் செயலகத்திலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். விரைவில் பொதுச்சபை கூடவுள்ளதால் உரிமையாளர்கள் தங்கள் அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

திரு.க.சிவசுப்பிரமணியம்,
தலைவர், வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர்,
கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
03
04
1969



மறைவு
24
03
2013

வரணி வடக்கு வரணியைப் பிறப்பிடமாவும் உடுத்துறை வடக்கு, தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் **அருமைத்துரை பரிமேலழகன்** (அழகன்)

கடந்த 24.03.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த அன்புத் தெய்வத்தின் பிரிவால் துயருற்றிருந்த வேளையில் எமக்கு ஆறுதல்களையும், அஞ்சலிகளையும் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளின் போது தோளோடு தோள் நின்று உதவியோருக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை உடுத்துறை வடக்கு, தாளையடியில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உடுத்துறை வடக்கு,
தாளையடி.

குடும்பத்தினர்.



## A/L இரசாயனவியல்

Personal & Group Class
(34 வருட வினாத்தாள் கற்பிக்கப்படும்)
S.Anojan, B.Sc. (Chem.sp.)
தொடர்பு:0770781451



## வீடு விற்பனைக்கு

பிரதான வீதி சங்கானையில் 5 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
(அஞ்சல் அலுவலகத்துக்கும் சேச் றோட்டுக்கும் இடையில்)

தொடர்பு- 0776257905



## வேலையாள் தேவை

- ★ சமையலாளர் - (கோக்கி)
- ★ றைஸ் மேக்கர்
- ★ றொட்டி தயாரிப்பாளர்
- ★ தேநீர்/ சிற்றுண்டி தயாரிப்பாளர்
- ★ பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- ★ இந்தியன் உணவு தயாரிப்பாளர்

அனுபவம் உள்ள ஆண்/பெண் இருபாலாரும்
(தங்குமிட வசதி, உணவு இலவசம்)
தொடர்பு: 0215685135

**அம்மா உணவகம்**
266/ஏ, ஸ்ரான்லிறோட், யாழ்.

(36795)



## நீங்காத நினைவில் முதலாம்

நல்லதம்பி விசாலாட்சி
தம்பதியரின் புதல்வன்

**விஜயரத்தினம்**
(இரத்தினம்) திதி-23.04.2013



தோற்றம்
25.02.1948

மறைவு
02.05.2012

ஆண்டொன்று ஆயிற்றோ!
அகத்துன்பம் நீங்கவில்லை
ஈரவிழிகள் காயாது கண்ணை மறைக்கிறதே
ஆறாத்துயர் வந்து நெஞ்சை பிசைகிறது
ஆறுவமோ உம்பிரிவை ஓர் இமைப்போதிலே
அன்று நாம் பட்ட துன்பம்
அலையாகப் பெருகிறது
தேறுதல் சொல்ல நீரும்
மீண்டிங்கு வாரீரோ...

மூன்று கோவிலடி,
உரும்பிராய் மேற்கு.

அன்புடன்:
குடும்பத்தினர்.

# காந்தாரியின் பொறாமை

கௌரவர்களைப் பெற்றெடுத்தவள் காந்தாரி. பாண்டவர்களைப் பெற்றவள் குந்திதேவி. குந்திதேவி இளவயது மங்கையாக இருந்த போது ஒரு முனிவருக்குப் பணிவிடைகள் செய்தாள். அதனால் மனம் மகிழ்ந்த அந்த முனிவர் ஐந்து மந்திரங்களை அவளுக்கு உபதேசித்தார். ''அந்த மந்திரங்களை உச்சரித்தால் தேவர்கள் காட்சி தருவார்கள். நீ வேண்டிய வரங்களைப் பெறலாம்'' என்று அவர் சொல்லியிருந்தார்.

குந்திதேவியின் கணவனாகிய பாண்டு மகாராஜா ஒரு சாபத்தின் காரணமாகத் தன் மனைவியருடன் இன்பம் துய்க்க முடியாத நிலையினை அடைந்தான். மனைவியுடன் சேர்ந்தால் அடுத்த கணமே அவனுக்கு மரணம் சம்பவிக்கும் என்ற சாபம் அவனுக்கு இருந்தது. அதனால் புத்திரப்பேறின்றி பாண்டு மகாராஜன் வருந்தினான்.

கணவனின் வருத்தத்தைக் கண்ட குந்திதேவி இளம் வயதில் தனக்கு முனிவர் கற்றுத் தந்த மந்திரங்களைச் சொன்னாள். அதைப் பயன்படுத்தி பிள்ளை வரம் கேட்கலாம் என்று சொன்னாள். அதைக் கேட்டு மனம் மகிழ்ந்த பாண்டு மகாராஜா அப்படியே செய்வோம் என்றான். அதன்படி யமதர்மராஜன் மூலமாக தருமபுத்திரன் தோன்றினான். வாயு தேவன் மூலமாக பீமன் பிறந்தான். இந்திரன் மூலமாக அருச்சுனன் பிறந்தான். பாண்டு மகாராஜாவுக்கு இரு மனைவியர். ஒருத்தி குந்திதேவி மற்றவள் மாத்ரி தேவி. தனக்கு மூன்று பிள்ளைகள் கிடைத்து விட்டதால் தன் சகோதரியான மாத்ரி தேவிக்கு மற்ற மந்திரங்களைக் குந்தி தேவி உபதேசித்தாள். அதன்படி மாத்ரி தேவிக்கும் நகுலன் சகாதேவன் ஆகியோர் பிறந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் திருதராட்டிரனின் மனைவியான காந்தாரி பரிபூரண கர்ப்பவதியாக இருந்தாள். குந்தியும் மாத்ரியும் பிள்ளைகளை அடைந்துவிட்டார்கள் என்பதை அறிந்த அவள் பொறாமை கொண்டாள். தன் வயிற்றைப் பலமாக இடித்துக் கொண்டாள். அதனால் அவள் தாங்கியிருந்த கர்ப்பம் வெளுக்கட்டியாக வெளியே வந்தது. அவற்றை நூறு குடங்களில் பிரித்துப் பாதுகாத்தார்கள். அந்த நூறு குடங்களிலிருந்து நூறு புதல்வர்கள் தோன்றினார்கள். முதலில் தோன்றியவன் துரியோதனன். அவன் தோன்றிய போதே பல அவலக் குரல்கள் எழுந்தன. இவனால் பல ஆபத்துக்கள் நிகழப்போவதை இந்தச் சகுனங்கள் எடுத்துக்காட்டி நின்றன.

குந்தியும், மாத்ரியும் பிள்ளைகளைப் பெற்றுவிட்டார்கள் என்பதற்காக பொறாமை கொண்டு காந்தாரி தன் வயிற்றை இடித்துக் கொண்டாள். அதனால்தான் அவளுடைய பிள்ளைகள் பொறாமையும் வஞ்சகமும் கொண்டவர்களாக இருந்தார்கள். தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே அவர்கள் பொறாமைக் குணம் படைத்திருந்ததற்கு இதுவே மூல காரணமாகும். 'தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை' என்று சொல்வது போல் தாய் காந்தாரியின் பொறாமைக் குணம் பிள்ளைகளுக்கு வாய்த்தது. ஆனால் காந்தாரி சிறந்த பதிவிரதையாகத் திகழ்ந்தாள். தன் கணவன் கண்பார்வையற்றவன் என்பதனால் தானும் உலகத்தைக் காண விரும்பாது துணியால் கண்களைக் கட்டிக் கொண்டாள். சிறந்த அறிவாளியாகவும்? அவள் இருந்தாள். ஆயினும் பிள்ளைப் பேறு வாய்க்கும் சமயத்தில் குந்தி தேவி, மாத்ரி ஆகியோர் மீது பொறாமை கொண்டு அவள் நடந்து கொண்ட விதம் சரியானதாக இருக்கவில்லை.


பொறாமை என்னும் துர்க்குணத்தின் காரணமாகத்தான் பல ஆபத்துக்களும், அழிவுகளும் தோன்றுகின்றன. சிறு வயது முதல் கொண்டு பாண்டவர்கள் மீது துரியோதனன் பொறாமை கொண்டு நீதிக்குப் புறம்பான காரியங்களையெல்லாம் செய்தான். சூலத்தை நாட்டிப் பீமனைக் கொல்ல நினைத்தான். உணவில் விஷத்தைக் கலந்து அவனை அழிக்கப் பார்த்தான். அரக்கு மாளிகையில் பாண்டவர்களைத் தங்க வைத்துப் பூண்டோடு அழிக்க சூழ்ச்சி செய்தான்.

வஞ்சக சகுனியோடு சேர்ந்து கொண்டு பாண்டவர்களின் இராஜ்ஜியம் செல்வம் அனைத்தையும் கவர்ந்து கொண்டான். பாண்டவர்களை அடிமையாக்கியதோடு திரௌபதியையும் அடிமையாக்கிச் சபையில் அவமானப்படுத்தினான். காட்டுக்குத் துரத்தினான். அங்கேயும் அவர்கள் வாழ முடியாதபடி பல இன்னல்களை ஏற்படுத்தினான். துர்வாச முனிவரின் சாபத்தில் விழுந்து ஒழிந்து போகட்டும் என்று அவரை அங்கே அனுப்பி வைத்தான். வனவாசம் முடிந்து பாண்டவர்கள் வந்தும் கூட இராஜ்ஜியத்தை திருப்பித்தர மறுத்தான். தூது வந்த ஸ்ரீகிருஷ்ணனையே சிறை வைக்க முயன்றான்.

இவ்வளவு தீய செயல்களைச் செய்த துரியோதனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் சபையில் எச்சரிக்கை செய்தார். பாண்டவர்களுடன் சமாதானமாகப் போகாவிட்டால் போர்க்களத்தில் பாண்டவர்கள் உன்னைத் தொலைத்துக் கட்டிவிடுவார்கள் என்று அவர் சொன்னார். இவ்வளவு சொல்லியும்கூட ஊசி முனை நிலமும் பாண்டவர்களுக்குத் தரமாட்டேன் என்று துரியோதனன் சொன்னான். அதனால்தான் போர் மூண்டது. போரில் பாண்டவர்கள் வென்றார்கள். துரியோதனன் குலத்தோடு மடிந்தான். இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்தும் கூட காந்தாரி ஸ்ரீ கிருஷ்ணனை நிந்தனை செய்தாள். நீ வேண்டுமென்றே என் பிள்ளைகளை போரில் ஆழ்த்திக் கொன்றுவிட்டாய். நீ நினைத்திருந்தால் போரைத் தவிர்த்திருக்கலாம். போர் நடக்க வேண்டும் என்பதற்காகவே நீ காரியங்களைச் செய்தாய். அதனால் என்னுடைய நூறு பிள்ளைகளும் மிச்சம் மீதமின்றி மாண்டு போனார்கள். அதனால் உன் குலமும் பூண்டோடு அழியும் என்று அவள் சாபம் கொடுத்தாள்.

அதர்மத்தை அழித்து தருமத்தை நிலைநிறுத்த வந்த ஆண்டவனின் அவதாரமாகிய ஸ்ரீகிருஷ்ணனுக்கே காந்தாரி இத்தகைய சாபத்தைக் கொடுத்தாள். துரியோதனனுக்காக எத்தனையோ அறிவுரைகளை அவர் கூறிப் பார்த்தார். எதையும் கேட்காமல் தன் அழிவுக்கு அவனே காரணமாக ஆனான். அதை அறிந்து கொள்ளாமல் காந்தாரி சாபம் தந்தாள். அவளுடைய பதிவிரதை பலம் காரணமாக அந்தச் சாபம் பலித்தது.

ஆனாலும் அவள் தன் புண்ணிய பலத்தை அதனால் இழந்து போனாள். எம்முடைய சக்தியைத் தருமத்துக்கு ஆதரவாகப் பிரயோகிக்கும் போது நம் முடைய புண்ணிய கணக்கு கூடிக் கொண்டே செல்லும். எமக்கிருக்கும் சக்திகளை அதர்மத்துக்காகப் பயன்படுத்தினால் புண்ணிய கணக்கு குறைந்து பாவக் கணக்கு அதிகரிக்கும். காந்தாரியின் பொறாமை என்னும் துர்க்குணத்தால் அத்தகைய நிலையினை அவள் அடைந்தாள். ஆகவே பொறாமை என்னும் துர்க்குணத்தை நாம் அறவே நீக்க வேண்டும்.



பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# பொன்விழா கண்ட உரும்பிராய் இந்து




(தொடர்ச்சி......)

லக்ஸ்மன்

உரும்பிராய் இந்துக்கல்லூரியில் 1920 இல் வியாகேசர் இடம் மாறிச்செல்ல குமாரசாமி தலைமை ஆசிரியரானார். அவரைத்தொடர்ந்து பி.தம்பு சீதாராமன், இராசரத்தினம், கனகசபை அதிபர்களாக ஸ்ரீநிவாசன், எம்.இளையதம்பி, அ.வைத்திலிங்கம் சச்சிதானந்தன், சுவாமி நாத சர்மா, தியாகராசா, சி.கனகலிங்கம், சிவபாலன், ஈ.சிவானந்தன், செ.சிவபாலன், சி.பாலசுப்பிரமணியம், மா.சண்முகரத்தினம் (பதில் அதிபர்) அ.ஈஸ்வரநாதன் என்போர் கடமையாற்றியுள்ளனர். தற்போதைய அதிபர் அ.அருள்நந்திசிவம் ஆவர்.

குமாரசாமி தலைமை ஆசிரியராக இருந்த சமயம் ஏழாம், எட்டாம் வகுப்புகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் கட்டட வசதிகள் இன்மையால் வைத்திய கலாநிதி வல்லிபுரம் மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்ததை அடுத்து கட்டடம் அமைக்கப்பட்டு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. எட்டாம் வகுப்பு E.S.L.C என அழைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் அதிபராக இருந்த சீதாராமன் மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தக் கூடியதாக ஓய்வு நாள்களிலும் ஆங்கில வகுப்புகளை நடத்தி வந்தார். இதனால் மாணவர்களின் வரவு மேலும் அதிகரித்தது. மேலும் ஒரு கட்டடத்தை அதிகார சபை அமைத்தது. அதில் விஞ்ஞான ஆய்வு கூட அறையும் அமைக்கப்பட்டது. 1932 இல் (ஜே.எஸ்.சி. வகுப்பு) கனிஷ்ட தராதரப்பத்திர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இந்து ஆங்கிலப் பாடசாலை என வழங்கி வந்த கல்லூரியின் பெயர் உரும்பிராய் இந்துக்கல்லூரி எனவும் மாற்றம் பெற்றது. சீதாராமன் இந்தக் கல்லூரியில் மூன்று தடவைகள் தலைமை ஆசிரியராக இருந்துள்ளார். 1941 இல் க.பொ.த. சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

> 1957 இல் ஆசிரியர் சங்கம் உருவாக்கப் பட்டது. அதன் செயலாளராக செ.ஐயாத்துரை நியமிக்கப்பட்டார். 1958 இல் 'பி' தரத்தில் இருந்த இந்துக் கல்லூரி 'ஏ' தரத்துக்கு உயர்த்தப்பட்டது.

கல்லூரியும் தரம் மூன்றுக்கு உயர்த்தப்பட்டது. 1945 இல் இலவச கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தமிழே போதனா மொழியானது. மீண்டும் மாணவர் தொகை அதிகரிக்க மேலும் இரண்டு பரப்பு நிலம் கொள்முதல் செய்யப்பட்டு கொட்டகைகள் அமைக்கப்பட்டன. 1915 ஆம் ஆண்டில் இருந்து இங்கு இயங்கி வந்த தமிழ்ப்பிரிவு 1949 இல் கற்பகப்பிள்ளையார் ஆலயத்துக்குச் சொந்தமான காணிக்கு மாற்றப்பட்டது.

1957 இல் ஆசிரியர் சங்கம் உருவாக்கப்பட்டது. அதன் செயலாளராக செ.ஐயாத்துரை நியமிக்கப்பட்டார். 1958 இல் 'பி' தரத்தில் இருந்த இந்துக் கல்லூரி 'ஏ' தரத்துக்கு உயர்த்தப்பட்டதுடன் ஒரு தொழிற்பாடம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும் அரசு விடுத்திருந்தது.

இந்தப்பிரதேசம் பயிர் செய்கைக்குரிய ஒன்று என்பதால் அதற்கென காணி வாங்கப்பட்டு விவசாயம் தொழில் முன்னிலைப் பாடமாக ஆரம்பிக்கப்பட்டது. பாடசாலைக்கான கட்டடத் தேவை பெரிய பிரச்சினையாக அங்கு காணப்படவில்லை. பெற்றோர் ஆசிரியர்சங்கம் மலாயன் உரும்பிராய் சங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி உதவிகளைப் பெற்று கட்டடத் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளது. தற்போது வடக்குப் பக்கமாக உள்ள மேல் மாடிக் கட்டடம் மலேசியாவில் உள்ள உரும்பிராய் மக்கள் உள்ளூர் மக்கள் அப்போது கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டதே. 1961 ஆம் ஆண்டு பாடசாலையின் பொன்விழா ஆண்டாக இருந்த போதும் அரசு 1960 இல் பாடசாலையைச் சுவீகரித்துக் கொண்டதை அடுத்து பொன் விழா கொண்டாட முடியாமல் போனதெனினும் மண்டபத்துக்கு பொன் விழா மண்டபம் எனப் பெயரிடப்பட்டது. கட்டட வேலைகளுக்குப் புறம்பான பல வேலைகள் நிறைவேற்றப்பட இருந்ததால் கட்டடத்துக்குச் சேகரித்ததில் மிகுதிப் பணமும் ஆரம்ப விழா மூலம் கிடைத்த பணத்துடன் கலையரங்கு அமைக்கப்பட்டு ஆராதனை மண்டபம் விஸ்தரிக்கப்பட்டதுடன் சைக்கிளுக்கான கொட்டகை மலசலகூட புனரமைப்புத் தளபாடங்கள் விளையாட்டு மைதானத்துக்கான ஒரு பகுதி மதில் ஆகியவை அமைக்கப்பட்டன. மலாயன் உரும்பிராய் அங்கத்தவர்களின் சங்கமும் செயலற்றுப்போனதால் அவர்கள் வசமிருந்த ஏழாயிரம் டொலரை அவர்கள் கல்லூரிக்கென அனுப்பி வைத்தனர். அந்தப் பணத்தின் மூலம் நிர்வாக மண்டபம் அமைக்கப்பட்டு மலாயன் உரும்பிராய் சங்க மண்டபம் எனப் பெயரிடப்பட்டது. 1965 இல் வல்லிபுரம் செல்வநாயகம் இதனைத் திறந்து வைத்தார். (முற்றும்)

# அறிவுசார் சமூகத்தை கட்டியெழுப்புவோம்

■ எஸ்.ரி.குமரன்
ஆசிரியர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

உலகம் முழுவதும் ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் உலகப் புத்தக தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. உலக புத்தக தின நிகழ்வானது உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற சிறப்பு நிகழ்வாக உணரப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்களைப் பற்றி விழிப்புணர்வு பெறுவதற்கு புத்தகம் ஒரு சிறந்த கருவியாக விளங்குவதினால் ஏப்ரல் 23 ஆம் திகதியினை ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ வேண்டுகோளின்படி உலக புத்தக தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலகளாவிய அளவில் பல இலக்கிய வாதிகள் இந்த நாளில் பிறந்தோ அல்லது இறந்தோ இருக்கிறார்கள். ஐரோப்பாவில் வாழ்ந்த தலைசிறந்த இலக்கிய வாதியும் நாடக மேதையாகக் கருதப்படுகிறவருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்ததும் இறந்ததும் இந் நாளில்தான் என்பதும் புத்தக தினம் இந்த நாளில் கொண்டாடப்படுவதற்கான விஷேட காரணமாக அமைகிறது.

புனைவுஇலக்கியத்தில் கொடி கட்டிப் பறந்த உலக இலக்கிய வாதிகளுக்கு ஊற்றுக் கண்ணாக விளங்குகின்ற ''டான் குயிக்சாட்'' நாவலைப் படைத்த செர்வாண்டைஸ் என்பவர் 1616 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 ஆம் நாள் காலமானார்.

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் 1770 ஆம் ஆண்டு ஏப்ரல் 23 இல் உயிர் நீத்தார். 1915 ஏப்ரல் 23 இல் கவிஞர் ரூபர்ட் ப்ரூக் காலமானார். 1957 ஏப்ரல் 23 இல் ராய்ஸ்டன் காம்ப்பெல் மறைந்தார். 1992 ஏப்ரல் 23 இல் உலகப் புகழ்பெற்ற சினிமா இயக்குநர் சத்யஜித்ரே இந்த உலகை விட்டு மறைந்தார். இவ்வாறு படைப்புலகத்தோடு நெருக்கமாகிவிட்ட ஏப்ரல் 23 ஆம் நாளினை உலகப் புத்தக நாளாகக் கடைப்பிடிப்பது என்று 1995 இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் கல்வி அறிவியல் மற்றும் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ அமைப்பு அறிவித்தது.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய இந்த நாளை உலகப் புத்தக நாளாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் ஏன் என்பதனை நாம் நோக்குதல் வேண்டும். உலகம் முழுவதும் ஏற்றத்தாழ்வுகளை அகற்றி சமநிலை ஏற்பட அறிவுத் தகவல்களைப் பரவலாக்குவதன் ஊடாக உலக சமநிலை அடையவேண்டியதன் அவசியம் அனைவராலும் உணரப்பட்டமையாகும். அறிவுத்தள சமநிலையின் நோக்கின் காரணமாக 1972 ஆம் ஆண்டு அனைத்து நாடுகளின் புத்தக ஆண்டு என்று அறிவிக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக 1971 ஒக்ரோபர் 22 ஆம் திகதி பிரசெல்ஸ் நகரில் அனைத்து நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், நூலகர்கள், ஆவணத் தொகுப்பாளர்கள், பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அறிவியக்கத் தகவல் பரப்பும் நோக்கில் 10 கட்டளைகள் உருவாக்கப்பட்டன. அனைத்து நாடுகள் மட்டத்திலான வாசிப்பு இயக்கத்துக்கான தொடங்குதலாக இந்தக் கட்டளைகள் அமைந்து விளங்கியது.

அனைவருக்கும் வாசிக்கும் உரிமை புத்தகங்களில் இருத்தல் அவசியம். படைப்பாளியை உருவாக்கும் சமூகச் சூழல் உருவாக்குதல், பதிப்புத் தொழில் வளர்ச்சி, நூலகங்களின் வசதிகள், நூலகங்கள் நாட்டின் கருவூலம், பதிப்பாளர் வாசகர் இணைப்பு, புத்தகங்களைப் பராமரித்தல் , பாதுகாத்தல் மற்றும் ஆவணப்படுத்துதல், அனைத்து நாடுகள் மொழிகளின் புத்தகங்களின் பரிமாற்றம், வாசிப்பு மூலம் உலக உறவு என்பன இந்த 10 கட்டளைகளுக்குள்ளும் அடங்குகின்றன.

இந்த 10 கட்டளைகளின் அடிப்படையில் அனைத்து நாடுகளின் அறிஞர்களினால் தொடர்ந்த விவாதத்தின் விளைவாக 1996 ஏப்ரல் 23 இல் உலகப்புத்தக நாள் அனைத்து நாடுகளிலும் முதல் முறையாகக் கொண்டாடப்பட்டது. உலகப் புத்தக நாள் அறிவிக்கப்பட்டதினை பயன்படுத்தி மேலைய நாடுகள் அதனை அறிவுத்துறை வளர்ச்சிக்கான சாதனமாகப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். குறிப்பாக குழந்தைகள் மத்தியில் வாசிக்கும் பழக்கத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் உலக புத்தக நாளை அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளின் பதிப்பகங்கள் பயன்படுத்தத் தொடங்கின. அறிவுலகப் பண்பாடு மேலோங்கும் வகையில் உலக புத்தக தினத்தையொட்டிய தமது வாழ்த்துக்களினை தம்மிடையே பகிர்ந்து கொண்டார்கள். இதனூடாக அறிவுத்துறை வளர்ச்சிக்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வெற்றிகளினை கண்டார்கள்.

புத்தகம் வாசிப்பதன் ஊடாகவே மனிதன் பூரணமடைகின்றான். வாசிப்பின் ஊடாகவே அறிவார்ந்த சமூகத்தினை கட்டியெழுப்ப முடியும். உண்மையான வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகினை அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய சிறப்பும் அவசியமும் வாய்ந்த புத்தக வாசிப்புப் பண்பாடு மேலோங்கிட உலக புத்தக தினத்தினை நாம் அனைவரும் கொண்டாடுதல் சிறப்புக்குரியதாக விளங்குகின்றது.

எம்முடைய வாழ்வியல் நிகழ்வில் பிறந்தநாள் பரிசாகவும், திருமண நாள் அடையாளமாகவும், குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாகவும், நட்பின் பகிர்தலாகவும் புத்தகங்களை அன்பளிப்பதன் ஊடாக அறிவால் உயர்ந்த சமுதாயத்தினை எம்மால் வளர்த்தெடுக்க முடியும்.

இதனூடாக வாசிப்பின் அவசியத்தினையும் எம்மவர்க்கு உணர்த்திக் கொள்ள முடியும். எனவே அறிவு நிறைந்த சமூகத்தின் உருவாக்கத்தினைக் கருத்தில் கொண்டு உலக புத்தக தினத்தினை நாம் அனைவரும் கொண்டாடுவதன் ஊடாக அறிவால் உயர்ந்த பூரணத்துவமான சமூகம் ஒன்றினை கட்டியெழுப்புவோம். ★



புத்தகம் வாசிப்பதன் ஊடாகவே மனிதன் பூரணமடைகின்றான். வாசிப்பின் ஊடாகவே அறிவார்ந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். உண்மையான வாசிப்பின் ஊடாகவே அறிவுசார் உலகினை அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்று உலக புத்தக தினம்

# தமிழர்களின் பிரச்சினையை இதயசுத்தியுடன் அணுகவில்லை

இந்தியாவின் வெளியக உளவு அமைப்பான ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுத் துறையின் 'றோ' முன்னாள் அதிகாரியான ஜோதி சிங்க அயல்நாடுகளான மியன்மார், பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், இலங்கை போன்றவற்றில் 1999-2004 வரை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆட்சிக்காலத்தில் இந்தியா தனது செல்வாக்கை அதிகரிப்பதில் மிக முக்கியபங்களிப்புவழங்கியிருந்தார்.

அத்துடன் 2001-2004 வரையான காலப்பகுதியில்,இலங்கையில் இந்தியா தனது செல்வாக்கை அதிகரிப்பதற்கான கொள்கை வகுத்தலில் இவர் சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தார். இலங்கையில் இடம்பெறும் தற்போதைய அபிவிருத்திகள் - இந்தியாவின் நலனும் அக்கறையும்' எனும்தலைப்பில்பெங்களூரில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் ஜோதி சிங்க தமிழர் விவகாரம் தொடர்பாக எவ்வாறான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார் என்பது தொடர்பாக THE TIMES OF INDIA ஊடகத்தால் நேர்காணல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் வருமாறு:

**கேள்வி:** புதுடில்லி மற்றும் கொழும்பு ஆகியவற்றுக்கிடையிலான உறவானது, ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்ததன் பின்னர் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?

**பதில்:** இந்தியா தனக்கெதிராக வாக்களித்தது தொடர்பில் இலங்கை மிகவும் குழம்பியுள்ளது என நான் உறுதியாகத் தெரிவிக்கிறேன். ஆனால், இலங்கைத் தீவில் வாழும் குறைந்த எண்ணிக்கையான சிங்களவர்களை விட ஏனையவர்கள் இந்தியாவுடன் மிக ஆழமான, நிலையான உறவைப் பேணவிரும்புகிறார்கள் என்பதை இந்தத் தீவுடன் அதிக நெருக்கத்தைப் பேணும் எவரும் மறுக்கமாட்டார்கள். இந்தியாவுடன் உறவைப் பேண விரும்பும் சிங்களவர்கள் தமது செழுமையானவாழ்வுக்கு இந்தியாவின் ஆதரவும் முயற்சிகளும் தேவை என உணர்கிறார்கள். இந்தியாவின் தமிழ்நாட்டில் எழுந்துள்ள அரசியல் அழுத்தத்தின் காரணமாகவே இந்தியா தனக்கெதிராக வாக்களிக்க வேண்டியேற்பட்டது என்கின்ற நிலைப்பாட்டை இலங்கை உணர்ந்துகொண்டுள்ளது. குறிப்பாக, 2014இல் இந்தியாவில் நடக்கவுள்ள தேர்தல்களில் தமிழ்நாட்டின் ஆதரவும் தேவை என்ற நிலையிலேயே புதுடில்லி ஐ.நாவில் தனக்கெதிராக வாக்களித்தது என்பதை இலங்கை உணர்ந்துள்ளது.

**கேள்வி:** இந்த விவகாரம் தொடர்பில்தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன?

**பதில்:** இலங்கைத் தமிழர் விவகாரத்தை முதன்மைப்படுத்தி தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் தமக்கிடையே போட்டி போடுகின்றன. ஆனால், இவர்கள் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை இதயசுத்தியுடன் கருத்திற் கொண்டிருந்தால் 2008இல் அதாவது இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்த போது இது தொடர்பில் தமது அழுத்தத்தை வழங்கியிருக்க முடியும். அந்த நேரத்தில் இலங்கையில் தொடரப்பட்ட போரைக் கண்காணிப்பதற்கான படை ஒன்றை அனுப்ப வேண்டும் என்றோ அல்லது இதற்கான சுயாதீன அவதானிப்பாளர்கள் மற்றும் ஐ.நா தலைமையின் கீழ் கண்காணிப்பு பிரிவொன்றை அனுப்ப வேண்டும் என்றோ இந்திய மத்திய அரசை தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் வலியுறுத்தவில்லை. அப்போது தமிழர் மீதான இனப்படுகொலை தொடர்பாக எவரும் தட்டிக்கேட்கவில்லை. தற்போது 2014இல் இடம்பெறவுள்ள தேர்தல்களைக் கருத்திற் கொண்டே தமிழ்நாட்டு அரசியல் வாதிகள்,இலங்கைத்தமிழர்கள்விவகாரத்தை முதன்மைப்படுத்தியுள்ளன.

**கேள்வி:** இலங்கையில்வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை இதயசுத்தியுடன் நோக்குகின்ற அரசு அல்லது அரசியல் பிரிவுகள் ஏதாவது உள்ளனவா?

**பதில்:** இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை தமது தாய்நாடாகப் பார்ப்பதை இந்திய அரசு நன்கறியும். இதுதொடர்பில் இந்தியா முழுவதிலும் அனுதாப அலை ஒன்று காணப்படுகிறது. ஆனால், இது தொடர்பில் குரல் கொடுப்பதால் மட்டும் தீர்வுகாண முடியாது. சிங்களவர்களுக்கும் தமக்கும் நலனைப் பயக்கும் நீதியான ஆட்சி முறைமை ஒன்றை உருவாக்குவதற்கு இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவின் உதவி தேவை என்பது அனைத்துக் கட்சிகளினதும் கருத்தாகும்.

**கேள்வி:** இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசியல் பொறிமுறை ஒன்றை எவ்வாறு உருவாக்க முடியும்?

**பதில்:** இலங்கையில் நிலவும் யதார்த்த நிலை ஆராயவேண்டும். இதன் மூலம் இலங்கையில் வாழும் இரு இனங்களுக்கும் இடையில் தீர்வொன்றை முன்வைப்பதற்கு எது சிறந்த வழி என்பதை தீர்மானிக்க முடியும். தமிழர் மற்றும் சிங்களவர்களின் உரிமைகளை மதித்து ஒருவரையொருவர் புறக்கணிக்காது வாழக்கூடிய தீர்வொன்று இதற்கு உகந்ததாக இருக்க முடியும்.

**கேள்வி:** இலங்கை அரசு தொடர்பில் இந்திய மத்திய அரசின் அணுகுமுறை என்ன?

**பதில்:** இலங்கை விடயத்தில் 'பெரிய சகோதரன்' ரீதியான அதிகார உறவுநிலையை இந்தியா காண்பிப்பதானது இதன் எதிர்கால நலன்களுக்கு நன்மை பயக்காது. இந்தியாவானது தனது சிறிய அயல்நாடுகள் தொடர்பான வெளியுறவுக் கொள்கையில் தனது சுய நலனை அதிகரிப்பதை அடிப்படையாகக் கொள்ளாது, அந்தந்த நாடுகளின் சுயநலன்களை மதிக்கக் கூடியவிதமான கொள்கையை வகுக்க வேண்டும். இந்தியாவானது தனது சிறிய அயல்நாடுகளுடன் நல்லதொரு நட்பைப் பேணுவதுடன், தனது நாட்டிலும் அமைதியை ஏற்படுத்த முடியும். இதன் மூலம், எமது அயல்நாடுகளை எமது எதிரிகள் தமக்கான மூலோபாய மற்றும் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடங்களாக மாற்றி அவற்றில் செல்வாக்குச் செலுத்துவதை நாம் அதாவது இந்தியா தடை செய்ய முடியும்.

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## யாருக்கு மதிப்பு?

விருந்தொன்றுக்கு அவசர அவசரமாக முல்லா புறப்பட வேண்டியிருந்தது. நேரமின்மை காரணமாக தோட்டத்தில் வேலை செய்த உடையோடே அவர் விருந்துக்கு சென்றுவிட்டார். சகதி பூசப்பட்ட உடையோடு வந்த முல்லாவை எவரும் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. பணியாளர்கள் சுட ஒருவித முகச்சுழிப்போடே அவரை நோக்கினர்.

அவருக்கு அவமானமாகப் போய்விட்டது. உடனேயே வீட்டுக்கு திரும்பி வந்த முல்லா , தன்னிடம் இருந்த விலையுயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து வாசனைத் திரவியங்களையும் பூசியபின் மீண்டும் விருந்து நடக்கும் இடத்துக்கு வந்தார். இப்போதும் எல்லோர் பார்வையும் முல்லா மீதே. அவரை எல்லோரும் விழுந்து விழுந்து கவனித்தார்கள். தின் பண்டங்களை கொண்டு வந்து அவர் முன் அடுக்கினார்கள் . அப்போது யாரும் எதிர்பாராத வகையில் முல்லா ஒரு காரியம் செய்தார். தின் பண்டங்களையும், குளிர்பானங்களையும் தன்னுடைய சட்டை பையினுள் போட்டார். அவரது உடை முழுதும் நனைந்து போனது.

''ஏன் முல்லா இப்படிச் செய்தீர்கள்? '' என்று எல்லோரும் கேட்டார்கள்.

அதற்கு முல்லா ,

''முதலில் நான் சாதாரண அழுக்கடைந்த உடையோடு வந்தபோது யாரும் இப்படிக் கவனிக்கவேயில்லை . ஆனால் பகட்டான உடை அணிந்து வந்தபோது மட்டும் விழுந்து விழுந்து கவனிக்கிறீர்கள். ஆகவே மரியாதை எனக்கல்ல. இந்த ஆடைக்குத் தானே. எனவே விருந்தின் போது பரிமாறப்பட்ட உணவும் பானமும் இந்த ஆடைக்குத் தானே உரியது. அதனால் தான் அதற்கு கொடுத்தேன்.''என்றார். விருந்தில் நின்றவர்கள் எல்லோரும் வெட்கித் தலைகுனிந்தனர்.

இதே கதை மறுதலையாக நம்நாட்டு வங்கிகளுக்கும் பொருந்துகிறது.

தங்கத்தின் விலை எவரும் எதிர்பாராத வகையில் அதலபாதாளத்தை நோக்கி சரிந்து கொண்டிருக்கிறது. தங்க பிஸ்கட்டுகளின் வரத்து சர்வதேச சந்தையில் இல்லாமல் போனதே இந்தச் சரிவுக்கு பெரிதும் காரணம்.

யாழ்ப்பாணத்தில் கிட்டத்தட்ட 57 ஆயிரம் ரூபா வரையில் விலை போன ஒரு பவுண் [8 கிராம்] தங்கம் தற்போது 35 ஆயிரத்துக்கும் வாங்குவாரற்று கிடக்கிறது. தங்கத்தின் விலை உச்சத்தில் இருந்த போது, வாடிக்கையாளர்களை வகை வகையான விளம்பரங்கள் மூலம் தங்க நகைகளை அடைவு வைத்து அதிக பணம் பெறலாம் என்று ஆசையூட்டின இந்த வங்கிகள். இந்த விளம்பரங்களால் கவரப்பட்ட ஏராளமானோர் தங்கள் நகைகளை வங்கிகளில் அடைவு வைத்து அவசர தேவைகளுக்கான பணத்தை பெற்றிருந்தார்கள். அப்போதெல்லாம் வாடிக்கையாளர்களே எங்கள் தெய்வங்கள் என்ற ரீதியில் வாய் நிறைய சிரிப்போடு, தங்க நகைகளை அடைவுக்காக வாங்கிக் கொண்ட அதே வங்கிகள், தங்கத்தின் விலை சரிந்ததும் உடனடியாக அடைவு வைத்த நகைகளை மீட்டு, புதிய விலைக்கேற்ப மீண்டும் அடைவு வைக்கும்படி கண்டிப்பான தொனியில் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளன.

கையில் இருந்த பணத்தையும், அடைவு வைத்து பெற்ற பணத்தையும் அவசர தேவைகளுக்காக செலவிட்டவர்கள் இந்த அறிவுறுத்தல்களால் அதிர்ந்து போயுள்ளார்கள். வங்கிகளும் மதிப்பது மனிதர்களை அல்ல. அவர்களின் தங்கத்தை தான் என்பதை நிரூபித்திருக்கின்றன.

# அமைச்சர்களையும் அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியுள்ள மின்சாரக் கட்டணம்

சண்டே ரைம்ஸ்
கட்டுரையில் இருந்து
■ கோகுலன்

மின்சாரக் கட்டண உயர்வானது அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் கூட அதிர்ச்சியளிப்பதாகவே இருந்துள்ளது. கடந்த வியாழக்கிழமை நடந்த அமைச்சரவை கூட்டத்தில் இந்த விடயத்தை அலசுவதற்காக சிறப்பு அமைச்சரவை கூட்டத்தை நடத்தும்படி ஜனாதிபதியை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கேட்டுக்கொண்டார். மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னி ஆராய்ச்சி கூட்டத்துக்கு வந்திருக்காமையால் அவருடன் பேசிவிட்டு தகவல் தருவதாக ஜனாதிபதி அமைச்சருக்கு பதில் கூறினார்.

அவ்வாறான ஒரு கூட்டம் நடைபெறுமா என்பது சந்தேகமாக இருந்தாலும், பல அமைச்சர்கள் தமது வாக்காளர்களை எதிர்கொள்ளமுடியாத நிலையேற்பட்டிருப்பதாக தனிப்பட்ட முறையில் குறை கூறிக் கொண்டார்கள். அவ்வாறு கூட்டமொன்று நடைபெற்றாலும் மின் கட்டண உயர்வு என்பது முடிவுற்ற விடயமாகிவிட்டது.

அடிமட்ட மற்றும் இடைநிலை வருமானமுள்ள குடும்பங்களை முடக்கிவிடக்கூடிய விளைவுகளை ஏற்படுத்தும் வகையிலான இவ்வாறான பெரும் கட்டண உயர்வு ஏன் ஏற்படுத்தப்பட்டது என்பதை அரசு இன்னமும் தெளிவாக விளங்கப்படுத்தவில்லை. அரசின் அதிகாரபூர்வ பேச்சாளரான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்தில் ஏழ்மையிலுள்ள பிரிவினரை கட்டண உயர்வு பாதிக்கமாட்டாது என்று கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் அரசு தொடர்ந்தும் மக்கள் பயன்பாட்டு சேவைகளுக்கு மானியம் வழங்கிக் கொண்டிருக்க முடியாது என்றார்.

சர்வதேச நாணய ஒத்துழைப்புத் துறை அமைச்சர் சரத் அமுனுகம பேட்டியொன்றில் கருத்து வெளியிடுகையில் தொலைக்காட்சி பார்க்க, தமாஷா நிகழ்வுகளுக்கு ஒளி ஏற்ற, மற்றும் பல்வேறு விழா நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஒளி வழங்குவதற்கு எம்மால் மானியம் வழங்கிக் கொண்டிருக்க முடியாது. அவைகளுக்கு அவர்கள்தான் பணம் செலுத்த வேண்டும். மின் உற்பத்திக்கான சரியான கட்டணத்தை அவர்கள் செலுத்தியாக வேண்டும் என்றார். ஆனால் பெருமளவின் மின்சாரமானது அரசு நடத்தும் ''தமாஷா'' நிகழ்வுகளுக்கே செலவிடப்படுகிறது என்பதை அமைச்சர் உணரத் தவறிவிட்டனர். அரச தரப்பு பல்வேறு நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தப்படும் மின்சாரத்துக்கு வரியிறுப்பாளர்களே மானியம் வழங்கும்படியாக நெருக்கப்படுகிறார்கள். இதற்கு உதாரணமாக பெயர் குறிப்பிட விரும்பாத பொறியியலாளர் ஒருவர் பின்வரும் தகவலை வெளியிட்டார்.

அம்பாறையில் கடந்தமாதம் இடம்பெற்ற தேசத்துக்கு மகுடம் நிகழ்வைக் குறிப்பிடலாம். அதற்கு பயன்படுத்தப்பட்ட மின்சாரமானது ஒரு கிராமத்துக்கு மூன்று மாதங்களுக்கு அதிகமாக இலவசமாக வழங்கக்கூடியதாக இருந்துள்ளது என்றார் அவர்.

மின்வெட்டு தொடர்பாக குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. செயற்படவில்லை. பதவி நீக்கப்பட்ட பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விடயத்திலும் அந்தக்கட்சி இவ்வாறே நடந்துகொண்டது. மக்களைப் பாதிக்கும் விடயங்களில் அந்தக்கட்சி இவ்வாறு ஏனோ தானோவென்று நடந்து கொண்டிருப்பதானது, விரைவில் வரவிருக்கும் மே தினம் மற்றும் உள்ளூர் தேர்தல்களில் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரலாம். ஜே.வி.பி. கட்சியானது மக்களை மின்கட்டணத்தை செலுத்தவேண்டாம் என்று மக்களுக்குயோசனை தெரிவித்துள்ளது. பாவனையாளர்களை இவ்வாறு தனிமைப்படுத்திவிட்ட அவர்களின் தலைமைகள் இனிமேல் இருளில் இருக்கப் போகிறார்களா என்பது தெரியவில்லை. பாவனையாளர்கள் இனி தமது போராட்டத்தைத் தாங்களே தனித்து நடத்தும்படி விடப்பட்டுள்ளார்கள்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தனது நட்டங்களுக்கெல்லாம் உலக எண்ணெய் விலைகளின் மாற்றங்களுக்குள்ளாகிவருவதே காரணம் என்று தொடர்ச்சியாகக் கூறிவந்துள்ளது. ஆனால் மத்திய வங்கியின் அறிக்கையின்படி 2012 ஆம் ஆண்டில் கசடெண்ணெயின் விலையானது பெரிதும் மாறுபாடான நிலையிலேயே இருந்தது. ஆனால் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் கசடெண்ணையின் சராசரி விலை பெரும்பாலும் மாற்றமுறாமலே இருந்துள்ளது.

எனவே 2012 ஆம் ஆண்டு எண்ணெய் விலையை 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது கசடெண்ணையோ சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயோ அதிகரிக்காமலே இருந்துள்ளது என்பதைத் தெளிவாக புரிந்து கொள்ளலாம். எனவே பெற்றோலிய கூட்டுத்தாபனமோ, இலங்கை மின்சார சபையோ பெரும் அளவில் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனவென்றால் அதற்கு காரணம் ரூபாவின் மதிப்பு விரைவாக குறைந்து வந்துள்ளமையே. அத்துடன் நாட்டில் நிலவிய வறட்சி நிலையும் ஓரளவுக்கு காரணமாயுள்ளது . இதற்கு எரிபொருள் பாவனையில் மின்சார உற்பத்தியை குறிப்பிடலாம்.

ரூபாவின் மதிப்பிறக்கம் எப்படி நடைமுறைக்கு வந்தது என்ற கேள்வி இப்பொழுது எழுந்துள்ளது. இது மானியம் தொடர்பான முக்கிய கேள்வியையும் எழுப்புகின்றது. அவ்வாறு ஒன்று இருந்திருப்பின் எங்கு, எந்த முறையில் அது நடைமுறையில் இருந்தது என்பதாக மின்சார சபை நிபுணர் ஒருவர் கேட்டார். இது வெறும் பிரசாரம் மட்டுமே என்றார் அவர். மானியம் வழங்கப்பட்டது என்பதற்கு மாறாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபை என்பன நீண்டகால தவணையில் பெற்றிருந்த கடன்களை ஒரு பகுதியாக அல்லது முற்றிலுமாக அரச வங்கிகளால் ஈர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. எனவே நுகர்வோர்தான் மானியம் என்று சொல்லப்படுகின்ற சுமையை தாங்கும்படியாக செய்யப்பட்டுள்ளனர். இது மானியத்தினால் அல்ல ரூபாவின் மதிப்பு இறக்கப்பட்டதனால் வந்த விளைவு என்றார் அவர்.

### மனித உரிமை மீறல் அமெரிக்கா அறிக்கை

மனித உரிமை நடைமுறைகள் தொடர்பான அமெரிக்க நாட்டு அறிக்கையை ராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி வெளியிட்டிருக்கின்றார். இலங்கை தொடர்பாக கடுமையான குற்றச்சாட்டுகளை பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தொடர்பாக சில குறிப்பிட்ட கருத்துக்களையும் அறிக்கையில் காண முடிகின்றது.

அதில் காணப்படும் இலங்கை 2012 ஆம் ஆண்டு மனித உரிமை மீறல்கள் தொடர்பான நீண்ட விமர்சனத்தில் சில வருமாறு;

பிரதான மனித உரிமை பிரச்சினைகள் ஆவன, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று கருதப்படும் நபர்கள், அரசுடன் இணைந்தவர்களால் ஊடகவியலாளர்கள் முதலானோர் மீதான தாக்குதல்கள் அச்சமான சூழ்நிலையை உருவாக்கி தம்மைத்தாமே தணிக்கை செய்து கொள்ள வைப்பது, தன்னிச்சையின்றி காணாமற் போதல், கடந்த வருடங்களில் காணாமற் போன ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்பான பொறுப்புக்கூறல், விரிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தண்டனைகளிலிருந்து விலக்களித்தல், குறிப்பாக பொலிஸார் செய்யும் வதைகள் ஊடக நிறுவனங்கள் மற்றும் நீதித்துறை மீதும் தாக்குதல் நடத்துவது போன்றவையாகும்.

பாரதூரமான மனித உரிமை பிரச்சினைகளாவன; பாதுகாப்பு படையினரால் மற்றும் அரச சார்ந்த ஆயுதக்குழுக்களால் பெரும்பாலும் தமிழ்ப்பகுதிகளில் நடத்தப்படும் சட்டவிரோத கொலைகள், தடுப்புக் காவலில் உள்ளவர்கள் மீது பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினரால் நடத்தப்படும் வதைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள், சிறைச்சாலைகளின் மோசமான நிலைமைகள், அதிகாரிகளால் ஆள்கள் ஒருதலைபட்சமாக கைது செய்து நீண்ட காலம் காவலில் வைத்திருத்தல், விசாரணைக்கு முன் நீண்டகாலம் காவலில் வைத்திருப்பதும் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது.

நியாயமான பகிரங்க விசாரணை நடத்தப்படாமையும் பிரச்சினையாகவிருக்கின்றது. கடந்த வருடத்தில் நீதித்துறையின் சுயாதீனத்தை சீரழிக்கும் ஒருங்கிணைந்த அரசின் செயற்பாடுகள் காணப்பட்டுள்ளது. நபர்களின் இரகசியம் பேணும் உரிமையில் அரசு தலையீடு செய்துள்ளது. பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் மற்றும் நகர்தல் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்தின் கீழ் பொலிஸார் ஒரு சிறப்பு அலகை வைத்திருக்கிறார்கள். இதன் பணி ராஜபக்ஷ குடும்பத்தினர் தொடர்பாக ஊடகங்களில் வரும் விடயங்களைக் கண்காணிப்பதும் கட்டுப்படுத்துவதுமாகும். அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அரசுக்கு மாறான ஊடகங்களால் விளம்பரங்கள் வெளியிடுவதற்கு மாறாக தொடர்ச்சியாக கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வார சம்பவங்களை கவனத்தில் எடுக்கும்போது கொழும்புக்கும் வோஷிங்டனுக்குமிடையிலான உறவுகள் தொடர்ந்தும் சீரற்றதாகவே இருக்கப்போகிறது என்பது வெளிப்படை. கடந்தவாரம் தான் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அமெரிக்கா தொடர்பான இலங்கையின் கொள்கையில் மாற்றமில்லை என்று அறிவித்திருந்தார்.

எதுவானாலும் எவ்வளவு காலத்துக்கு ரூபாவின் மதிப்பை அமெரிக்க டொலருக்கு 126 ரூபாவாக வைத்திருக்க அரசால் முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது. ரூபாவின் மதிப்பு குறைந்தால் இறக்குமதி செலவு அதிகரிக்கும். அதனால் பாவனையாளர்களின் சுமை அதிகரிக்கும். அது போலவேதான் எரிபொருள், மின்சார கட்டண அதிகரிப்பும் இருக்கப் போகின்றது. எனவே அரசானது அலங்காரமான அறிக்கைகளை பொருளாதார அபிவிருத்தி பற்றி விடுத்துக்கொண்டிருப்பதை நிறுத்த வேண்டிய கட்டம் வந்துள்ளது. மறைந்து கிடைக்கும் உண்மை நிலை எவ்வளவு சீக்கிரம் நிர்ணயமாகின்றதோ அவ்வளவுக்கு நாட்டுக்கும் நல்லது மக்களுக்கும் நல்லது. இல்லையென்றால் முட்டாள்களின் சுவர்க்கத்தில் நாம் வாழ்பவர்களாய்த்தான் இருக்கப்போகிறோம்.

★

# ஆண்டு முழுவதற்குமான புத்தாண்டு மகிழ்ச்சியை எல்.பீ. வழங்குகிறது

நிதிச் சேவைகள் துறையில் முன்னணி ஸ்தானத்தையும், நம்பிக்கை நாமத்தையும் பெற்றுள்ள எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனம் தமிழ்-சிங்கள புத்தாண்டில் நாடெங்குமுள்ள மக்களின் மகிழ்ச்சியைப் பெருக்குவதற்காக தனது நிலையான வைப்பு வாடிக்கையாளர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசுகளை வழங்க இருக்கிறது.

இந்த ஊக்குவிப்புத் திட்டம் பற்றி எல்.பி.ஃபினான்ஸ் துணை பொது மேலாளர் திரு.றொஷான் ஜயவர்த்தன தகவல் தருகையில்;"

"நாம் எமது வாடிக்கையாளர்களின் வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி வீதத்தை வழங்குவதுடன், அவர்களின் வைப்புத் தொகைக்கேற்ப பெறுமதிமிக்க பரிசுகளையும் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். வாடிக்கையாளர்களுக்கான வட்டியை எந்த விதத்திலும் குறைக்காமல் பரிசுகள் வழங்கப்பட இருப்பது இந்த திட்டத்தின் சிறப்பம்சமாகும்" என்று கூறினார்.

குறைந்த பட்சம் 6 மாத காலத்துக்கு ரூ.25,000க்கு குறையாத தொகையை நிலையான வைப்பிலிடும் வாடிக்கையாளர்களே பரிசுகளுக்கு தகுதி பெறுவார்கள். அவர்களின் வைப்புத் தொகைக்கேற்ப LED தொலைக்காட்சி, ஹோம் தியேட்டர், டிவிடி பிளேயர், மின்சார ஓவன், றைஸ் குக்கர், மல்டி குக்கர், பிளென்டர், டப், சுவர்க் கடிகாரம், உடற்பயிற்சி உபகரணம், பயணப்பொதி, புத்தகப்பை, தண்ணீர் கூஜா போன்ற பரிசுகள் வழங்கப்படும்.

எல்.பீ.ஃபினான்ஸ் இலங்கையிலுள்ள தலைசிறந்த கூட்டு நிறுவனங்களில் ஒன்றாகிய வெலியல் வண் குழுமத்தின் பக்க பலத்துடனும் இயங்கும் உப நிறுவனமாகும். வெலியல் வண் குழுமம் அதன் தலைவரான பிரபல தொழில் அதிபர் தம்மிக்க பெரேராவின் வழிகாட்டுதலில் தொடர்ச்சியாக முன்னேறி வருகிறது. சில்லறை வர்த்தகம், வங்கிச்சேவை, ஹொட்டேல் மற்றும் சுற்றுலா, விவசாய உற்பத்தி, கட்டுமானம் போன்ற பல துறைகளில் அதன் செயற்பாடுகள் பரந்துள்ளன.

கொழும்பு மாநகரில் சர்வதேச மட்டத்திலான சகல வசதிகளுடனும் இயங்கிவரும் எல்.பீ.ஃபினான்ஸ் தலைமை அலுவலகம் வாடிக்கையாளர்களுக்குச் சகல விதமான தரமுயர்ந்த நிதிச் சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் வழங்குகின்றது. இதனைத் தவிர நாடெங்குமுள்ள 125 எல்.பீ.ஃபினான்ஸ் கிளைகள் மூலம் நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இந்த சேவைகளைப் பெற்று வருகிறார்கள்.

நிலையான வைப்புகளுக்கு முக்கிய இடத்தை அளிக்கும் எல்.பீ. ஃபினான்ஸ் நிறுவனம், அதனைத் தவிர குத்தகை, வாடகைக் கொள்வனவு, உள்நாட்டுப் பணப்பரிமாற்றம், தங்கக் கடன்கள், நுண்ணளவு நிதியுதவி, ஃபக்டரிங், இலாப வர்த்தகம், இஸ்லாமிய நிதிச் சேவைகள் ஆகிய வசதிகளை தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. இந்த நாட்டின் நிதிச் சேவைகள் துறையில் எல்.பீ.ஃபினான்ஸ் வகிக்கும் உறுதியான நிலையை ஊர்ஜிதம் செய்யும் வகையில், RAM ரேட்டிங் (லங்கா) லிமிடட் அதற்கு A-P2 தரப்படுத்தலை வழங்கியுள்ளது.

இப்புத்தாண்டில் சுப நேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்ய விரும்பும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக நாடெங்குமுள்ள சகல எல்.பீ. ஃபினான்ஸ் கிளைகளும் திறந்திருந்தன. நிலையான வைப்பாளர்களுக்கான புத்தாண்டுப் பரிசுகளையும் இந்தக் கிளைகளின் ஊடாகவே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பரிசுகள் உங்கள் அன்றாட வாழ்க்கையை இலகுவாக்குவதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

# அக்கரைப்பற்றில் LCBC இன் கிளை!



இலங்கை மாணவர்களுக்கான எல்.சி.பீ.சி. (London College of Business and Computing ) கெம்பஸ் எனும் தொழில்சார் கல்வி நிறுவனத்தின் அம்பாறை மாவட்டத்திற்கான கற்கை நிலையம் அண்மையில் அக்கரைப்பற்று பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.சி.ஏ.எம். ஜவாஹிர் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இக்கற்கை நிலையத்தினை நாடா வெட்டி வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.அஹமட் கியாஸ், அக்கரைப்பற்று கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) அதிபருமான எம்.ஐ. எம்.சஹாப்தீன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். அத்தோடு மேலும் பல கல்வியியலாளர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு ஆங்கிலம் கணினி, பட்டய கணக்காளர்(CIMA), நில அளவை(Q.S) கட்டிட நிர்மாணம், ஆகிய பாடநெறிகளுக்கு அன்றைய தினம் மாணவர்களுக்கான நுழைவு அனுமதியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# E-tel Android Curiosity i3

## ஸ்மார்ட் போன்களை (Smart Phone) வெற்றிகரமாக அறிமுகப்படுத்திய Brantel




இலங்கையின் மொபைல் சந்தையில் முன்னணி வகிக்கும், Brantel Lanka (Pvt) Ltd இலங்கையில் அறிமுகப்படுத்திய அதன் முதலாவது Android செயற்பாட்டுத் தொகுதியுடனான E-tel Android i3 ஸ்மார்ட் போன், இலங்கைப் பாவனையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. E-tel Android Curiosity i3 ஸ்மார்ட் போன்கள், (Ginger bread) அதன் மிகச் சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன், அழகிய தோற்றத்தில் வாடிக்கையாளர்களுக்கு கட்டுப்படியான விலைகளில் சந்தையில் கிடைக்கின்றது. Brantel Lanka (Pvt) Ltd ன் முக்கிய வர்த்தக நாமமான E-tel, இலங்கையில் எல்லோருக்கும் ஸ்மார்ட் போன்கள் கட்டுப்படியான விலைகளில் கிடைப்பதை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது. 'பணத்திற்கான பெறுமதியைத் தரும் ஸ்மார்ட் போன்கள்' எனும் Brantel Lanka (Pvt) Ltd வினது இந்தப் பயணத்தில், கியூரி யோசிட்டி i3 முதற்படியாகும்.

புதிதான முன்னேற்றகரமான Skype மற்றும் Viber என்பனவற்றோடு இணையில்லாத பல வசதிகளையும் E-tel Android Curiosity i3 ஸ்மார்ட் போன் தன்னகத்தே கொண்டுள்ளது. அதிநவீன விலையுயர்ந்த அன்ரொயிட் போன்களில் மட்டும் காணப்படும், Skype Video Calls வசதிகள் இப்புதிய போன்களிலும் காணப்படுவது ஒரு சிறப்பம்சமாகும். HSPDA, 3G வீடியோ அழைப்பு வசதிகள், இணைய வசதிகள், திரை அடுக்கப்பட்டது போன்று காட்சி தருகையில், திரையில் தோன்றுபவையும் அடுக்கப்பட்டது போலக் காட்சி தரும் G-Sensor கொண்ட இரட்டை SIM போன் வசதி மற்றும், வீடியோ அழைப்புகளுக்கு வழிவகுக்கும், தங்குதடையற்ற பார்வைப்புலம் கொண்ட Dual Camera வசதி என்பனவற்றைக் கொண்டவை.

E-tel Android Curiosity i3 ஸ்மார்ட் போன்களுக்கு இலங்கையில் கிடைத்த பெரும் வரவேற்பு, E-tel ஐ திருப்தியும் மகிழ்ச்சியுமடையச் செய்துள்ளது.

E-tel Android Curiosity i3 ஸ்மார்ட் போன்கள் 1650 mAh வலுக் கொண்டவை. இது அதிநவீன அன்ரொயிட் போன் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும், மிக விரைவில் பற்றரி தீர்ந்து விடும் பிரச்சினைகளைத் தீர்க்க வல்லது. E-tel அன்ரொய்ட் கியூரியோசிட்டி i3 ஸ்மார்ட் போன்களின் நீண்ட நேரம் செயற்படக்கூடிய பற்றரிகள், செயற்பாட்டின் போது ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தீர்க்கவல்லது. E-tel அன்ரொய்ட் கியூரியோ i3 ஸ்மார்ட் போன்களுக்கு, இலங்கை வாடிக்கையாளர்களிடையே அதிக கேள்வி இருப்பதனால், Brantel Lanka (Pvt) Ltd அன்ரொயிட் செயற்பாட்டுத் தொகுதியுடன் கூடிய, கியூரியோசிட்டி ஸ்மார்ட் போன் வரிசையை, கட்டுப்பாட்டு விலையில் இலங்கையில் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது. (த)

# புதிய இன மிளகாயை அறிமுகம் செய்தது ஹேலீஸ்

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பணப்பயிர்ச் செய்கையாக "களப்பினோ" மிளகாய்ப் பயிர்ச்செய்கையை ஹேலீஸ் நிறுவனம் வன்னிப் பெரு நிலப் பரப்பில் அறிமுகம் செய்துள்ளது. 200 விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர். விவசாயிகளுக்கு வட்டியில்லாத கடன் உதவி, தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டல் என்பனவற்றை இலவசமாக ஹேலீஸ் நிறுவனம் வழங்கி வருகின்றது.

ஏற்றுமதி செய்யும் பணப் பயிராக கோர்க்கின் பயிர்ச்செய்கையை அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்திவரும் நிலையில் இரண்டாவது பணப்பயிராக 'களப்பினோ' மிளகாய் பயிர்ச்செய்கையை அறிமுகம் செய்துள்ளது. வன்னிப் பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 200 விவசாயிகள் மிளகாய் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

'களப்பினோ' மிளகாய் உள்நாட்டு பாவனையில் இல்லாமல் முழுமையாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கிலோ ஒன்று 50 ரூபாவுக்கு குறையாமல் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும். மிளகாய் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வட்டியில்லாத கடன்வசதி வழங்கப்படுவதோடு, கடன் மிளகாய் அறுவடை செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்படும்போது பகுதி பகுதியாக அறவீடு செய்யப்படும். அத்துடன் பயிர்ச்செய்கை தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனை வழிகாட்டல் மற்றும் உதவிகள் இலவசமாக வழங்கப்படும்.

கால் ஏக்கரில் இருந்து அரை ஏக்கர் வரையிலான நிலப் பரப்பில் களப்பினோ மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் முல்லைத்தீவு, தேராவில், இளங்கோபுரம், உடையார்கட்டு, சுதந்திரபுரம், வள்ளி புனம்,விசுவமடு தெற்கு, விசுவமடு மேற்கு, பிரமந்தன்ஆறு, கிளிநொச்சி, மாங்குளம், கல்மடு பெரியகுளம், வன்னி விளாங்குளம் பகுதியில் உள்ள விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபட்டுள்ளனர்.

"நீள்வட்ட உருவம்கொண்ட தொப்பை மிளகாய் முழுமையாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உள்நாட்டுப் பாவனையில் இல்லை. ஒரு கிலோ 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும். விலைத் தளம்பல் இருக்காது. விவசாயி கள் உற்பத்தி செய்யும் மிளகாய் முழுவதும் ஹேலீஸ் நிறுவனத் தினால் கொள்வனவு செய்யப்படும் எனத் தெரிவித்த ஹேலீஸ் நிறுவனத்தின் ஏற்றுமதி துறைக்கான பிரதிப் பொது முகாமையாளர் ச.மகேந்திரராஜ் வன்னிப் பெருநிலப்பரப்பு விவசாயிகள் நாளாந்தச் சம்பளத்தை பெற்றுக் கொள்ளும் தொழில் துறையில் அதிக ஈடுபாடு காட்டுவதால் சுயதொழில் முயற்சியில் ஆர் வத்தோடு ஈடுபாடு கொள்ளத் தயங்குகின்றனர்.

இதனால் வாழ்வாதார மேம்பாட்டுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் மேலதிக சிரமங்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார். (த-11)

# தென்மராட்சியில் நடைபெற்ற புத்தாண்டு விளையாட்டு விழா





தென்மராட்சி,ஏப்.23

தமிழ் - சிங்கள புத்தாண்டையொட்டிய தென்மராட்சி பிரதேச மக்களுக்கான விளையாட்டு விழா நேற்று முன்தினம் காலை 7 மணி தொடக்கம் நடைபெற்றன.

523 ஆவது படையணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழாவை 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.ஏ.டபிள்யு.அனுர சுதசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் 523 ஆவது படையணி கட்ட்ளைத் தளபதி பிரிகேடியர் அத்துள மாரசிங்க, 11 இலகு காலாட்படை நகர கொமாண்டர் கேணல் கேமரத்ன, தென்மராட்சி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திலகரட்ண, சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வன்னியாராச்சி, சாவகச்சேரி பிரதேச சபை தலைவர் சி.துரைராசா, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஆண், பெண்களுக்கான மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் உட்படப் பல விளையாட்டுக்கள் இடம்பெற்று அவற்றில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (வ-9)

# ஓய்வூதிய அங்கத்தவர் நலன் கருதி திட்டங்கள்

## பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தால்

தென்மராட்சி, ஏப்.23

பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம் ஓய்வூதிய அங்கத்தவர்களின் நலன்கருதி பல்வேறு அனுகூலத் திட்டங்களை வழங்கவுள்ளதாக தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி நிதிய தென்மராட்சிக் கிளைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. நிதிக் கூட் டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மரண பணிக்கொடை, பிள்ளைகளின் கல்வி நிதி வைத்தியச் செலவுக் கொடுப்பனவு போன்றவற்றை வழங்கவுள்ளது. நிதிய அங்கத்தவர் நோய்வாய்ப்பட்டு அரச தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் வேளையில் பத்துத் தினங்களுக்கு மருத்துவச் செலவாக 2 ஆயிரம் ரூபா வரை வழங்கவுள்ளது. அத்துடன் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்வோருக்கு ஒரு கண்ணுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. மருத்துவ சிகிச்சை முடிந்து வெளியேறி பத்துத் தினங்களுக்குள் பற்றுச்சீட்டுக்களை அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களின் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி பெற்றால் முதலாவது வருட கல்வியின்போது 3 ஆயிரம் ரூபா வழங்கப்படும். அங்கத்தவரின் இரண்டு பிள்ளைகளுக்கு வழங்கப்படவுள்ளது.

அங்கத்தவராக இணைந்து 7 வருடங்களைப் பூர்த்தி செய்த ஒருவருக்கு மரண பணிக்கொடையாக அவர் செலுத்திய தொகையின் பத்து மடங்குக்கும் மேலதிகமாக 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. அத்துடன் ஓய்வூதியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா, 15 ஆயிரம் ரூபா கடன் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## கொடிகாமம் பொதுச் சந்தை குறைபாடுகளுக்குத் தீர்வு



தென்மராட்சி,ஏப்.23

கொடிகாமம் பொதுச் சந்தையில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்ற சாவகச்சேரி பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி சந்தையில் நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு அந்தப் பகுதி வர்த்தகர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோரால் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை ஏற்று மதிப்பளித்த பிரதேச சபை அவற்றைச் சீர்செய்ய சபை நிதியிடமிருந்து நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவுள்ளது.

கொடிகாமம் பொதுச் சந்தையில் உள்ள வடிகால் புனரமைப்பு, மலசலகூட அமைப்பு, மதில் அமைப்பு, பஸ் நிலையத்தில் உள்ள மலசலகூட திருத்தம், பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் குழாய்க் கிணறு அமைத்து குடிதண்ணீர் விநியோகம், வேலிகளுக்கு வலைக்கம்பி பொருத்துதல் போன்ற பணிகளுக்கு சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## உதயபுரத்துக்கான பாடசாலை பஸ் சேவை திட்டம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.23

கொழும்புத்துறை, உதயபுரம் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிக்காக தற்போது ஆரம்பிக்கப்படவிருந்த நேரடி பஸ் சேவை திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் அ.ரவீந்திரதாசன் தெரிவித்தார்.

மணியம்தோட்ட சந்தியில் இருந்து கடற்கரை வீதி வரைக்குமான பிரதான மார்க்க வீதி முழுமையாக புனரமைக்கப்பட்ட பின்னரே உதயபுரம் வரைக்குமான வட பிராந்திய போக்குவரத்து சபை பஸ் சேவையை ஆரம்பிக்க முடியும்.

இந்தப் பகுதி பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்கான பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னேற்பாடாக பரீட்சார்த்த பஸ் சேவை ஒன்று நடத்தப்பட்டது.

குறித்த பிரதேசத்தின் பிரதான கடற்கரை வீதி பலத்த சேதமடைந்துள்ளதால் வீதியுடனான பஸ் சேவையை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

அதனை அடுத்து குறித்த பிரதான வீதியை உடனடியாக புனரமைப்புச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-17)

## யாழ்.பல்கலை நுண்கலை மாணவிக்கு லண்டனில் விருது

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவியான பயித்தா ஜெயபாலனுக்கு லண்டனில் இயங்கும் தமிழ்க்கலை கலாசார நிலையமான ஜெயாஞ்சலி விருது கிடைத்துள்ளது.

குறித்த நிறுவனத்தால் இலங்கையில் நடத்தப்பட்ட நாட்டிய பரீட்சையில் சித்திபெற்று நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் விருதைப் பெற்றுக்கொண்டதுடன் அங்கு நடைபெற்ற நாட்டிய நிகழ்விலும் பங்குபற்றினார்.

திருகோணமலை செல்வநாயக புரத்தைச் சேர்ந்த ஜெயபாலன் தம்பதியரின் புதல்வியான இவர் திருகோணமலை இராஜரட்ண நடனாலய நிறுவுநர் நாட்டியக் கலைமணி, நாட்டிய வித்தகி ரேணுகாதேவி செல்வபுத்திரனின் மாணவியும் ஆவார். (வ-9)



# நடத்துநருக்கும் பயணிக்கும் முரண்பாடு கல்லெறித் தாக்குதலுக்கு உள்ளானது பஸ்

யாழ்ப்பாணம், ஏப்.23

நடத்துநருக்கும், பயணிக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக 769 வழி தனியார் பஸ் கடந்த வெள்ளிக்கிழமை கல்லெறித் தாக்குதலுக்கு உள்ளாகியது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான தனியார் பஸ் சங்கத்தினரும், பொது மக்களும் ஒன்றுக்கொன்று முரணான தகவலைத் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மாவிட்டபுரம் நோக்கிச் சென்ற 769 தனியார் பஸ்ஸில் நேற்றைய தினம் பயணிக்கும் நடத்துநருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய பயணி ஒருவரை பஸ்ஸில் பயணிகள் குறைவு வைத்தியசாலைக்குச் செல்லாது தெல்லிப்பழைச் சந்தியில் இறங்குமாறு பயணியைக் கூறினர். அதனால் இன்னொரு பயணியுடன் நடத்துநர் வாக்குவாதப்பட்டு பயணிகளை இறங்குமாறு வற்புறுத்திய போது பயணி பஸ்ஸில் இருந்து கீழே விழ நேரிட்டது. அதனைக் கண்ட அந்தப் பகுதியில் நின்ற பொதுமக்கள் பஸ்ஸை மறித்து சாரதி, நடத்துநருடன் வாக்குவாதப்பட்டனர்.

இதேவேளை ,மாவிட்டபுரம் காவலரணுக்குச் செல்ல வேண்டிய இராணுவத்தினர் தம்மை காவலரணில் கொண்டு போய் இறக்கிவிட்டு பொலிஸ் நிலையத்தில் சென்று முறைப்பாடு வழங்குமாறு பணித்துள்ளனர். இதனையடுத்து சாரதியும், நடத்துநரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பின்னர் சம்பவத்துடன் தொடர்புடைய பயணி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் மறுநாள் அதே வழிச் சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ் மீது கல்லெறித் தாக்குதலை நடத்தியதுடன் சாரதி ,நடத்துநர்களையும் தாக்க முற்பட்டனர்.

இதனையடுத்து தனியார் பஸ்ஸின் சாரதி, நடத்துநர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்தமைவாக மேலும் 2 பொதுமக்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் 3 பேரை முன்னிலைப்படுத்தப்பட்ட போது சாட்சிகள் இல்லாத காரணத்தால் 3 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக தனியார் பஸ் சங்கத்தின் உபதலைவர் பொ. கெங்காதரனிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது;

769 வழி பஸ் யாழ்ப்பாணம்-தெல்லிப்பழைக் இடையிலான சேவையையே வழங்கும். வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை. வைத்தியசாலைக்கென தனியான பஸ் கட்டணம் வாங்குவதில்லை. பயணிகள் அதிகமாக இருந்தால் மட்டுமே வைத்தியசாலை வரை பஸ் செல்லும். இந்தச் சம்பவத்தில் 2 பயணிகள் மட்டுமே இருந்ததால் நடத்துநர் பயணிகளை இறங்குமாறு பணித்துள்ளார். ஆனால் பயணிகள் முரண்பட ஆரம்பித்ததால் நடத்துநர் கட்டாயப்படுத்தி இறக்கினார். ஆனால் பொதுமக்கள் இதனை அவதானிக்காமல் சாரதி , நடத்துநர்களுடன் முரண்பட்டனர்.

இதன் எதிரொலியாக மறுநாள் இன்னொரு தனியார் பஸ் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளார்கள். இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட போது சாட்சிகள் இல்லாததால் கைது செய்யப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் -என்றார். (ந-5)

## மணியம் தோட்டத்தில் விரைவில் மீன் சந்தை

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். மணியம் தோட்டப் பகுதியில் மீன் விற்பனை சந்தை மற்றும் கடற்றொழிலாளருக்கான இளைப்பாற்று மண்டபம் போன்றவற்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் பகுதி கடற்றொழிலாளரால் பிடிக்கப்படும் மீன்களை விற்பனை செய்ய வசதியாக குறித்த மீன் சந்தை அமைக்கப்படவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலகத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு இந்தப் பிரதேசத்தில் மீன் சந்தை ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

குறித்தபகுதி கடற்றொழிலாளரால் பிடிக்கப்படும் மீன்கள் தூர இடத்துக்குக் கொண்டு சென்றே சந்தைப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த சிரமத்தை தவிர்ப்பதற்கு மீன் விற்பனை சந்தை அதனுடன் கூடிய இளைப்பாற்று மண்டபம் ஒன்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (வ-17)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**இடபம்:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். உடன்பிறந்தவர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நட்பு வட்டாரம் விரி வடையும். அரச காரியங்களில் இருந்து வந்த தடைகள் விலகும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** உடன்பிறந்தவர்களின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்று வீர்கள். வியாபார ரீதியாக சிலரை சந்திப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். அடிக்கடி

**கடகம்:** மனதில் இனம்புரியாத பயம் ஏற்படும். வீட்டிலும், வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். சிலரின் தவறுகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள். யாரையும் நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காதீர்கள். உத்தியோகத்தில் அலட்சியத்தைத் தவிருங்கள்.

**சிங்கம்:** முக்கிய கோப்புகளை கையாளும் போது அலட்சியமாக இருக்க வேண்டாம். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

**கன்னி:** எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் வந்துச் செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**நாளை**

சித்திரை-10 புதன்கிழமை 24.04.2013
திதி: சதுர்த்தசி பி.இ. 03.51 வரை
நட்சத்திரம்: அத்தம் மா. 06.06 வரை
சுபநேரம்: 04.30- 06.00 வரை
இராகுகாலம்: 12.00- 01.30 வரை

**துலாம்:** முடியாமல்போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பிள்ளைகளின் எண்ணங்களைக் கேட்டறிவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.

**விருச்சிகம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். பிள்ளைகளின் விருப்பங்களை பூர்த்தி செய் வீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப்போங்கள்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு மரியாதை கூடும். வியாபார ரீதியாக முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். வீட்டை அலங்கரிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் ஆதரவு உண்டு.

**மகரம்:** அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் போய் முடியும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். நன்றி மறந்த ஒருவரை நினைத்து கவலையடைவீர்கள்.

**கும்பம்:** பரபரப்புடன் காணப்பட்ட நீங்கள் இன்று குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். அவர்களின் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். கோபம் நீங்கும்.

**மீனம்:** வியாபாரத்தில் இருந்துவந்த சிக்கலுக்கு முடிவு கட்டுவீர்கள். நீண்டநாள் ஆசைகளை பூர்த்தி செய்துக்கொள்வீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளியூர் பயணங்களால் சந்தோஷமடைவிர்கள். உத்தியோகத்தில் மன உளைச்சல் விலகும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | 1 | | | 3 |
| 1 | | 4 | | | 3 | 2 | 8 | |
| | | 3 | 2 | | | 7 | | 4 |
| | | | | 1 | | | | 9 |
| 8 | 3 | 9 | | 7 | | 5 | 6 | 1 |
| 2 | | | | 8 | | | | |
| 3 | | 5 | | | 4 | 1 | | |
| | 4 | 8 | 1 | | | 9 | | 2 |
| 6 | | | 9 | 3 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 8 | 1 | 4 | 6 | 7 | 2 | 9 |
| 9 | 2 | 1 | 8 | 3 | 7 | 6 | 5 | 4 |
| 7 | 6 | 4 | 9 | 5 | 2 | 1 | 8 | 3 |
| 6 | 7 | 3 | 4 | 9 | 8 | 2 | 1 | 5 |
| 2 | 1 | 5 | 6 | 7 | 3 | 4 | 9 | 8 |
| 4 | 8 | 9 | 2 | 1 | 5 | 3 | 7 | 6 |
| 1 | 9 | 2 | 5 | 6 | 4 | 8 | 3 | 7 |
| 5 | 4 | 7 | 3 | 8 | 1 | 9 | 6 | 2 |
| 8 | 3 | 6 | 7 | 2 | 9 | 5 | 4 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பபட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
07 * 08 * 1928

மறைவு
24 * 03 * 2013



அமரர் **சுப்பிரமணியம் மாணிக்கம்**

கடந்த 24.03.2013 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தெய்வத்தின் இழப்பால் துயருற்றிருந்தவேளை ஆறுதல் கூறி சகல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களிற்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னையின் 31ஆம் நாள் நினைவஞ்சலியிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

168/1, [illegible] வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(36233)(16.9)

குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**விமலநாதன் கஜகுகன்**
(பல்கலைக் கழக புதுமுக மாணவன்)



பிறப்பு
20.05.1987

இறப்பு
23.04.2011

அகிலமே உனைப் போற்ற சாதனை பல படைப்பாய்
என கனவு கண்டிருக்க எம்மை எல்லாம் கலங்கவைத்து
விண்ணுலகம் சென்ற உன் ஆத்மா இரண்டாவது ஆண்டில்
காந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மு.விமலநாதன்
(நீர்ப்பாசன திணைக்கள சாரதி)
இனிய வாழ்வு இல்ல மாணவர்கள்)

இல.91, சக்திபுரம்,
உருத்திரபுரம்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**ஆறுமுகம் கனபதிப்பிள்ளை**

(இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

கடந்த 24/03/2013 ஞாயிற்றுக் கிழமை இறைபத மெய்திய எமது குடும்பத்தலைவர் ஆறுமுகம் கனபதிப்பிள்ளை ஆவர்களின் அந்தியோட்டிக் கிரியைகள் 23/04/2013 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அதனைத் தொடர்ந்து 11.00 மணியளவில் இடம் பெறும் சபிண்டீகரணக் கிரயைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழக்கின்றோம்.



தோற்றம்
02.01.1923

மறைவு
24.03.2013

இந்திரபவனம்,
துலாக்கட்டு,
வதிரி,
கரவெட்டி.

(36271)

குடும்பத்தினர்

# பொதுப் பரீட்சைகளில் சித்தியடையும் வீதம் யாழ். மாவட்டத்தில் 70 சதவீதத்தை எட்டும்

## கல்வித் திணைக்களம் எதிர்வு கூறுகிறது

யாழ்ப்பாணம், ஏப். 23

பொதுப் பரீட்சைகளில் சித்தியடையும் வீதம் 2016 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 70 சதவீதத்தை எட்டும் என்று கல்வித் திணைக்களம் எதிர்பார்க்கிறது.

இந்த இலக்கு நோக்கிய செயற்றிட்டங்களிலேயே கல்வித் திணைக்களம் ஆர்வம் காட்டி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தரம்-5 கடந்த 2012 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் 72 சத்வீதத்தினர் பெற்றுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு இது 73 சதவீதமாகவும், 2016 ஆம் ஆண்டு 77 சதவீதமாகவும் மாற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரம் கற்கத் தகுதி பெற்றோர் கடந்த 2012 ஆம் ஆண்டு 58.5 சதவீதமானவர்களாவர். இந்த ஆண்டு 59.5 சதவீதமாகவும், 2016 ஆம் ஆண்டு 63.5 சதவீதமாகவும் மாற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெறுவோர் வீதம் கடந்த 2010 ஆம் ஆண்டு உயிரியல் பிரிவில் 46.44 சதவீதமாகவும், கணிதப் பிரிவில் 44.44 சதவீதமாகவும், வர்த்தகப் பிரிவில் 59.09 சதவீதமாகவும், கலைப் பிரிவில் 68.62 சதவீதமாகவும் காணப்பட்டது.

இந்த ஆண்டு உயிரியல் பிரிவில் 48 சத்வீதமாகவும், கணிதப் பிரிவில் 43 சதவீதமாகவும், வர்த்தகப் பிரிவில் 62 சதவீதமாக வும், கலைப் பிரிவில் 71 சதவீத மாகவும் மாற்றமடையும் எனவும், 2016 ஆம் ஆண்டு உயிரியல் பிரிவில் 51 சதவீதமாகவும், கணி தப் பிரிவில் 47 சதவீதமாகவும், வர்த்தகப் பிரிவில் 65 சதவீத மாகவும், கலைப் பிரிவில் 74 சத வீதமாகவும் மாற்றமடையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-5)

# புகைத்தல் எதிர்ப்பு கொடி வாரம்



தென்மராட்சி, ஏப்.23

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினர் இந்த வருடசுவதேச புகைத்தல் எதிர்ப்பு சமுர்த்தி கொடி வேலைத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

மேமாதம் 31 ஆம் திகதியிலிருந்து ஜூன் பத்தாம் திகதி வரை நாடளாவிய ரீதியில் நடத்தப்படவுள்ளதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பீ. திலகசிறி சகல சமுர்த்தி சங்கங்களுக்கும் அறிவித்துள்ளார்.

''போதையற்ற மனிதர்கள்- வாழ்வின் எழுச்சியால் பூவுலகை பூரிப்படையச் செய்வார்கள்'' என்னும் தலைப்பில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வாழ்வின் எழுச்சி தேசிய சேவைத்திட்டத்தோடு இணைந்ததாக குறைந்த வருமானம் பெறுவோரை போதைப் பொருள்களிலிருந்து தூரமாக்குவதே இதன் பிரதான குறிக்கோளாகும்.

நிதியைச் சேகரிக்கும் போது விசேட வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டியதுடன் சமுர்த்திப் பயனாளிகளிடம் பலவந்தமாக நிதியினை சேகரிக்கக்கூடாது.

இந்தத் திட்டத்தில் இந்த ஆண்டிலும் தேசிய மட்டத்தில் கூடிய வருமானத்தை உழைத்த உத்தியோகத்தர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ந-9)


# எரிந்து நாசமாகியது 'பெக்கோ' இயந்திரம்

யாழ்ப்பாணம், ஏப்.23

மின் ஒழுக்கு காரணமாக 52 லட்சம் ரூபா பெறுமதியான 'பெக்கோ' இயந்திரம் எரிந்து நாசமாகியது.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் நேற்று மதியம் இடம்பெற்றது. அங்குள்ள காணி ஒன்றில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போதே குறித்த 'பெக்கோ' இயந்திரத்தின் உள்ளே மின் ஒழுக்கு ஏற்பட்டு, தீப்பற்றி எரிந்து நாசமாகியது. அதனை அணைப்பதற்கு முயற்சி வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த 'பெக்கோ' இயந்திரத்தை இளவாலை, கீரிமலை வீதியைச் சேர்ந்த சின்னக்கண்டு வைரமுத்து என்பவர் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னரேயே புதிதாகக் கொள்வனவு செய்திருந்தார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-4)



உடுவில் பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற சமூக சேவை அலுவலர் எஸ்.சுரேஸ்குமாருக்கு பிரியாவிடை நிகழ்வும் புதிதாக வருகை தந்துள்ள சமூக சேவை அலுவலர் வி.முருகையாவை வரவேற்கும் நிகழ்வும் சுன்னாகம் நகர் மத்தி முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தலைவர் சேது இராஜவல்லவன் தலைமையில் நடைபெற்றபோது... (ந-86)

# கொழும்பின் அபிவிருத்திக்கு 635 கோடி ரூபா

கொழும்பு,ஏப்.23

கொழும்பு மாவட்டத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக கடந்த ஆண்டு 635 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்டச் செயலாளர் எச்.ரீ. கமல்பத்மசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களில் 94.44 சதவீதமானவை நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக இந்த நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளப்பட்டன.

எதிர்வரும் நான்காண்டு காலத்துக்கென கொழும்பு மாவட்டத்தில் முறை சார்ந்த செயற்றிட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் 2016 ஆம் ஆண்டளவில் கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் வறுமையை 6 வீதத்தினால் குறைத்துவிடும் இலக்கை எட்டுவதற்கான ஆற்றல் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (க-22)

# வயல் காணிகளில் கட்டடம் அமைப்பது சட்டவிரோதம்

## அமைத்துள்ளோர் மீது சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப். 23

கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுமதியின்றி வயல் காணிகளில் கட்டடம் அமைப்பது சட்டவிரோதமானது. அவ்வாறு அமைக்கப்பட்ட கட்டட உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வயல் காணிகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர் இவ்வாறு சுட்டிக் காட்டினார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1952 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க சட்டத்துக்கு அமைய 1958 இன் பின்னர் கட்டப்பட்ட கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

அரியாலைப் பகுதியில் ஒரு தேவாலயம் ஒன்றின் சுற்றுமதில் வயல் காணிக்குள் காணப்படுகிறது. வேறும் இரண்டு தேவாலயங்களும் ஒரு தொழிற்சாலையும் வயற்காணிக்குள் உள்ளன.

14 நாள்கள் முன்னறிவித்தலில் இவற்றின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள் ளோம்.

உள்ளூராட்சி சபைகள் திணைக்களங்கள் வயல் காணிகளில் கட்டடங்கள் அமைக்க அனுமதியளிக்கக் கூடாது.

குடியிருக்க வேறு காணிகள் அற்றவர்கள் தொடர்ச்சியாக வயல் செய்கைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் காணிகளில் கட்டடம் அமைப்பது தொடர்பாக கமநல சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை முதலில் பெற வேண்டும்.- என்று கூறினார். (ம-7)


# நிலக்கீழ் குழாய்கள் சேதம்; வீண்விரயமாகிறது குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஏப்.23

பொதுமக்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக நிலத்தடியில் பொருத்தப்பட்டு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரும் குழாய்கள் பல இடங்களில் நிலத்தின் கீழே உடைந்திருப்பதனால் பெருமளவு நீர் வீணாகச் செல்வதாகப் பொதுமக்கள் பலராலும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

ஏ-9 வீதி அகலப்படுத்தப்பட்ட வேளை குடிதண்ணீர் குழாய்களும் புதிதாகப் பொருத்தப்பட்டு நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்ததாகவும் ஆனால் கடந்த சில மாதங்களாக ஏ-9 வீதியில் தபால் கட்டைச் சந்திக்கும் மாம்பழம் சந்திக்கும் இடையிலான வீதியில் காலை மற்றும் மாலை நேரங்களில் குடிதண்ணீர் விநியோகிக்கப்படும் வேளைகளில் நிலத்தில் இருந்து நீர் சீறுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, குடிதண்ணீர் வீணாக வெளியேறுவதைச் சம்பந்தப்பட்ட நீர்விநியோக அதிகாரிகள் தினமும் பார்ப்பதாகவும் ஆனால் அதனைச் சீர்செய்யவோ புதிதாக மாற்றவோ முயற்சி ஏதும் எடுத்ததாகத் தெரியவில்லை. விநியோக நேரங்களில் வெளியேறும் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டதும் மீண்டும் உடைந்த குழாய் ஊடாக கழிவுகள் மற்றும் தூசிகளுடன் குழாய்க்குள் செல்வதாகவும் இதனால் பல நோய்களுக்கு ஆளாக நேரிடுவதாகவும் பொதுமக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-288)



# ஜனாதிபதி சாரணனாக யாழ். இந்து மாணவன் தெரிவு



வலி.வடக்கு,ஏப்.23

கடந்த பத்து வருட கால இடைவெளியின் பின்னர் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஜனாதிபதி சாரணனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரி மாணவனான சிவானந்தன் விஜிதரன் என்பவரே ஜனாதிபதி சாரணனாக 2003 ஆம் ஆண்டின் பின்னர் தற்போது தெரிவு செய்யப்பட்டவராவார். (ந-86)

# ஆக்கிரமித்த சொத்து விவரம் திரட்டல்

## அதற்கு ஆங்கிலத்தில் படிவங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23

உயர் பாதுகாப்பு வலயம் என வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்களின் வீடுகள், காணிகள் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகங்களால் திரட்டப்பட்டு வருகின்றன.

அதற்கென ஆங்கிலமொழி மூலமான படிவம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமகன் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இந்தப் படிவம் எதற்கு எனவும் அடிக்கடி இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு காணிகளை அபகரிக்கும் முயற்சியில் படையினர் ஈடுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பிட்ட படிவம் ஜனாதிபதி செயலணியின் பணிப்புரைக்கு அமைய யாழ். செயலகத்தின் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

படிவத்தில் குறிக்கப்பட்டுள்ள தகவல்கள் தெளிவற்றதும் அனாமதேயமாகவும் உள்ளதாகவும் இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பொதுமகன் குறிப்பிட்டார்.

இவ்வாறான விடயங்கள் குறித்து உரிய விளக்கம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ம-7)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.23

திருநெல்வேலி ஸ்ரீநீலாயதாஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமிகள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந-7)

யாழ்ப்பாணம், ஏப்.23

புங்குடுதீவு கண்ணகிபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

மறுநாள் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சமுத்திர தீர்த்தமும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும். (ந-7)

யாழ்ப்பாணம், ஏப்.23

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவில் தேர்த் திருவிழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும். மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6.30 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும். 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (ந)

## காணி விற்பனைக்கு

பேரம்பலம் வீதி, பெரிய மாவடி என்னும் இடத்தில் 3½ பரப்பு காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 893 5595

(27843)(6.11)

## பரிசுத்த ஆவிக்கு ஜெபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே, என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லாத மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

(36310)(5.6.7) ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

**தகைமைகள்**

**கணக்காளர் (உதவியாளர்)**

- ★ க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ★ ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்
- ★ முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- ★ கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- ★ வயதெல்லை 23-35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**கணினிஇயக்குநர்**

- ★ க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ★ MS Office நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- ★ MS Excel முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ★ வயதெல்லை 21-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுய விவரக் கோவை, அடையாள அட்டை போட்டோ பிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி ஆகியவற்றை இணைத்து 30.04.2013 இற்கு முன்னதாக கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல: 4450**

C/O உதயன்,

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(36309)(6.7.11)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா விஸ்வேஸ்வரி



யாழ்ப்பாணம்,நீராவியடியைப் பிறப்பிடமாகவும் தலையாழி, பிரம்படிலேன்,கொக்குவிலை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமான தியாகராஜா விஸ்வேஸ்வரி (அக்கம்மா) 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்லம்மா தம்பதியரின் மூத்த மகளும் தியாகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-அன்னம்மா தம்பதியரின் மருமகளும், சுதந்திரா, சுதர்ணன்,சுதர்சன், சுஜாத்தன் ஆகியோரின் பாசமிகு தாயும், விஸ்வேஸ்வரன், காலஞ்சென்ற ராஜேஸ்வரன் மற்றும் கௌசல்யாதேவி, விமலாதேவி, உருத்திரகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காண்டீபன், சற்சுருகுமாரி, தயாழினி, சோபிதா ஆகியோரின் பாசமிகு மாமியும், சுவேதா, சுஜிதா, சுருதிகா, சயானா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 0033 6510 15269

தகவல்: கணவர், பிள்ளைகள் (பிரான்ஸ்).

(36308)(5.6.7)

## கைதடி தொழிற்பூங்காவுக்கு மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

கைதடி, ஏப்.23

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவில் தங்கியுள்ளோரின் தேவைக்காக ஜேர்மனி நாட்டில் வசிக்கும் நலன்விரும்பி ஒருவர் மின்பிறப்பாக்கி ஒன்றை அண்மையில் வழங்கியிருந்தார்.

மேற்படி மின்பிறப்பாக்கியை அவரது உறவினர்களான திரு திருமதி ஞானலிங்கம் தம்பதிகள் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் எஸ்.கனகசபையிடம் கடந்த வாரம் கைதடி தொழிற்பூங்காவில் வைத்து வழங்கி இருந்தனர்.

இது பற்றி யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் எஸ்.கனகசபை கருத்துத் தெரிவிக்கும் போது;

''இம்மின்பிறப்பாக்கி இரவு வெளிச்சத்துக்கு மட்டுமல்லாது தொழில் சார் தேவைகளுக்கும் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் இவர்களின் உதவி போல் ஏனையவர்களும் உதவி வந்தால் விழிப்புலன் இழந்தோர் வாழ்க்கை மேம்பாடு அடைய வழி சமைக்கும்''- என்றார். (ஒ-288)

> ''ஜேர்மனி நாட்டில் வசிக்கும் நலன்விரும்பி ஒருவர் மின் பிறப்பாக்கி ஒன்றை அண்மையில் வழங்கியிருந்தார்''

## சிறுமிகள் துஷ்பிரயோகம்; சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.23

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயதுச் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.



இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மானிப்பாயைச் சேர்ந்த 19 வயது இளைஞன் கைது செய்யப் பட்டுள்ளார் என்று யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

இளைஞரின் நெருங்கிய உறவினரான குறித்த சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இதேபோன்று, நெல்லியடிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த பதின்ம வயதுச் சிறுமி கடந்த வருடம் மார்ச் மாதம் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று கடந்த வாரம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அல்வாய் மேற்கைச் சேர்ந்த 20 வயது இளைஞன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ம-4-86)

## வெளிநாட்டுக்காரரின் இரு 'கமரா'க்கள் யாழ்.நகரில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.23

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியின் பெறுமதி வாய்ந்த இரு 'கமரா'க்கள் யாழ்.நகரில் திருட்டுப் போய்விட்டன.

ஜன்னல் கண்ணாடி மூடப்படாமல் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தினுள் ஜன்னலினூடாக உள்ளே சென்ற திடுட்டுப்பேர்வழி பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியுடைய 'கமரா' க்களை அபகரித்துச் சென்றுள்ளார்.

'கமரா'க்களைத் திருட்டுக் கொடுத்தவரான வெளிநாட்டு சுற்றுலாப் பயணி அது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளான்.

யாழ்.நகரிலுள்ள உணவகம் ஒன்றின் முன்பாக குறித்த வாகனம் நிறுத்திய வெளிநாட்டுக்காரர் கதவுகளைப் பூட்டிவிட்டு கடைக்குள் சென்றார். தவறுதலாக அவர் வாகனத்தின் கண்ணாடியை மூட மறந்துவிட்டார். திரும்பி வந்து பார்த்த போது அவரின் 'கமரா' இரண்டும் காணாமற்போய் இருந்தது தெரியவந்தது. (ஒ-4)

## யாழ்.பஸ் நிலைய பாதுகாப்பு ஊழியரை தாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்.பஸ்நிலையத்தில் பாதுகாப்பு ஊழியர் ஒருவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் அரியாலையைச் சேர்ந்த ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடமையில் நின்ற பாதுகாப்பு உத்தியோகத்தருடன் முரண்பாடு ஏற்பட்டு, இந்தச் சம்பவம் நடந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

> ''முரண்பாடு ஏற்பட்டு, இந்தச் சம்பவம் நடந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்''

சிறுகாயமடைந்த பாதுகாப்பு ஊழியர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம் பெற்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஒ-4)

## ஆராதனைத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.23

ஸ்ரீசத்திய சாயி ஆராதனை பெருந்திருவிழா யாழ்ப்பாணம் சேர். பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.நாளை புதன்கிழமை காலை 8.45 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறும். (ந)

## இளைப்பாறு மண்டபம் புனரமைப்பு

சுழிபுரம்,ஏப்.23

சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் அமைந்துள்ள பழைமையான தீர்த்த இளைப்பாறு மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பறாளை விநாயகர், முருகப் பெருமானின் தீர்த்தம் வைகாசி, ஆனி மாதங்களில் நடைபெறுவது வழமை. இந்த நிலையில் சுவாமி தங்கும் மண்டபம் திருத்தம் செய்யப்படாமல் இருந்ததால் ஆலமர நிழலில் சுவாமி தங்க வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தற்போது திருவிழா உபயகாரர்களும், ஊர்மக்களும் சேர்ந்து மண்டபத்தைப் புனரமைப்புச் செய்து வருகின்றனர். (ந-28)



ஓம் சக்தி துணை

கண்ணகை அம்மன் என வழங்கும்

## ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் புங்குடுதீவு -10

## விசேட அறிவித்தல்

**மேற்படி ஆலயத்தில் 20.04.2013 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற விசேட நிர்வாக சபை ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 24.04.2013 புதன்கிழமை (தேர்த்திருவிழா) அன்று நடைபெறுவதாக இருந்த மகாசபைக் கூட்டம் அன்றைய தினம் நடைபெற மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**ஆலய பரிபாலன சபை, நிர்வாகசபை.**

(36305)(5.6.7)

# தமிழ்த் தொழிலாளரின் குடியிருப்புகள் தாக்கப்பட்ட சம்பவம் மிலேச்சத்தனமானது



கொழும்பு,ஏப்.23
இரத்தினபுரி மாவட்டத்தில் அலுப்பொல தோட்ட குடியிருப்புகள் மீதான தாக்குதல் மிலேச்சத்தனமானது. எமது நாட்டுக்கு இரத்தத்தை வேர்வையாக சிந்தி உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும்பான்மையின மக்களால் வழங்கப்படும் பரிசா இது என்ற கேள்வி எழுகின்றது என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நாட்டிற்குள் எவ்வித பிரிவினையும் கோரியிருக்கவில்லை. இவர்கள் மதவாதத்தையோ இனவாதத்தையோ கருத்தில் கொண்டு செயல்படுபவர்கள் இல்லை. சிங்கள மக்களுடன் ஐக்கியமாக வாழவே விரும்புகின்றார்கள்.

மாபெரும் தொழிற் சங்கம் என்று சொல்லிக் கொள்ளும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தங்களால் தான் தமிழ் பிரதிநிதித்துவம் கிடைத்தது என்று மார்தட்டிக் கொண்டு இச்சம்பவம் தொடர் பாக வாய்மூடி மௌனித் திருக்கின்றனர். சப்ரகமுவ மாகாணசபை தேர்தல் முடிந்த கையோடு வெற்றி பெற்ற இருவரையும் ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்று பதவி பிரமாணம் செய்ததைத் தவிர இது வரையும் வேறு எதையும் இவர்கள் செய்யவில்லை.

அதே நேரம் அவர்களுக்கு தேர்தலில் துணை போனவர்களுக்கு அறிக்கை அரசியலை தவிர வேறு எதுவும் செய்ய முடியாது என்பதும் எமக்குத் தெரியும். பெருந்தோட்டப் பகுதியைச் சார்ந்த தமிழ் மக்கள் மீதான இப்படியான மூர்க்கத்தனமான தாக்குதல்கள் தொடர்வதை இந்திய வம்சாவளியினர் என்ற அடிப்படையில் இந்திய உயர்ஸ்தானிகர் தமது கண்டனத்தை அரசுக்கு தெரிவிக்க வேண் டும். ஜெனிவா தீர்மானத் திற்கு ஆதரவாக செயல்பட்ட தமிழகம் இந்திய வம்சாவளி தமிழர்கள் இப்படி தாக்கப்படுவதற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். இலங்கையில் வாழும் 16 லட்சம் இந்திய வம்சாவளி தமிழ் மக் களின் பாது காப்புக்கு இந்திய நாடு உத் தரவாதமளிக்க வேண்டும்.

எதிர்வரும் நாடாளுமன்றக் கூட்டத்தில் தொடரில் இது சம்பந்தமான எனது முழுமை யான ஆட்சேபனையை அரசுக்கு தெரிவிப்பேன் என்றார். (ரி)

> "இரத்தத்தை வியர்வையாய் சிந்தும் தோட்டத் தொழிலாளர் மீதான தாக்குதல் கண்டிக் கத்தக்கது"

## தென்மராட்சி கல்வி வலய தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஏப்.23
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட இந்த வருடத்துக்கான வலய மட்ட தமிழ்த் தினப் போட்டிகளின் முடிவுகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.
போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**சிறுகதை ஆக்கம் 2**
ஜெ.சோபனா நாவற்குளி ம.வி., ஞா.தனிஸ்ரா சாவகச்சேரி இந்துக் கல்லூரி, த.அர்ச்சனா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**வாசிப்பு 1**
ஸ்ரீ.வனோஜா சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட., உபிரதீசா கொடிகாமம் திரு நாவுக் கரசு ம.வி., ச.யதுர்ஷனா உசன் இராமநாதன் ம.வி.

**வாசிப்பு 2**
செ.இளங்கதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தே.தீபிகா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

**கதை கூறல்**
ம.வீணஜா அல்லாரை அ.த.க. பாட., வி.கம்சிகா மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை, ஜெ. றொ.அன்ரன் உசன் இராமநாதன் ம.வி.

**பேச்சு 1**
செ.பூங்கவி சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட., இ.மதுசனா இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி., சு.நிசானா கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாட.

**பேச்சு 2**
ம.கீதாஞ்சலி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மகிழினி கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கு.சுமதினி மிருசுவில் அ. த. க. பாட.

**பேச்சு 3**
சு.நிஷாயினி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இ.சாம்பவி மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி., செ.மேரி சிலோசனா மிருசுவில் றோ.க. த.க. பாட.

**பேச்சு 4**
ச.சங்காஜி சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.பிரியங்கா மட்டுவில் கமலாசனி வித்தி., ந.லிரூஜனன் விடத்தற் பளை கமலாசனி வித்தி.

**பேச்சு 5**
கீதாஞ்சலி கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., விஜோஜா வரணி ம.வி., ம.சர்வேசா மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(தொடரும்)

## முக்கிய அறிவித்தல்

தென்மராட்சி பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் நாளை 24.04.2013 நடத்தப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 15.05.2013 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரதேச செயலகம், தென்மராட்சி. **நலன்புரி சங்கம்.** (C/9286)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தித் திணைக்கள நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் **திருமதி என்.கேமலா** அவர்களின் அன்புத் தாய் திருமதி **பாலசுந்தரம் பரமேஸ்வரி** அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம் அனைத்து அங்கத்தவர்களும்,
**யாழ். பிரதேச செயலக நலன்புரி சங்கம்.** (36316)(5-6-7)

## 31 ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் **தாமோதரம்பிள்ளை சிவபாக்கியம்**

பிறப்பு
05.04.1941

இறப்பு
24.03.2013

பாசமுடன் பெற்றெடுத்து வளர்த்த எங்கள் அம்மா!
நீங்கள் சென்று முப்பத்தொரு நாள் ஆனதம்மா!
எங்கள் உயிர் உள்ள வரை உங்கள் நினைவோடு
வாழ்வோமம்மா - உங்கள்
ஆத்ம சாந்திக்காக இறைவனிடம்
வேண்டுகிறோமம்மா...

கடந்த 24.03.2013 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்தோருக்கும், உள் நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி. (36315)(45.6.7)

**குடும்பத்தினர்.**

## விபத்தில் காயமுற்ற உசன் வாசி சாவு

தென்மராட்சி,ஏப்.23
சாவகச்சேரி பெரிய அரசடிப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் காயமடைந்த இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி 15 தினங்களின் பின்னர் உயிரிழந்தார்.

கடந்த 6ஆம் திகதி குடும்பத்தினருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையில் கனரக வாகனம் மோதியதில் கணவனும் மனைவியும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மிருசுவில் உசனைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை விக்டர் ஜெயக்குமார் (வயது-34) என்ற குடும்பஸ்தரே சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் சாவடைந்தார்.

விபத்தில் இவரது மனைவியான யூலியா தயாளினி (வயது-33) என்பவரும் காயமடைந்த போதிலும் இவர்களுடன் பயணித்த குழந்தை தெய்வாதீனமாக காயமின்றித் தப்பியது குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஏப்.23
பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- ச.நாகலிங்கம், உப-தலைவர்- மருத்துவர் கந்தையா, செயலாளர்- செ.சுப்பிரமணியம், உதவிச் செயலாளர்- குலசேகரம், பொருளாளர்- சு.விஜயநாதன் மேலும் 7 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ந-9)

## தெல்லிப்பழை, மந்திகை, சாவகச்சேரிக்கு நாளை புதிய அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப்.23
யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கவெனக் கொண்டு வரப்பட்ட மேலும் மூன்று அன்புலன்ஸ்கள் நாளை புதன்கிழமை கையளிக்கப்படவுள்ளன.
தெல்லிப்பழை, மந்திகை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளின் ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளிடம் யாழ்.பிராந்திய சுகாதார திணைக்களத்தில் வைத்து மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியினால் இவை கையளிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

**V.T.S.Construction**
வீ.ரீ.எஸ். கொன்ஸ்ரக்சன்
கல்வயல், சாவகச்சேரி
B/RC No:-DN/05/UC/0169




**கட்டட நிர்மாண மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகளுக்கு**
உங்களுடன் இணைய எந்நேரமும் தயாராக இருக்கிறார்கள்
கையில் உள்ள திட்டத்தை நடைமுறைப்படுத்த நம்பகமான யாரை அணுகுவது என்பது தான் உங்கள் முன் உள்ள சவாலா? கவலையை விடுங்கள் !
நீங்கள் அழைக்க வேண்டிய தொலை பேசி இலக்கம் 071 238 6580
அனைத்து விதமான கட்டடப் பணிகளிலும் ஆரம்பம் முதல் நிறைவு வரை
உங்களுக்கு கை கொடுக்கிறார்கள் V.T.S.Construction (27844)(6-6-7)

## மரண அறிவித்தல்

### திருமதி மரியநாயகம் அன்னம்மா

*(ஓய்வுபெற்ற ஆசிரியை)*



புலோலி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியநாயகம் அன்னம்மா 20.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு-பிரான்சிஸ்கா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான யோசேப்-யுஸ்தீனம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோசேப் மரியநாயகத்தின் அன்பு மனைவியும், ரெஜினோல்ட் (ஆஸ்திரேலியா), ராஜ்குமார், (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மரியா (ஆஸ்திரேலியா), அனிற்றா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மரினோ (ஆஸ்திரேலியா), பிறெண்டா (கனடா), அஞ்சலி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான திறேசம்மா, துரைசிங்கம் மற்றும் ஜெயசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க திருப்பலி நாளை (24.04.2013) புதன்கிழமை காலை 9 மணிக்கு புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் புலோலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி தெற்கு,
புலோலி. (36313)(6.7.11)

தகவல்:
**மகன்மார்.**

# வங்கிகளில் நகைகளை அடைவு வைத்த வாடிக்கையாளர்களே அவதிப்படாதீர்கள்!

## அவசரமாக மீட்க வேண்டும் என்றில்லை என்கிறார்கள் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஏப்.23

வங்கிகளில் ஏற்கனவே நகைகளை அடைவு வைத்தவர்கள் குறிக்கப்பட்ட கால எல்லை வரை காத்திருக்கலாம். நகையின் பணப் பெறுமதி குறைவடைந்து விட்டது என்று அவற்றை மீளத் திருப்ப அவதிப்படத் தேவையில்லை என்று வங்கி அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

உலக சந்தையில் தற்போது தங்க பிஸ்கட்டுக்களின் வருகை குறைவடைந்துள்ளதால், நகைகளின் பணப்பெறுமதி தற்போது குறைவடைந்துள்ளது. இதன் காரணமாக ஏற்கனவே கூடிய பணப் பெறுமதிக்கு வங்கிகளில் தங்க நகைகளை அடைவு வைத்தவர்கள் அவற்றை மீளத் திருப்புவதற்கு வங்கிகளில் இருந்து கடிதங்கள் அனுப்பப்படும் எனப் பீதியில் உள்ளனர்.

அது மட்டுமன்றி வங்கிகளில் தங்க நகைகளை அடைவு வைத்தவர்கள் அவற்றை மீளத் திருப்புவதற்கான வட்டிக்குப் பணம் பெற்றும் மேலதிக கடன்களைப் பெற்றும் நகைகளை வங்கிகளில் இருந்து மீட்டெடுப்பதற்காக அவதிப்படுகின்றனர்.

இது தொடர்பாக வங்கி அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது; ''ஏற்னவே வங்கிகளில் நகைகளின் பணப் பெறுமதிக்கு ஏற்ப அடைவு வைத்து பணம் பெற்ற வாடிக்கையாளர்களுக்கு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நகைகளைத் திருப்புவதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப அந்தக் கால எல்லை முடிவடையும் போது நகைகளை மீளத் திருப்புமாறு கடிதங்கள் வங்கிகளால் அனுப்பப்படுகின்றன.

ஆனால் தற்போது தங்க நகைகளின் பெறுமதி குறைவடைந்துள்ளது என்பதற்கான கடிதங்கள் எதுவும் அனுப்பப்படவில்லை.

இது தொடர்பாக நகைகளை அடைவு வைத்தவர்கள் அவதிப்படத் தேவையில்லை. குறிக்கப்பட்ட கால எல்லை வரை காத்திருந்து அவற்றை மீளத்திருப்பலாம். இதற்காக மேலதிக கடன்களைப் பெறத் தேவையில்லை.

அதே சமயம் தற்போது நகைகளின் பணப்பெறுமதிக்கேற்பவே அடை வுக்காக பணம் கொடுக்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளனர். (ஒ-14)

## துண்டி ஐயனார் வீதி பயணிக்க முடியாது சேதம்

கொழும்புத்துறை, ஏப்.23

கொழும்புத்துறை துண்டி ஐயனார் அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் 5 ஆம் குறுக்குத் தொடர் வீதி மிகவும் சேதமடைந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளது. இதனால் பக்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கடந்த காலப் போரால் இந்த ஆலயமும் வீதியும் சேதமடைந்திருந்த போதிலும் தற்போது ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வழிபாட்டுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.

ஆயினும் இந்தக் கோயிலுக்குச் செல்லும் பிரதான பாதையாகிய 5 ஆம் குறுக்கு வீதி இதுவரை திருத்தம் செய்யப்படாமையால் பக்தர்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவதில் போக்குவரத்து இடர்களைச் சந்திப்பதாக கவலை தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் உரியவர்கள் கவனமெடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

**வான் உடன் விற்பனைக்கு**

58-XXXX தொடரிலக்கமுடைய TOYOTA HIACE வான் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 790 2524

(C/9370)(6.7.11)

## பழுதடைந்த 'றோல்ஸ்' பரிமாற்றம் ஊர்காவற்றுறை கலந்துரையாடலில்

யாழ்ப்பாணம்,ஏப். 23

ஊர்காவற்றுறையில் கடந்த வாரம் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது அங்கு வருகை தந்திருந்த உயரதிகாரிகள் உட்பட அனைவருக்கும் பழுதடைந்த 'றோல்ஸ்' வழங்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச சபையில் இடம்பெற்ற உணவு கையாளும் நிலையங்களுடனான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக உரிய உணவக உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உணவகங்களில் தரம் பேணப்பட வேண்டும் என்று பல்வேறு கோணங்களில் சுகாதாரப் பிரிவினரால் உணவகங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்படுகின்ற போதும் அவற்றின் செயற்பாடுகளில் மாற்றம் இல்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-7)

**கார் விற்பனைக்கு**

64-xxxx தொடரிலக்கமுடைய Disel Nissan Sunny கார் விற்பனைக் குண்டு.

தொடர்பு: 075 966 7588/077 102 8593

(36312)(5-6-7)

**புறொயிலர் குஞ்சு விற்பனைக்கு**

நியூ பேனாட், வகிறா, C.I.C கிறீன்வெலி, புசலாவ சமீர இறைச்சிக் கோழிக்குஞ்சு வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

(மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு உண்டு.

தொடர்பு: 077 595 9663

விநியோகத்தர்: மகாபாம் ஹவுஸ்

(27943)(6.7.11)

**மரண அறிவித்தல்**

**திருமதி சிவனேஸ்வரன் குலசெல்வராணி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் சிவனேஸ்வரன் ரீச்சர்)



வேலணை, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவனேஸ்வரன் குலசெல்வராணி 21.04.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம் -செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற இரத்தினசபாபதி மற்றும் சுபத்திராதேவி தம்பதியரின் மருமகளும், சிவனேஸ்வரனின் அன்பு மனைவியும், சுகீசனின் (மருத்துவ பீட மாணவன்- பலாரஸ் பல்கலைக்கழகம்) அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் தெற்கு,
இணுவில்.
077 720 3027

தகவல்:
இ.சிவனேஸ்வரன்
(கணவர்)

(36316)(6.7.11)

**வல்வையின் இந்திரவிழா பற்றிய அறிவித்தல்**

25.04.2013 அன்று நடைபெறும் வல்வை

**ஸ்ரீ முத்துமாரி அம்மன்**

தீர்த்தோற்சவ இரவு நிகழ்வாக நடைபெறும் இந்திரவிழாவானது சந்திரகிரகணம் காரணமாக நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோம்.

மோர்மட வரவேற்புக் குழு,
பொருளாளர்: நா.நகுலேஸ்வரன்.
077 027 6337

(சி/9368) (45,6,7)

**தவறிவிட்டது**

செட்டிக்குளம், வவுனியாவைச் சேர்ந்த பேகராசா ரீகன், சேவியர் நியூட்ராஜ் என்பவர்களுடைய தே.அ.அட்டை யாழ்.தொழில்நுட்ப கல்லூரிக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 136 0696, 077 635 2108

(36319)(6.7.11)

**பெயர் மாற்ற அறிவித்தல்**

வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறையைச் சேர்ந்த **பாக்கியநாதன் - கில்பேட் சான்ரன் சத்தியசீலன்** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **பாக்கியநாதன் கில்பேட்** என்று மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகிறேன்.

(சி/9216) (45.6.7) பாக்கியநாதன் கில்பேட்

**சண்டிலிப்பாய்-சீரணி**

**அருள்மிகு நாகபூசணி அம்பாள் தேவஸ்தான**

**வருடாந்த சப்பை ரதத் திருவிழா சிறப்பு நாதஸ்வர தவில் கச்சேரி**

**நாளை 24.04.2013**



**நாதஸ்வர வித்துவான்கள்**

- ★ நாதஸ்வர இசைச்சக்கரவர்த்தி நாதகான பூபதி கலா பூசணர் அளவையூர் M.P. **பாலகிருஸ்ணன்** அவர்கள்.
- ★ நாதஸ்வர இசைஞான அரசு நாதகான வாரிதி கலாபூசணம் கோண்டாவில் V.K. **பஞ்சமூர்த்தி** அவர்கள்.
- ★ நாதஸ்வர கான விநோதன் P.S. பாலமுருகன் அவர்கள்
- ★ நாதஸ்வர நாதகான இன்குழல் வேந்தன் கோண்டாவில் S. **சிவதாஸ்** அவர்கள்.
- ★ R. **சிவகுமார்** நாதஇளவரசன் (வடக்கம்பரை)
- ★ நாதஸ்வர கான ரத்தினம், நாத இன்பமணி கோண்டாவில் K. **வசந்தன்** அவர்கள்
- ★ நாதஸ்வர வித்துவான் **பஞ்ச மூர்த்தி** அவர்களின் புதல்வன் நாதஸ்வர இளவரசன் ஸ்வரஞான மணி கோண்டாவில் V.K.P **குமரேஸ்** அவர்கள்.

இவர்களுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் நாதஸ்வர இன்பகான இளவல் பட்டுக்கோட்டை S. **குமார்** அவர்களும் இணைந்து கானமழை பொழிவார்கள்

**தவில் வித்துவான்கள்**

- ★ அகில உலக தவில் மாமேதை லய ஞான விவகார வித்துவமணி இணுவையூர் அமரர் N.R.**சின்னராசா** அவர்களின் புதல்வர்கள் தவில் நாத சொற்சுவைமணி தவில் அரசன் N.R.S. **ரவீந்திரன்** அவர்கள்.
- ★ லயஞான இளவரசன், N.R.S. **சுதாகரன்** அவர்கள்.
- ★ கோண்டாவில் K. **ஆனந்த கணேசன்** அவர்கள்.
- ★ தவில் நாத இசை மாமுரசு தவில் இளம் தென்றல் பருத்தித்துறை S. **ஜதீஸ்குமார்** அவர்கள்.
- ★ தவில் நாத கான இன்ப இளவல், சுதுமலை N. **பிரசன்னா** அவர்கள்.
- ★ தவில் நாத கான இளம் சாம்ராஜ் இணுவையூர் B. **நர்மதன் (மது)** அவர்கள்.
- ★ Lion **ஞானபாலன்** P.S. செந்தில்நாதன்
- ★ இன்பகான இளம் கலா வித்தகன், தவில் கான மணி வட்டுக்கோட்டை R. **தர்சீலன்** அவர்கள்.

இவர்களுடன் இந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் தவில் நாத சுடரொளி தவில் நாத மணி, இந்தியாவிலிருந்து வருகை தந்த கலைமாமணி கோயிலூர் K.G. **கல்யாணசுந்தரம்** (சிறப்புத் தவில்),

★ இளஞ்சுடரொளி திருச்சி தவில் V.V. **ரமணன்** அவர்களும் இணைந்து கானமழை பொழிவார்கள்.

சப்பை ரத திருவிழா நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இந்தியாவில் இருந்து வருகை தரும் தவில், நாதஸ்வர கலைஞர்களும் அகில இலங்கை கலைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் இந்த நிகழ்வில் அம்பாள் அடியார்களை கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

**சப்பைரத திருவிழா உபயகாரர்கள்.**

(C/9366)(10,6,7)

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி குமணன்



கலைமகள் வாசம், அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குமணன் நேற்று (22.04.2013) திங்கட் கிழமை பி.ப. 2.15 மணியளவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் ஓய்வுபெற்ற ஆசிரியர் கணபதி கந்தசாமி- காலஞ்சென்ற தங்கராணி தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் நக்கீரன் (லண்டன்), காண்டீபன் (லண்டன்), திருமதி. சுகுணராஜன், கலைமகள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ந.நக்ஷன் (லண்டன்), ந.நதோஸ் (லண்டன்), ந.நிரூஷன் (லண்டன்), கே.தாரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் சஜீனா, ஜெனீபர் ஆகியோரின் பாசமிகு மாமனும் திருமதி.ந.மலர்விழி, திருமதி.கே.அனுஷா, செல்வராசா, சுகுணராஜன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இளைப்பாற்று நிகழ்வு நாளை (24.04.2013) புதன் கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று புனித ஆராதனை நிகழ்வுகளுடன் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமகள் வாசம்,
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்.

தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி இரத்தினபூபதிஇராமநாதன் (இரத்தினக்கா)



நந்தாவில்லேன் கொக்குவிலைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி இராமநாதன் (21.04.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்வர்களான அப்பாத்துரை(பிரபல வர்த்தகர்) அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற V.C. இராமநாதனின் (ஓய்வு பெற்ற ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி ) அன்பு மனைவியும், இரத்தினகாந்தி, இரவிகாந்தி, சத்தியநாதன்(சத்தி- ஜேர்மனி), நித்தியகாந்தி, பஞ்ச நாதன்(சிவாஜி ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், புஸ்பலதாவின் (ஜேர்மனி) அன்பு மாமியும், பிரசாத், பிரியங்கா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான சொர்ணாம்பாள், பொன்னுத்துரை, சண்முகநாதன், கனகமணி, அன்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரங்கநாதன் (QC), பத்மநாதன், தியாகராசா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஸ்ரீநிவாசனின் (சட்டத்தரணி) சிறிய தாயும் ஆவா ர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்நாளை(24.04.2013) புதன்கிழமை காலை 8.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.10.00மணியளவில் கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லபப்டும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

6/1, நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதிசெல்வரத்தினம் மனோன்மணி



காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப்பிடமாகவும் தற் போது இல.100, உடுவில் வீதி, மானிப்பாயில் வசித்துவந்தவருமான திருமதி செல்வரத்தினம் மனோன்மணி நேற்று முன்தினம் (21.04. 20 13) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-செல்லாச்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் (வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி முருகேசு -அன்னம் மற்றும் நவரத்தினம், நமசிவாயம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், புண்ணியசீலன், லியனகுமாரி, அருட்சீலன், இதயகுமாரி ஆகியோரின் பாசமிகு தாயும், சிவசோதி, சுஜாதா, சிறிரஜனி, நமசிவாயம் ஆகியோரின் மாமியும், மயூரன், டிலக்ஷன், துவாரகா, சங்கவை, ஆதிரை, தனுஜன், சுவேதகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பாடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.100, உடுவில் வீதி,
மானிப்பாய்.
021 3737952


# பெண் வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கி வரும்
பிரபல தனியார்
வைத்தியசாலைக்கு.
வேலையாள்கள் உடனடியாகத்
தேவை.

தொடர்பு:- 075 5262548

# விற்பனைக்கு

KJ---- இலக்க .TERIOS SUN
100% JAPAN தயாரிப்பு 18000
கி.மீற்றர் டாக்டர் பாவிக்கும்
வகனம் உடன்
விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 077 3081905


# இதய அஞ்சலி



1951ஆம் ஆண்டில் கொக்குவில் இந்துக்கல்லூரியில்
கிரிக்கெற் விளையாட்டை ஆரம்பித்து வைத்த பெருந்தகை
இராமநாதன் ஆசிரியரின் அன்பு மனைவி
திருமதி **இரத்தினபூபதி இராமநாதன்**
அவர்களின் மறைவுக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

பழைய மாணவர்கள், நண்பர்கள்,
சு.வ. முதலியும்.

(சி/93/5) (10)


# Vacancy

First and foremost star class hotel in the North of Srilanka built under B.O.I. requires

Clerk- 3Nos

* Able to converse in English and tamil fluently
* Able to write specialized business documents effectively
* Knowledge on MS office is compulsory.
* Holding driving license will be preferable

salary will be negotiable

Please send your CV to suthes@cityhoteljaffna.com or call for 0777696553 before 03.05.2013

**Jaffna Tilko City Hotel (PVT) Ltd.**
**No.70/6, K.K.S Road, Jaffna.**


# கண்ணீர் அஞ்சலி

சங்க உருப்பினரும், நாவற்குழி உபஅலுவலக பொறுப்பதிகாரியுமான நா.தங்கவேல் அவர்களின் பாசமிக தந்தையார்

## பூதன் நாகலிங்கம்

அவர்கள் 22.04.2013 ஆம் திகதி காலமானாதையொட்டி அன்னாரின் பிரிவினரால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள்,
சாவகச்சேரி பிரதேசசபை, ஊழியர் நலன்புரிசங்கம்.


# VACANCY

யாழ். நகரில் அமைந்துள்ள STAR CLASS HOTEL ற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை.

WAITERS- 10 NOS

★ அடிப்படை தகைமை G.C.E. O/L
★ ஓரளவுக்கு ஆங்கிலம் மற்றும் சிங்களம் பேசக்கூடியதாக இருத்தல் விரும்பத்தக்கது.

A/C TECHNICIAN - 02 NOS

★ அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில்நுட்ப சான்றிதழ் பெற்றிருத்தல்.
★ 3 PASE A/C திருத்தக் கூடியவராகவும் பொருத்தக் கூடியவராகவும் இருத்தல்.
★ குறைந்தது 5 வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும்.
★ வயது எல்லை 30 - 50

முழு நேர மற்றும், நிரந்தர வேலை சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் 03.05.2013 முன் trajkumar2010gmail.comற்கு ற்கு உங்கள் சுய விவரக் கோவையை அனுப்பிவையுங்கள். அல்லது 0779944439 இற்கு உடன் அழையுங்கள்.

JAFFNA TILKO CITY HOTEL (PVT) LTD
(C/9372) NO:- 70/6, K.K.S. ROAD, JAFFNA.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
01.08.1942



உதிர்வு
24.03.2013

திருமதி
## நீக்கிலஸ் அந்தோனியாப்பிள்ளை

கடந்த 24.03.2013 அன்று, எம்மை விட்டுப் பிரிந்த எமது தாயாரின் மறைவுச் செய்திகேட்டு மரணச்சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தந்திகள் வாயிலாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (23.04.2013) செவ்வாய்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6.15 மணியளவில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீ.பிரபாகரன் (மேலதிக மாவட்டப் பதிவாளர் பருத்தித்துறை) நீ.மனோகரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்)

211, கடற்கரை வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (36321)(16.14.09)


யாழ்.நகர மத்தியில்

# "உதயன் விருந்தினர் விடுதி"




- குடும்ப அறை வசதி உண்டு.
- குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
- யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
- பரந்த வாகன நிறுத்துமிட வசதி.
- காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்

12, சிவகுருநாதர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(c/6914)(8.14.16)

021 222 2330
021 567 7603

அச்சுவேலி பிரீமியர் லீக்

# கிண்ணம் வென்றது கோல்டன் டைகர்ஸ்

அச்சுவேலி, ஏப். 23

அச்சுவேலி பிரீமியர் லீக் தொடரின் இறுதியாட்டத்தில் கோல்டன் டைகர்ஸ் அணி கிண்ணத்தை சுவீகரித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கோல்டன் டைகர்ஸ் அணித் தலைவர் கார்த்தீபன், ரெட் ரைனோஸ் அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி துடுப்பெடுத்தாடிய ரெட் ரைனோஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது.

ரெட் ரைனோஸ் அணியின் சார்பாக அணித் தலைவர் சுபேந்திரன் 14 ஓட்டங்களையும், தனோசன் 8 ஓட்டங்களையும், சுபதாஸ் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில், கோல்டன் டைகர்ஸ் அணியின் கஜன் 2 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பிரசாந்த், கௌதீப் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் சாய்த்தனர்.

40 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கோல்டன் டைகர்ஸ் அணி நான்காவது பந்துப் பரிமாற்றத்தில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை எட்டியது.

அந்த அணியின் சார்பில் ஜூனா அதிரடியாக துடுப்பெடுத்தாடி நான்கு சிக்ஸர்கள் அடங்கலாக 26 ஓட்டங்களையும், கனிஷ்டன் 7 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ரெட் ரைனோஸ் அணியின் சார்பில் துவாரகன், ஜசிந்தன் தலா ஒவ் வொரு இலக்குகளை வீழ்த்தினர்.

தொடரின் மூன்றாமிடத்தைப் ஃபிரெளன் புல்லட்ஸ் அணியினர் பெற்றுக்கொண்டனர்.

மதுசாந்தன் தொடர் நாயகனாகவும், கஜந்தன் அதிக ஓட்டங்களை பெற்ற வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

அச்சுவேலி பிரதேச அணிகளுக்கிடையே நடத்தப்பட்ட 7 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியாக அச்சுவேலி பிரீமியர் லீக் தொடர் கடந்த மூன்று வாரங்களாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-11)



மென்பந்து கிரிக்கெட் தொடர்

# கரைச்சி பிரதேச செயலகம் சம்பியனாகத் தெரிவானது

கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

முழங்காவில் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பூநகரி பிரதேச செயலக அணி கரைச்சிப் பிரதேச செயலக அணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கரைச்சிப் பிரதேச செயலக அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழத்து 100 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

தவதீஸ் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களையும் சந்திரகுமார் 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் பூநகரி பிரதேச செயலக அணி சார்பில் ஜீவதாஸ் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்கினையும் அமுபர் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் நசின்3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

101 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பூநகரி பிரதேச செயலக அணி 14.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 74 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சகறான் 34 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றார்.

பந்து வீச்சில் கரைச்சிப் பிரதேச செயலக அணி சார்பில் தவதீஸ் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் நகீதரன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 4 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.(ற-23)

## பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஏப் 23

யாழ்.கல்வி வலய மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டி 23ஆம் 24ஆம் 26 ஆம் திகதிகளில் யாழ் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

யாழ்ப்பாணம் ஏப் 23

உடுவில் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் 26ஆம் 27 ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதாயக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-23)

## வீதியோட்ட வெற்றியாளர்

தென்மராட்சி,ஏப். 23

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தில் 43 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனசமூக நிலையமும் ஜெஹ்லைனோர்ஸ் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்திய வீதியோட்டப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப்போட்டியில் யோ.நிறோசன் முதலாம் இடத்தையும், யோ.நிலக்ஷன் 2 ஆம் இடத்தையும், தெ.ஜீவன்ராஜ் 3ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ற-135)



யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் பயிற்சிகளை மேற்கொண்டு வந்த யாழ். மாவட்ட கூடைப்பந்தாட் அணியினருக்கு அங்கு பயிற்சிகளை மேற்கொள்வதற்கு திடீரென அனுமதி மறுக்கப்பட்டது. அதையடுத்து யாழ். மாவட்ட கூடைப்பந்தாட் அணியினர் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக உள்ள வீதியில் கடந்த வியாழக்கிழமை பயிற்சிகளை மேற்கொண்டனர். (ற-23)

# யாழ். மாவட்ட மட்ட கரப்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் 19 வயது ஆண்கள் பிரிவில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும் 17 வயது ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும் 15 வயது ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும் சம்பியனாகத் தெரிவாகின.

இந்தப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் வித்தியாலயத்தில் இடம்பெற்றன.

19 வயதுப் பிரிவினருக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும், உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியும் மோதிக் கொண்டன. 3 சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் 2:1 என்ற செற் கணக்கில் வென்று இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் சம்பியனானது.

இந்தப் போட்டியில் மூன்றாமிடத்தினை புத்தூர் சோமஸ்கந்தா அணி பெற்றுக்கொண்டது.

17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும், உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரியும் மோதின. இதில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி அணி 25:18, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைத் தோற்கடித்து சம்பியனாகியது.

இதில் மூன்றாமிடத்தினை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயமும், கோப்பாய் மகா வித்தியாலயமும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம் 2:1 என்ற செற்கணக்கில் வென்று சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தினை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (ற-400)

## போட்டி முடிவுகள்

தென்மராட்சி,ஏப்.23

தமிழ் சிங்கள புத்தாண்டையொட்டிய தென்மராட்சி பிரதேச 523 ஆவது படையணியினரால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் ஆண் பெண்களுக்கான மரதன் மற்றும் சைக்கிளோட்டம் ஆகியவற்றின் முடிவுகள்

மரதன் ஓட்டம்: ஆண்கள்
ரி.ஜெயக்குமார், பி.தயானந்தன், பி.நகுலேஸ்வரன்
பெண்கள்
எஸ்.பியூலா, என்.சினேந்தினி, எஸ்.தர்சிகா

சைக்கிளோட்டம்: ஆண்கள்
பா.பாலகுமாரன், எஸ்.சுதர்சன், எஸ்.சஜீபன்
பெண்கள் : வீ.பத்மா, பீ.பர்மிளா, ஏ.கனிஷா (ற-9)

# விண்ணப்பம் கோரப்பட்டு பல மாதம் பரீட்சை குறித்து தகவலேதுமில்லை

## கரப்பந்தாட்ட மத்திஸ்தர் பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் கவலை

யாழ்ப்பாணம், ஏப்.23

கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பாட்டு பல மாதங்கள் கடந்த நிலையில் பரீட்சையை நடத்துவதற்கான எந்த முயற்சியும் இதுவரை நடத்தப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை ரீதியாக கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்காக வருடாவருடம் எழுத்துப் பரீட்சைகள் கொழும்பில் நடத்தப்பட்டு வருகின்றது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தினர் மேற்கொண்ட முயற்சி காரணமாக முதல் முதலாக யாழ். மாவட்டத்தில் தமிழ் மொழியில் பரீட்சைகள் நடத்துவதற்கு இலங்கை கரப்பந்தாட்டச் சங்கம் முன்வந்தது.

அதனை தொடர்ந்து கடந்த வருட முற்பகுதியில் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

இதற்காக கொழும்பில் இருந்து வருகை தந்த மத்தியஸ்தர்களால் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இந்தப் பரீட்சைகள் கடந்த வருட இறுதிப் பகுதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை நடைபெறவில்லை.

இதனால் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்த வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 50 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பரீட்சையை உடனடியாக நடத்தி புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவு செய்வதற்கு யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(ற-400)


## வருடாந்த விளையாட்டு விழா இன்று

புதுக்குடியிருப்பு, ஏப்.23

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வருடந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்கு புதுகுடியிருப்பு பிரதேச செயலாளர் ஐ.பிரதாபன் தலைமையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது .

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-23-400)

# வெற்றிக்கு காரணம் ரிச்சர்ட்ஸ்



நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். ஆட்டத்தில் 9 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை இண்டியன்ஸ் அணியை வீழ்த்தி டெல்லி டேர்டெவில்ஸ் அணி முதல் வெற்றியை பெற்றது.

இந்த வெற்றிக்கு ஷேவாக்கின் அதிரடி ஆட்டம் முக்கிய பங்கு வகித்தது. அவர் 57 பந்துகளில் 13 பவுண்டரி, 2 சிக்சர் அடங்கலாக 95 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த சேவாக் மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் அதிரடி துடுப்பாட்ட வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ் வழங்கிய ஆலோசனைகளே வெற்றிக் காரணமாக அமைந்தன என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், தொடர்ந்து தோல்வியை சந்தித்து வந்த எங்கள் அணி வீரர்களுக்கு விவியன் ரிச்சர்ட்ஸ் நம்பிக்கை அளிக்கும் விதமாக ஆலோசனை வழங்கினார்.

அவரது ஆலோசனை உதவியாக இருந்தது. இதற்கு பலனும் கிடைத்தது.-இதற்காக அவருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடம் அவர் நீங்கள் நல்ல நிலையில் இருப்பதாக தெரிவித்தார். அவர் என்னிடம் பொய் சொல்வது நன்றாக தெரிந்தது.

எனது துடுப்பாட்ட நிலை குறித்து நம்பிக்கை அளிக்கும் வகையிலேயே பேசினார். துடுப்பாட்ட வீரர்கள் என்றால் எந்த நிலையிலும் பயப்படக்கூடாது என்ற அவரது ஆலோசனை நம்பிக்கையை ஏற்படுத்தியது- என்று கூறினார். (ற)

# ஐ.சி.சி. தரவரிசையில் புஜாரா,அஷ்வின் முன்னேற்றம்





சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் புஜாரா, அஷ்வின் முதல்10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளனர்.

டெஸ்ட் போட்டியில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

அதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் புஜாரா 777 புள்ளிகளைப் பெற்று 7ஆவது இடத்தை தக்கவைத்துள்ளார். பிரக்யான் ஓஜா 10ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இதேவேளை, இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி 22ஆவது இடத்தில் உள்ளார். முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்காவின் ஹாசிம் ஆம்லா, மேற்கிந்திய தீவுகளின் ஷிவ்நரின் சந்தர்போல், தென்னாபிரிக்காவின் டிவிலியர்ஸ் ஆகியோர் உள்ள னர்.

பங்களாதேஷ் அணியுடனான டெஸ்ட் போட்டியில் சதம் அடித்து அசத்திய சிம்பாப்வே அணித்தலைவர் பிரண்டன் ரெய்லர் 41 இடங்கள் முன்னேறி 29ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் அஷ்வின் 6ஆவது இடத்தில் நீடிக்கிறார். சகீர் கான் 16ஆவது இடத்தில் உள்ளார். முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்காவின் ஸ்டைன், பிலாண்டர், இலங்கையின் ஹேரத் ஆகியோர் உள்ளனர். (ற)



ஐ.பி.எல். தொடர் யாரையும் விட்டு வைக்கவில்லை. இந்திய முன்னனி டெனிஸ் வீராங்கனை தனது இளைய சகோதரியுடன் ஐ.பி.எல். ஆட்டத்தைக் கண்டுகளிக்க கிளம்பிவிட்டார்.

## மூடுவது குறித்து பேசவில்லை

காயமடைந்த வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வரும் இந்திய தேசிய கிரிக்கெட் அகடமி மூடப்படும் என்ற தகவலை மறுத்துள்ளது. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டு சபை அகடமியின் பணிகள் குறித்து வழக்கம் போல விவாதிக்கப்பட்டது. மூடுவது குறித்தெல்லாம் தீர்மானம் எதுவும் எடுக்க வில்லை என்று தெரிவித்துள்ளது. (ற)


## மரண அறிவித்தல்கள்



### ஆறுமுகம் ஜோசேப் (மணியம்)

தோலகட்டி, வயாவிளானைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கு, பரலோக மாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஜோசேப் (மணியம்) கடந்த (16.04.2013)செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2013) புதன்கிழமை பிரான்ஸில் உள்ள Robinson Joseph, #7 rue marthe, 93240. Stains, France இல் நல்லடக்கஞ்செய்யப்படும். குறிப்பு:- நீர்வேலியில் உள்ள பரலோக மாதா ஆலயத்தில் மு.ப. 11 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. 0033751541328

தகவல்:
அருட் தந்தை பிரான்சிஸ்(சாவகச்சேரி லிகோரியார் ஆலயப் பங்குத் தந்தை), செல்ரன் ஜெயமீனா(பேறாமகள்).



### பொன்னுத்துரை பரமேஸ்வரி

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமேஸ்வரி நேற்று (22.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உசத்தியோடை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
பள்ளஞ்சீமா, ஏழாலை.

(38328)

தகவல்: குடும்பத்தினர்.

### பூதப்பிள்ளை நாகலிங்கம்

(மீசாலை மேற்கு)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கு, பங்களா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பூதப்பிள்ளை நாகலிங்கம் நேற்று (22.04.2013) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பூதப்பிள்ளை- மயிலி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லிபுரம்- அன்னம்மா தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், தங்கவேல் (முகாமைத்துவ உதவியாளர், சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம், உதயன் செய்தியாளர், சாவகச்சேரி), இன்பராணி (தாதிய உத்தியோகத்தர், ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி) சிறீகரன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கருணாகரன் (அதிபர், கைதடி கலைவாணி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரி, தனஞ்செயன், குகானந்தவதனா, நவதர்சினி (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும், திவாகரன், திருநீலன், ஜெகபிரசங்கா, அருணன், அபிசாளினி, கிருஷ்ணபிரியன், மதிசாஜினி, ராமிலன், கிருஷ்ணிகா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தெய்வானை, கந்தையா, சங்கரப்பிள்ளை, சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற ஆரம்பப் பிரிவு பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவனம், மகரகம) காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (மதுவரித் திணைக்களம், பிரதம எழுதுநர்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பங்களா வீதி,
மீசாலை மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர். 0778445586

## வளர்மதியின் கண்ணீர் காணிக்கை



எமது கழக உறுப்பினர்களான
சத்தியநாதன் (சத்தி),
பஞ்சநாதன் (சிவாஜி) ஆகியோரின்
அன்புத் தாயாரான
திருமதி இரத்தினபூபதி இராமநாதன்
(இரத்தினக்கா)
அவர்கள் காலமானதையிட்டு எமது
கண்ணீர் காணிக் கையை
தெரிவித்துக்கொள்வதுடன்,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(சி/9378) (10)

வளர்மதி முன்னேற்றக் கழகம்,

## மரண அறிவித்தல்



### விக்ரர் ஜெயக்குமார்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொய்யாத் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட விக்ரர் ஜெயக்குமார் நேற்று (22.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை - புனிதமலர் தம்பதியரின் மகனும் தவநாதன் - மேரிஸ்பிரபா தம்பதியரின் மருமகனும் தயாளினியின் (கவிதா) அன்புக் கணவரும் கனிஸ்ரா, தனிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2013) செவ்வாய்க்கிழமை மிருசுவிலில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் நீக்கிலஸ் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் பூதவுடல் அடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(38327)

## விற்பனைக்கு

TOYOTA
CARINA
15 XXXX
இல. கார்
விற்பனைக்கு
உண்டு.
தொடர்பு:-
071
8475578

# ஜோகோவிச் சம்பியன்

மொனாகோவில் நடைபெற்ற மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

மொனாகோவில் உள்ள மொன்டி-கார்லோ நகரில், ஏ.டி.பி. மாஸ்ரர்ஸ் ரென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதியில் உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச், இந்தத் தொடரில் தொடர்ந்து 8 முறை சம்பியன் பட்டம் வென்ற ஸ்பெயினின் நடாலை சந்தித்தார். இதில் ஆரம்பம் முதல் அசத்திய ஜோகோவிச், முதல் செற்றை 6:2 என சுலபமாக வென்றார்.

பின் ''டை-பிரேக்கர்' வரை நீடித்த இரண்டாவது செற்றிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச், 7:6 என தன்வசப்படுத்தினார். முடிவில், ஜோகோவிச் 6:2, 7:6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஸ்பெயினின் நடாலின் தொடர் வெற்றிக்கு ஜோகோவிச் முற்றுப்புள்ளி வைத்தார். தவிர, கடந்த ஆண்டு இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பழி தீர்த்துக் கொண்ட ஜோகோவிச், இந்தத் தொடரில் முதல் முறையாக சம்பியனானார்.



"கடந்த ஆண்டு இந்தத் தொடரின் இறுதி ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பழி தீர்த்துக் கொண்ட ஜோகோ விச், இந்தத் தொடரில் முதல் முறையாக சம்பியனானார்"

## லண்டன் மரதனில் ஸ்ரோஸ்



லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாபெரும் மரதன் ஓட்டப் போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அன்ரூ ஸ்ரோஸ் கலந்துகொண்டு போட்டித் தூரத்தை ஓடி முடித்தார். இந்த மரதன் ஓட்டப் போட்டியில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# சாதனை என்றால் அது சச்சின்தான்



தலைசிறந்த கிரிக்கெட் வீரரான சச்சின்தான் இந்தியாவின் பிரட்மன் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் மத்யூ ஹைடன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் சர்வதேசப் போட்டிகளில் சதத்தில் சதம் உட்பட எண்ணற்ற சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவரை ஆஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மேனோடு அனைவரும் ஒப்பிட்டுப் பேசுவது வழக்கம். எதிர்வரும் 24ஆம் திகதி தனது 40 ஆவது வயதை எட்டும் சச்சினை பாராட்டி ஹைடன் கூறுகையில், ''இந்திய அணிக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல தொடர்களில் வெற்றிகளை பெற்றுத் தந்துள்ளார் சச்சின். இவரைப் பற்றி பல புத்தகங்கள் மற்றும் படங்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டே உள்ளன. அவரைப் போல ஒரு வீரர் இந்தியாவுக்கு கிடைத்தது பெருமைப்பட வேண்டிய விடயம். என்னை பொறுத்தவரையில் இவர் தான் இந்தியாவின் பிரட்மன். நான் பார்த்த சிறந்த கிரிக்கெட் வீரர்களில் சச்சின் தான் முதலிடத்தில் உள்ளார். தன்னைப்பற்றிய விமர்சனங்களை பல முறை கடந்துள்ளார். அவர் ஒரு சிறந்த வீரர் என்ற உண்மையை யாராலும் மறுக்க முடியாது. ரசிகர்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் பல முறை நேரடியாக பார்த்துள்ளேன்.

கடந்த 1998 இல் ஷேன் வோர்ன் தலைமையில் உலக தரம் வாய்ந்த சுழற்பந்துவீச்சாளர்கள் இடம்பெற்றிருந்த ஆஸ்திரேலிய அணியை எளிதாக சமாளித்து சிட்னியில் நடந்த போட்டியில் இரட்டைச் சதம் அடித்தார்.

இந்திய அணியின் பொறுப்பை மிக நீண்ட காலமாக தனது தோளில் சுமந்து கொண்டுள்ளார். தவிர, கோடிக்கணக்கான இந்திய ரசிகர்களின் எதிர்பார்ப்பை சச்சின் நிறைவேற்றியுள்ளார். சச்சினை போல் இன்னொரு வீரர் எந்த அணியிலும் இடம்பெறுவார் என்பது சந்தேகம் தான் '' என்றார். (நி)


# பஞ்சாப் அசத்தல்

6 ஆவது ஐ.பி.எல். போட்டியில் நேற்று நடைபெற்ற 29வது ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியிடம் புனே வாரியர்ஸ் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

மொஹாலி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட முடிவுசெய்தது. இதன்படி புனே வாரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்கு இழப்புக்கு 185 ஓட்டங்களைக் குவித்தது.

அந்த அணி சார்பில் தொடக்க வீரர்களாக களமிறங்கிய உத்தப்பா 37 ஓட்டங்களிலும், பின்ச் அரைச்சதம் கடந்து 64 ஓட்டங்களிலும் வெளி யேறினர். பின்னர் களமிறங்கிய யுவராஜ் 34 ஓட்டங்களைப் பெற்றார். இதனையடுத்து 186 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 19.5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து அபார வெற்றியீட்டியது. இதில் வோரா 22 ஓட்டங்களைப் பெற்று வெளியேறிய போது மில்லர் - மந்தீப் சிங் இணை அணியை வெற்றி நோக்கி அழைத்து சென்றது. இதில் மில்லர் 80 ஓட்டங்களையும், மந்தீப் சிங் 77 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகன் விருது பஞ்சாப் அணி வீரர் மில்லருக்கு கிடைத்தது. (நி)





ஐ.பி.எல். அரங்கில் நேற்று இந்திய மரபு உடையணிந்து ஆடிப்பாடிய வசீம் அக்ரம்.


விசேட கருத்தரங்கு
கிராம அலுவலர் தரம் - III போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 22.04.2013 திங்கள் முதல் வெள்ளிவரை (மே-02) 3.00 - 6.00 PM
மேலதிக தொடர்பு: 077 175 3838
ஜயல் - மானிப்பாய், கிறின் ஆஸ்பத்திரி பின் வீதி.

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ். மாநகர சபைக்குட்பட்ட அமைதியான சூழலில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 713 0839
(36303)(6.11)

**கிராம சேவகர் பரீட்சைக்கான கருத்தரங்குகள்**
**யாழ் நகரில்**
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புக்கள் பிரிவில் 25,26,27,28 ஆம் திகதிகளில் காலை 9.00-4.00 மணி வரை
**கிளிநொச்சியில்**
எடிசன் கல்லூரி புதன் (24.04.2013) காலை 8.00மணி வெள்ளி (26.04.2013) காலை 9.00 மணி
**வவுனியாவில்**
CBA வைரவப்புளியங்குளம் 24ஆம் திகதி பி.ப. 2.00 மணி 29,30 திகதிகளில் காலை 9.00-4.00 மணிவரை
**மன்னாரில்**
NLH ஆஸ்பத்திரி சந்தி 25ஆம் 26ஆம் திகதிகளில் காலை 10.00 மணி-4.00 மணிவரை
**சாவகச்சேரியில்**
ஞானோதயா,
**நெல்லியடியில்**
Sigma Solution
**சித்தன்கேணியில்**
சுப்றா கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு: 075 416 4564


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.